# AN ANALYSIS

Rq : 17

of

# BISHOP BUTLER'S ANALOGY OF RELIGION

*Natural and Revealed to the constitution and course of nature.*

இயல்வேத - அருள்வேத

ஒப்புமை விளக்கப்

பொருளடக்கம்.

by the


**REV. J. DAVID,**

*Mengnanapuram.*



MADRAS:

PRINTED AT

KALARATNAKARAM PRESS,

1902.

# ஒப்புமை விளக்கம்.

## முகவுரை.

I. அநுமானப் பிரமாணம் அல்லது ஒப்புமை நியாயத்தின் தன்மை.

II. ஒப்புமை நியாயத்தால் வேதமார்க்கத்துக் கிருக்கிற உபயோகம்.

III. இந்தப் பிரபந்தத்தின் போங்கு, அருமை, பொருளடக்கம்.

I. அநுமானப் பிரமாணம் அல்லது ஒப்புமை நியாயத்தின் தன்மை.

1. இருவகைப் பிரமாணமுண்டு.

(1) பிரத்தியட்சப் பிரமாணம். அது பஞ்சேந்திரியங்களுக்கு விளங்கும் ரூபகாரப் பிரமாணமேயாம். அது உள்ளதை உள்ளதென்று உணர்த்தும். நியாய இலக்கணப்படி, சாதனம் சரியானதென்றால், சாத்தியம் சத்தியமென்றாகும்.

(2) அநுமானப் பிரமாணம். காரியத்தால் காரணத்தை அறிவிக்கிறதேயாம்.

க. அது இருவகைப்படும்.

(க) காரணாநுமானம். திருஷ். கார்மேகம் தோன்ற, மழைபெய்யும்.

(உ) காரியாநுமானம். திருஷ். கடியாரத்தைப் பார்க்கில், அதை உண்டுபண்ணினவன் ஒருவனிருக்கவேண்டும்.

உ. அதின் சாதனங்கள். அநுபோகத்தால் அறிந்த சங்கதிகளைப் பற்றியது.

ங. அநுபோகத்தின் தன்மைக்கும் அளவுக்கும் தக்க தாக மனதின் எண்ணம் பயன்படும். திருஷ். ஏற்றவற்றம்.

(3) எல்லா நியாயங்களும் ஒப்பான அல்லது 'போல' என்ற ஆதாரத்தின் பேரில் ஸ்தாபிக்கப் பட்டிருக்கிறது. இந்த ஒப்புமை, சத்தியமான ஒரு காரியத்தைப் போன்றதாயிருக்கும்.

2 அநுமானப் பிரமாணம் குறைவுள்ளதாயினும், மனுஷர்சாதாரணமாய் அநுசரிக்கத்தக்க அத்தாட்சியாயிருக்கிறது. அது அவர்கள் ஜீவியத்துக்குப் பெரும் துணை.

(1) பொதுப்பட மனிதர் விவேகத்தைக் கையாடி, அநுமானங்களைக் கவனித்து நடக்க வேண்டியவர்கள்.

க. உத்தேசத்துக்குரிய விஷயங்களில் அபிப்பிராயத்தை விளக்கவும்,

உ. செய்கைக்குரிய காரியங்களில், நாம் நடந்து கொள்ளவேண்டியதற்கு நம்மை ஏவவும் அது அவசியமாம்.

(2) விசேஷமாக, மகா முக்கிய விஷயங்களில் நமக்கு விரோதமாயிருக்கும் காரியங்களை விவேகத்தோடே கவனித்து நடக்க, அது அவசியமாம்.

(3) சாத்தியம். ஒப்புமை பிரமாணத்தின் தன்மை பலபடிகளுள்ளது. அது அநுமானத்தையும், அநுமானம் அபிப்பிராயத்தையும், அபிப்பிராயம் நிச்சயத்தையும் உண்டுபண்ணும். அதின் ஆதாரம் போல அல்லது ஒப்பான என்பதில் ஸ்தாபிக்கப் பட் டிருக்கிறது. அதின் அளவு அடிக்கடி காரியத்தைக் கவனிப்பதால் பிறக்கும்.

க. ஒப்புமை யானவைகளைக் கவனிக்கிறதினால் நம்பிக்கை எப்படி உண்டாகும் என்பதையாவது, இவ்வகை நியாயத்தோரணைக்கு நேரிடும் ஆபாசமின்னதென்பதை யாவது பட்லர் அத்தியக்ஷர் கவனிக்காமல்;

உ. அதுபலபடிகளிலும் நிச்சயத்தை உண்டுபண்ணும் என்று சாதிக்கிறார்.

## II. ஒப்புமைப் பிரமாணத்தால் வேதத்துக் கிருக்கிற உபயோகம்.

1. இந்த உபயோகத்தைப் பற்றிய உதாரணமும் நியாயமும்.

(1) நோகப் பார்க்கில், இயற்கையும் வேதமும் ஒப்புமை யுள்ளது. அவைகள், அவைகளின் கர்த்தாவுக் கடுத்த விஷயத்தில் ஒன்றுக் கொன்று ஒப்புமை யாயிருக்கிறது.

க. இயற்கையில் புத்திக் கெட்டாத பொருளிருக்கிறது போலவே, வேதத்திலு முண்டு.

உ. புத்திக்கெட்டாத பொருளினிமித்தம் வேதாகம ஆக்கியோனைத் தள்ளுகிறதா யிருந்தால், அது முகாந்தரமாகவே, இயற்கைக்குக் காரணரையும் நீக்கிவிடவேண்டியதாகுமே.

ங. வேதத்திலுள்ள மலைவுகள் இயற்கையில் காணப் படும் மலைவுகளுக்கு ஒப்புமையா யிருப்பதால், இயற்கைக்கும் வேதத்துக்கும் ஒரேகர்த்தா இரு க்கலாம் என்று அநுமானிக்கலாம்.

ச. இயற்கைக்குக் காரணர் ஒருவர் உண்டென்கில், இந்த நியாயமானது வேதத்துக்கும் இயற்கைக்கு முள்ள ஒப்புமையால் பலப்படுகிறது. எப்படி யும் அது, சமமாயுள்ள இப்பேர்ப்பட்ட மலைவுக ளால் வேதாகம ஆக்கியோனுக்கு விரோதமாய்ச் சொல்லப்படும் ஆட்சேபனைகளை நிராகரிப்ப தற்கு உதவுகிறதா யிருக்கிறது.

(2) விபட்சமாக, அபல நியாயங்களை எதிராக வைத்துப் பார்க்கில் ;

க. அபல நியாயமானது,

(க) மனஉத்தேசங்களை உள்ளதாக எண்ணுவதா லும்.

(உ) கண்ணால் கண்ட காரியங்களின்பேரில் பொதுமான நியாயங்களை எடுத்துக்கூறி, தெரிந்ததைத் தெரியாததோடே சம்பந்தப் படுத்துவதாலும் உண்டாகிறது.

உ. உத்தம நியாயமானது.

(க) கருத்துப்பொருளை உள்ள காரியங்களோடு ஒப்பிட்டு, நியாயங்களை வருவிப்பதாலும்.

(உ) அப்படிபிறந்த நியாயங்களைச் சமமான காரியங்களோடே உபயோகப்படுத்திப் பார்ப்பதாலும் உண்டாகும் திருஷ்டி. இவ்வுலகத்தை ஆராய்வதா லுண்டாகும் காரியங்களும் நியாயங்களும் மறுமையைப்பற்றி ஆராய்வதற்கு உபயோகப்படும்.

2. இந்தப் பிரபந்தத்தைப்பற்றிய முக்கியமான நியாயம்.

(1) அநுமானப் பிரமாணம் சாதனைக் குரியதால், சாத்தியம்பலவிதமாய் முடியும். ஒரிஜன் என்பவர் அதை அப்படியே உபயோகிக்கிறார். பட்லர் அத்தியக்ஷர் இயற்கைக்குப் பேரறிவுள்ள காரணர் ஒருவர் உண்டு என்று வைத்துக்கொண்டு, அந்த இயல் அருள் வேதவிஷயத்துக்கு உபயோகித்திருக்கிறார். (இதற்கு விரோதமான அத்தாட்சியில்லை; அதற்கு அநுகூலமான அத்தாட்சிகளோ திரளா யுண்டு).

(2) இந்தப் பிரபந்தத்தில் காட்டிய நியாயங்களை, மற்ற வகையான் நியாயங்களுக்கு எதிராக வைத்துப் பார்த்தால், அது சரியென விளங்கும்.

க. சிலர், உலகம் என்னவகையாய் அமைக்கப்பட்டிருக்கிறதென்று விசாரிப்பதற்குப் பதிலாகத், திவ்விய ஆளுகையைப்பற்றி மனோரதியம் செய்து, உலகம் இன்னவகையாய் அமைக்கப்பட்டிருக்குமானால், அதிகப் பிரயோசனமா யிருக்குமென்பார்கள்.

௨. அப்படிப்பட்ட சீர்திருத்தமான மனோரதியத்துக்குத் திருஷ்டாந்தம்.

(க) சிறந்த பாக்கியத்தை அல்லது நல்வினையை அல்லது இரண்டையும் கொடுப்பதே முதந்தரமான உலகமாயிருக்கும் என்றும்;

(உ) அப்படிப்பட்ட உலகத்திலே துவக்கமுதலே, மனிதரைப் பாக்கியசாலிகளும் நல்லவர்களுமா யிருக்கும்படி உண்டுபண்ணி, அந்நிலைமையிலே அவர்களைக் காத்துக்கொள்ளவும் வேண்டும் என்றும் சொல்வார்கள்.

a. மனிதரை அக்கம்பக்கம் விலகும் தன்மைக்கு நீக்கிக் காப்பதாலும், (இப்படிச் செய்கையில், அவர்கள் புத்தியையும் சுயாதீன சித்தத்தையும் அவர்களைவிட்டு விலக்குவதாகும்.)

b. சர்வ வல்லமையால் சனங்கள் சன்மார்க்கரா யிருக்கும்படி கட்டாயம் பண்ணுவதாலும், (இதால் நல்வினையை அழிக்கிறதா யிருக்கும்.)

c. எல்லா அபாயங்களையும் சிட்சைகளையும், சிட்சையைப்பற்றிய பயத்தையும் முழுவதுமாய் அழிப்பதாலும், மனிதரை உலகத்தில் வைத்து நடத்தலாம் என்பார்கள்.

௩. இந்த மனோபாவனைகளைப் பற்றித் தீரவிசாரித்துப் பார்ப்போம்.

(க) சிறந்த உலகத்தைப்பற்றிய எண்ணம் ஒப்புக்கொள்ளக் கூடியதென்று வைத்துக்கொள்ளுவோம்.

(உ) அப்படி யிருந்தபோதிலும், அவ்வுலகத்தைச் சிறந்ததாக்கிக் கொள்ளுகிற வகையைக்குறி

த்து நிதானிப்பது, நம்முடைய திராணிக்கு மிஞ்சினதா யிருக்கிறது.

*a*. இவ்வுலகம் முழுமைக்கும் ஏற்றதாய் நல்வினைக்கும் பாக்கியத்துக்கும் ஏதுவாக, எவ்வகை ஒழுங்கு க்ஷேமம் என்பதைச் சொல்லவும்;

*b*. இவ்வுலகத்திலுள்ள ஒரு மனிதனுடைய க்ஷேமத்தை மாத்திரம் வருவிப்பதற்கு, எது நல்ல ஒழுங்குஎன்று காட்டவும்;

*c*. இச் சீவகாலத்துக்குரிய விஷயத்தில் முதலாய், அவனுக்கு எது நல்ல ஒழுங்கு என்பதை நிதானிக்கவும் சக்தியற்றவர்களா யிருக்கிறோம்.

ச. மேற்சொல்லப்பட்ட காரியங்களால் நாம் கற்றுக் கொள்ளும் சித்தாந்தம்.

(க) நம்முடைய இயல்பைப் பார்க்கில், கடவுள் நீதிபரர் என்றும்;

(உ) கடைசியாக, நல்வினை பாக்கியத்தைத் தரும் என்றும், தீவினை நிர்ப்பாக்கியத்தைக் கொடுக்கும் என்றும் அறியலாம்.

(ந) அதற்கிடையில் இது எப்படி நிறைவேறும் என்பதைப்பற்றி நாம் நிதானிக்கக் கூடாதவர்களா யிருக்கிறோம்.

## III. இந்தப்பிரபந்தத்தின் போங்கு, அருமை, பொருளடக்கம்.

### 1. அதின்போங்கு.

(1) நாம் உட்பட்டிருக்கும் இயற்கைப் பிரமாணங்கள் இப்படிப்பட்டதென்று அநுபோகத்தால் அறியவும்;

(2) நாம் உட்பட்டிருக்கிறோம் என்று வேதமார்க்கம் போதிக்கிற பிரமாணங்களோடே இயற்கைப் பிரமாணங்களை ஒப்பிட்டுப் பார்க்கவும்;

(3) பயனில், இருவகைப் பிரமாணங்களும் ஒன்றுக்கொன்று இசைவாயிருக்கிறதென்று காட்டவுமே.

2 அருமை.

(1) இயல் வேதத்தையும் அருள் வேதத்தையும் நியாயமில்லாமல் நிந்திக்கக்கூடாது. அப்படி அருளை நிந்திக்கில், இயற்கையையும் நிந்திக்க வேண்டியதாய் வரும்.

(2) வேத மார்க்கத்துக்கு விரோதமாய்ச் சொல்லப்படும் ஏறக்குறைய எல்லா ஆட்சேபனைகளுக்கும் அது உத்தரவைக் கொடுக்கும்.

(3) வேதமார்க்கத்தின் உதாரணங்களுக்கு விரோதமாய்ச் சொல்லப்படும் ஆட்சேபனைகளுக்கும் ஒருவாறு உத்தரவு கொடுக்கும்.

3. இப்பிரபந்தத்தில் அடங்கியபொருள். அது இரண்டு பங்காய்ப் பிரிக்கப் பட்டிருக்கிறது.

(1) முதல் பங்கில், வேதமுறைமையை நிலைநிறுத்தி, அதற்கு விரோதமாய்ச் சொல்லப்படும் ஆட்சேபனைகள், இயல்முறைமைக்கு மாறாகக் கூறப்படும் ஆட்சேபனைகளுக்கு ஒத்திருக்கிறதென்று காட்டியிருக்கிறது. இவை ஏழு அதிகாரங்களில் விளக்கியிருக்கிறது.

(2) இரண்டாம் பங்கில், அருள்வேத முறைமையை நிலைநிறுத்தி, அதற்கு விரோதமாய்ச் சொல்லப்படும் ஆட்சேபனை இயற்கைக்கும் இயல் வேதத்துக்கும் விரோதமாய் உரைக்கப்படும் ஆட்சேபனைகளுக்கு ஒப்புமையாயிருக்கிறதென்று காட்டியிருக்கிறது. இதைப்பற்றிய நியாயங்களை எட்டு அதிகாரங்களில் ரூபித்திருக்கிறது.

# முதலாம் பங்கு.

## 1. அதிகாரம்.

### மறுமைக்குரியஜீவன்.

முதலாவது. மறுமைக்குரிய ஜீவனுண்டென்று நம்புவதற்குப் பிரத்தியட்சப் பிரமாணம் அநுகூலமா யிருக்கிறது.

இரண்டாவது. அந்த நம்பிக்கைக்கு விரோதமான மனோபாவனை சாதனையானது நொய்மை யுள்ளது.

மூன்றாவது. மறுமைக்குரிய ஜீவனின் நூதன நிலைமை.

முதலாவது. மறுமைக்குரிய ஜீவனுண்டென்று நம்புவதற்குப் பிரத்தியக்ஷப் பிரமாணம் அநுகூலமாயிருக்கிறது.

I. அதை உபமான சம்பந்தத்தால் அறியலாம்.

1. அநுபவத்தினால், மனிதர் உலகத்தில் பிறக்கும் முன்னும் பின்னும் பற்பல மாறுதல்களின் வழியாய்க் காலம் செல்லச்செல்ல பூரண புருஷத்துவம் அடைவதைப் பார்க்கையிலும்;

2. மற்ற ஜீவ செந்துக்களும் பலமாறுதல்களின் வழியாய்ப் பக்குவப் படுவதைப் பார்க்கையிலும் அறியலாம். திருஷ், புழுக்கள், பறக்கும் பூச்சிகளாகின்றன. பட்சிகள் முட்டையிலிருந்து பிறந்து, ஆகாயத்தில் பறக்கின்றன.

II. தொடர்ச்சி முறையான நியாயத்தைப் பார்க்கில் அறியலாம்.

1. இந்த நியாயத்தின் தன்மை, உலகம் இருந்து வருகிறதும் அது இருந்த வகையும், அது இன்னும் இருக்கும் என்பதற்கு முகாந்தரமாய்ச் சொல்லலாம்.

2. இந்த நியாய உபயோகம்.

(1) ஜீவதத்துவங்கள் மரணபரியந்தம் இருப்பதே, அவைகள் மரணத்துக் கப்பாலும் இருக்கும் என்பதற்கு முகாந்தரம் எனச் சொல்லலாம்.

(2) மரணமானது ஜீவதத்துவங்களை அழிக்கக் கூடாதென்றால், அவைகள் மரணத்துக் கப்பாலும் இருக்கும் என்று நிச்சயிக்கலாம்.

(3) இந்தத்தத்துவங்களை மரணமானது அழிக்கும் என்பதற்குத் தெளிவான அத்தாட்சியில்லை. எப்படியெனில்;

க. மரணத்தின் தன்மையைப் பார்க்கையில்;

(க) மரணம் இன்னதென்று நமக்குத் தெரியாது அது நமது அநுபவத்துக் குட்படாத காரியம். அதன்சில பயன்களை மாத்திரம் அறிவோம்.

(உ) ஜீவதத்துவங்கள் எதிலே இருக்கிறதென்பதையும் அறியோம்.

உ. இயலிலும் அதற்கு உதாரணமில்லை.

(க) ஜீவதத்துவங்கள் மரணத்துக்கப்பால் எப்படியிருக்கும் என்பதை நாம் அறியக்கூடாதவர்களா யிருக்கிறோம். ஜீவ தத்துவங்களின் இந்திரியக் கருவிகளை மாத்திரம் இழந்து விடுகிறோம்.

(உ) ஜீவ தத்துவங்கள் பெரிய மாறுதலுக்குள்ளாகி, மரணபரியந்தம் இருப்பதைப் பார்க்கில், அவைகள் மரணத்துக் கப்பாலும் இருக்கக் கூடியதென்று சொல்லலாம்.

இரண்டாவது. மறுமைக்குரிய ஜீவனுண்டென்கிற நம்பிக்கைக்கு விரோதமான மனோபாவனை சாதனை யானது நொய்மை யுள்ளது.

I. மரணமானது ஜீவதத்துவங்களை அழிக்காது என்று அநுமானத்தினால் முன்காட்டியிருக்கிறோம்.

1. ஜீவ தத்துவமாகிய ஆத்துமாவானது, தனியேகசித்துப் பொருளானது.

(1) பகுக்கக்கூடிய எல்லாப் பொருட்களும் செயற்கை பொருள்களா யிருக்கின்றன, ஜீவாத்துமா செயற்கைபொருள் அல்ல; ஆகவே, அது பகாப்பொருள், தத்துவஞானத்தின்படி, அறிவானது பகாப்பொருள் எனவாகும். ஆகவே, அதின் சக்தியும் அந்தச் சக்தியின்பொருளும், அதாவது ஜீவாத்துமாவும் பகாப்பொருளாயிருக்க வேண்டியது.

(2) அதால் பிறக்கும் அநுமேயம்.

க. நம்முடைய ஸ்தூல் சரீரமானது ஜீவாத்துமாவல்ல.

உ. ஜீவாத்துமாவானது சரீரத்தோடே சம்பந்தப்பட்டு ஏகமாகவும், சரீரத்தோடே சம்பந்தப்படாமல் பிரத்தியேகமாகவும் இருக்கக்கூடியது.

ந. சரீரத்துக்குரிய இந்திரியங்களும் புறத்துறுப்புகளும் அழிந்து போனாலும், ஜீவாத்துமாவுக்குரிய தத்துவங்களும் அகத்துறுப்புகளும் அழியாது.

2 இந்த அநுமேயத்தை நீங்கவைத்துப் பார்த்தாலும், நியாயம் பெலவீனப்படாது. எப்படியெனில் ஜீவாத்துமாவான மனுஷன் சத்துப்பொருள் சம்பந்த வஸ்துவாய் மாத்திரமிருந்தாலும் சத்துப்பொருள் எல்லாம் அணுத்திரளின் கூட்டமாயிருக்கிற படியால், அணுக்கள் விகாரப்பட்டாலும் முற்றிலும் சூனியமாகப்போகும் என்று சொல்லக்கூடாது. ஆகவே ஜீவாத்துமா நிர்மூல மாகாது.

(1) பொதுப்படப் பார்த்தால், அநுபோகத்தினாலே ஜீவாத்துமாவானது சடக்கருவி யல்லவென்று அறிகிறோம்.

க. மனிதர் கைகால்களை இழந்துபோனாலும், ஜீவாத்துமாவானது இருந்தமட்டிலே இருக்கிறது.

உ. மனிதர் நாளுக்குநாள் ஓயாமல் பலமாறுதலுக்கும் விகாரத்துக்கு முட்பட்டாலும், ஜீவாத்துமா அம்மட்டிலே இருக்கிறது.

(2) திட்டமாய்ப் பார்த்தால், பின்வருகிற குறிப்புகளும் அதேசாத்தியத்தைக் காட்டுகின்றன.

க. ஜீவாத்துமாவானது சடப்பொருள் என்று வைத்துக்கொண்டாலும், அது அழிக்கப்படக்கூடாத இயற்கை அணுவைப்பார்க்கிலும் பெரிதாயிருக்கிறதென்று ருசுப்படுத்தக கூடாததா யிருக்கிறது.

உ. நாம் அடைந்திருக்கிற பெருமாறுதல்களைக் கவனிக்கையில், நாம் இன்னொரு ஜீவியத்தில் ஐக்கிய சம்பந்தமா யிருப்போம் என்று காட்டுகிறது.

(க) மரணமானது சடிதியான மாறுதலாயிருந்தாலும், நாம் இதற்கு முன்னடைந்திருக்கிற மாறுதலைப்போலுள்ள இயல்பான மாறுதலா யிருக்கலாம்.

(2) நமக்கும் ஐம்புலன்களுக்கும் இருக்கிற சம்பந்தமானது, விதத்தில் ஒன்றுபோ லிருந்தாலும், அளவில் வித்தியாசமா யிருக்கலாம்.

3. சரீரமானது ஸ்பரிசக்கருவிகளால் அமைக்கப் பட்டிருக்கிறது.

(1) கண்ணுடி முதலிய புறம்பான கருவிகளை உபயோகிக்கிறவிதமாய் (அளவிலல்ல) ஸ்பரிசக் கருவிகளும் நமக்குச் சம்பந்தப் பட்டிருக்கின்றன.

(2) கருவிகள் அழிந்துபோனாலும், அவைகளை உபயோகித்தசக்தி இயல்பாகவே யிருக்கிறது.

(3) கனவு, மூர்ச்சை முதலியவற்றில் இந்திரியங்கள் அடங்கியிருக்க, ஜீவாத்துமாவானது தன்தொழிலை நடப்பிக்கிறதைப் பார்க்கையில் அது அழியாதது வென்று காட்டுகிறது.

ஆட்சேபனை.

மேற்கூறிய நியாயங்களினால் மிருகங்களும் மனிதனைப் போல சாகா ஜீவாத்துமாக்களாய் மறுமைக்கும் சம்பந்தப்பட்டவைகள் என்று சொல்லும்படி நேரிடுமே.

உத்தரவு.

1. அப்படி யிருக்கிறதென்று வைத்துக்கொள்வோம். அவைகளின் விஷயத்தில் நடக்கக்கூடிய மாறுதலகளும், அவைகளுக்கு உண்டாகக்கூடிய தத்துவங்களும் நமக்குத்தெரியாது. அதினாலென்ன? குழந்தைகள் இருகக இருக்கப் பகுத்தறி வுள்ளவர்களாகிப் பக்குவப்படுவார்கள் என்பதை அது போகததுக்குமுன், யார் அறிவார்.

2. மனுஷன் மறுமையிலிருப்பான் என்பதற்கு அவனுக்கிருககிற பகுத்தறிவும், விவேகமும், அறநெறியும், தர்மகுணமும் ஆதாரம். மிருகங்களுக்கோ இந்த இலடசணங்களில்லை.

3. ஆகிலும் பகுத்தறிவில்லாத மிருகங்கள் இம்மையில் நம்மோ டிருப்பதுபோலவே, மறுமையிலும் அவைகள் அப்படியே கூடவே இருக்கவேண்டும் என்பது தேவசித்தமா யிருக்கலாம். அதைப்பற்றி நமக்கு ஒன்றும் தெரியாதென்றே சொல்லவேண்டும்.

II. மரணமானது நம்முடைய நிகழ் அந்தக்கரணமாகிய அகத்துறப்புகளை நிர்மூல மாககாது.

I. மனுஷனுக்கு இரண்டு நிலைமைகளுண்டு. ஐம்புலன்களின் வழியாய் அறிவைச் சம்பாதிக்கும் நிலைமை ஒன்று. ஐம்புலன்கள் அடங்கியிருக்க, சம்பாதிக்கப்பட்ட அறிவை ஆத்தும அவதானமாகிய தியானத்தினால் பயன்படுத்துகிற நிலைமை ஒன்று.

2 வீடுகட்டுவதற்குப் பலவித கருவிகளும் சாரங்களும் வேண்டுவதுபோல,ஜீவாத்துமாவானது அறிவில் தேறும்

படி புறத்துறுப்புகளாகிய இந்திரியம் முதலியவை வேண்டியது.

3. ஜீவாத்துமாவானது அறிவில் தேர்ந்து பக்குவப்படும்போது அகததுறுப்புகள் போதும். மரணத்தால் ஸ்தூல சரீரம் அழிந்துபோனலும், சூக்ஷ்ம சரீரம் தனித்து முயற்சி செய்யும்.

4. மரணத்துக்கேதுவான சில கொடிய வியாதிகளில் மரண பரியந்தம் அந்தககரணங்கள் சிதைவுபட்டு அழிந்து போகாம லிருக்கிறபடியால, தேகம் அழியும்போது, தேகி அழியா திருககிறதென விளங்கும்.

5 ஜீவாத்துமாவின் ஸ்தானம் இன்ன இடமென்று திட்டமாய்ச் சொல்லக்கூடாது. மூளையிலும் இருதயத்திலும் வியாதி யுண்டாகி ஒருவாறு பழுதுபடுததினலும், ஜீவாத்துமா பழுதுபடாம லிருப்பதைப்பார்க்கிறோம். ஆகவே, தேகம் அழியும்போது, தேகிககு அவஸ்தை யுண்டானலும், அழிவுண்டாகாது.

III. மரணமானது ஜீவசக்திகளை அகத்தியமாய் நீக்கிவைக்கிற தில்லை.

1 அபபடி நீக்கிவைப்பதும் மரணத்தின் தொழிலாகத் தோன்றுகிறதில்லை. மரணத்தின் தொழில சரீரத்தை அழியச்செய்கிறது.

2. அசாத்தியமான வியாதிகளிலும, மனதுககுரிய நினைவு ஞாபகம் முதலிய சக்திகள் மரணநேரததிலும் விகாரப்படாதிருக்கக காண்கிறோம்.

3 மரணமானது பிறப்புக் கொப்பாயிருக்கலாம். அது நமது ஜீவனையும் சக்தியையும் மாறுதலுக் குள்ளான நிலைமையில் தொடர்ந்தேர்ச்சியாய் இருக்கச் செயயலாம்.

4. தற்காலத்தில் நமக்கு அவசியமா யிருக்கிற ஸ்தூல் சரீரமானது, நாம் மேலான வகையாய் ஜீவித்திருப்பதற்குத் தடையா யிருக்கலாம். ஆதலால் மரணமானது, அநத ஸ்தூல் சரீரத்தை அழிததுப்போடுகிறது.

ஆட்சேபனை.

தாவர வர்க்கங்கள் அநேக விஷயங்களில் மனுஷருக்கு ஒப்பாயிருப்பதினாலே அவைகள் அழிந்துபோவதுபோலவே, மனுஷரும் அழிந்து போகலாமே.

உத்தரவு.

நரஜீவ வாழ்வைப் புல்பூண்டு புஷ்பங்களுக்குக் கவிஞர்கள் உபமானித்துச் சொல்லியிருப்பது மெய். ஆனால் அவைகள் அசைவும் அறிவும் நினைவு மில்லாதவைகள். ஜீவாத்துமாவுககு இந்த இலட்சணங்களுண்டு. ஆதலால் இரண்டும் ஒன்றுக் கொன்று சம்பந்தப்பட்டதல்ல; அவைகளை உபமானித்து நியாயஞ் சொலவது ஒத்துவராது. புல்பூண்டுகள் போல தேகம் அழிந்துபோனாலும் ஆத்துமாவாகிய சித்துப்பொருள் அழிந்துபோகும் என்று இந்த ஒப்புமை நியாயததால் விளக்குவது துல்லபம்.

மூன்றாவது. மறுமைக்குரிய ஜீவனின் நூதனநிலைமை எப்படிப்பட்டதா யிருக்கலாம்.

I. அந்த ஜீவன் இயல்பானதா யிருக்கலாம்.

1. நூதன ஜீவனில் பிரவேசிக்கும் வகையில் இயல்பாயிருக்கலாம்.

1 அது சனசங்கமுள்ளதா யிருக்கலாம்.

3 அது பாக்கியம் நிர்ப்பாக்கியம் அனுபவிக்கும் நிலைமையாயிருக்கும்.

4. அது நீதிவழுவாத கடவுள், நேருக்கு நேரே ஏற்படுத்தும் நிலைமையா யிருக்கலாம்.

II. பேரறிவுள்ளவரால் ஏற்படுத்தப்பட்டதற்கு இயல்புஎனப் பெயர்.

1. இயலைப்பற்றி நமக்கு இருக்கிற எண்ணமானது, நமது அறிவின் அளவுக்குத்தக்கதா இருக்கும்.

2. கிறிஸ்துமார்க்க மானது நமக்கு அற்புதமா யிருந்தாலும், மற்றும சில சிருஷ்டிகளுக்கு இயல்பா யிருக்கலாம்.

சாத்தியம்.

1. மறுமையைப்பற்றி நாம் அறிந்துகொள்ள வேண்டியவைகளை இம்மையில் பூரணமாய் அறிந்துகொள்ளக்கூடாததாகையால், மேற்காட்டிய நியாயங்களினுல் நாம் அறிந்துகொள்ளக் கூடியதுமட்டும் அறிந்து கொள்ளலாம்.

2. வேத சத்தியத்தையும், தேவனுண்டென்கிற சத்தியத்தையும் நீங்கலாக வைத்துப் பார்த்தாலும், மறுமைக்குரிய ஜீவனுண்டென்பதைப் பற்றி மேற்காட்டிய நியாயம் பலிதமாகும்.

3. மறுமைக்குரிய ஜீவனுண்டென்று நம்புவது, தேவபக்தி உண்டாவதற்கு அவசியமாகையால், அதற்கு விரோதமாய்ச் சொல்லப்படும் ஆட்சேபனை எந்தப் பக்தி மார்க்கத்துக்கும் விரோதமாய்ச் சொல்லப்பட்ட சாதனையென்றறியவேண்டும்.

---

## 2. அதிகாரம்.

நல்வினைக்குப் பலனையும், தீவினைக்குத் தண்டனையையும் அளித்து உலகத்தைக் கண்டிப்பாய் ஆண்டுநடத்தும் கடவுளுடைய இயல்பான ஆளுகை.

இம்மையில் நாம் செய்யும் நன்மை தீமைக்குத் தக்கதாய் மறுமையில் இன்பதுன்ப மடைவோம். ஆகையால், இதை மகா முக்கியமாய் யோசிக்கவேண்டியது. நாம் பொதுவான ஆளுகைக் குட்பட்டிருக்கிறது மாத்திரமல்ல, சிட்சை இரட்சையைக் கொடுக்கிற ஆளுகைக்கும் உட்பட்டிருக்கிறோம். இந்த அதிகாரத்தின் நோக்கம், இயலிலே நாம அநுபோகத்தில் பார்க்கிறபடி தேவன் கொடுக்கிற சிட்சை இரட்சையானது, வேதமார்க்கத்தில் இனிமேல் கொடுக்கப்படும் என்று தெரியப்படுத்தி யிருக்கிற சிட்சை இரட்சைக்கு ஒப்பா யிருக்கிறதென்று காட்டவே. அஃதாவது நமது நிகழ் நிலைமைக்கும் இயலின் காரணருக்கும் இருக்கிற சம்பந்த மானது வேதமார்க்கத்தில் காட்டப்பட்டிருக்

கிற நமது பிந்தியகால நிலைமைக்கும் கடவுளுக்கும் இருக்கும் சம்பந்தத்துக்கு ஒப்பா யிருக்கிறது.

முதலாவது. இந்த உபமானத்தைப் பொதுப்படபார்ப்போம்.

இரண்டாவது. இந்த உபமானத்தை விசேஷித்துப் பார்ப்போம்.

மூன்றாவது. தண்டனையைப்பற்றி நாம் கவனிக்க வேண்டிய குறிப்புகள்.

I. இந்தஉபமானத்தைப் பொதுப்பட பார்ப்போம்.

1. நமக்குண்டாகும் இன்பதுன்பங்களுக்கு நமது நடக்கையேகாரணமா யிருக்கிறது; அதாவது, கடவுள் அவைகளை நமது நடக்கையின் பயனாக அளிக்கிறார். இதை நாம் ஏற்கெனவே அறிந்து யிருக்கிறோம்.

திருஷ்டாந்தம்.

(1) நாம் கவலையினால் ஜீவனைப் பாதுகாக்கிறோம்

(2) உலக நன்மைகளை முயற்சியினாலே சம்பாதிக்கிறோம்.

(3) இன்ப துன்பங்கள் நமது விவேகம் அவிவேகத்தின் பலனா யிருக்கிறது.

ஆட்சேபனை.

மனுஷர் தீவினைகளைச் செய்யவும், துக்கங்களை அநுபவிக்கவும் கடவுள் ஏன் இடங்கொடுக்கிறார்? அவர் மனிதருககுச் சும்மா சந்தோஷத்தைக் கொடுக்கலாமே; அது நலமல்லவா? என்று சிலர் சொல்லலாம்.

உத்தரவு.

1 அதற்குப் பற்பல உத்தேசவிடைகளைச் சொல்லலாம்.

(1) அப்படிச்செய்வது கூடாததா யிருக்கலாம்.

(2) இப்போதிருக்கிற முறைமை, மற்றெதையும்விட அதிகப்பாக்கிய முள்ளதா யிருக்கலாம்.

(3) ஒருவேளை எல்லாருக்குமல்ல, நல்லவர்களுக்கு மாத்திரம் பாக்கியத்தை அருளுவது முதல் இலட்சணமா யிருக்கலாம்.

(4) ஒருவேளை நன்மை தீமையை அறிகிறவர்களின் நல் நடக்கையே கடவுளுக்கு அதிகப் பிரீதியாயும், உலகத்துக்கு அதிகப் பிரயோசனமாயு மிருக்கலாம்.

(5) தேவாளுகையின் முறைமையும் நோக்கமும் நம்முடைய புத்திக் கெட்டாதது. குருடனுக்கு வன்னம் விளங்குமா?

2. இன்பதுன்பங்கள் நம்முடைய செய்கைகளின் பலனாயிருக்கும்படி கடவுள் அமைத்திருக்கிறார்.

ஆட்சேபனை.

நல்வினை தீவினைகளால் உண்டாகிற சுகதுக்கங்கள் உலக இயலுக்குரியது, அது கடவுளின்செயலல்லவேஎன்று சிலர் சொல்லலாம்.

உத்தரவு.

(1) அது சரிதான், ஆனால் இயல் என்பது உணர்வற்ற அசித்துப் பொருளாகிய காரியத்தையல்ல, அதற்குக் காரணராகிய கடவுளைக் குறிக்கும்.

(2) இயல்முறைமை என்று நாம் சொல்வது, அந்த முறைமைக்குக் காரணருடைய செயலைக் குறிக்கும்.

(3) இதை அறிந்துகொள்ளும் அறிவைக், கடவுள் நமக்குத் தந்திருக்கிறார். அந்த அறிவு நமக்கு எச்சரிப்பாகவும், ஏவலாகவும் கொடுக்கப்பட்டிருக்கிறதென்று எண்ணி நடக்கவேண்டும்.

ஆட்சேபனை.

நமக்குரிய ஆசாபாசங்களை யெல்லாம் நிறைவேற்றுகிறதினால் இயல்பாய் இன்ப முண்டாகிறபடியால், அந்த இன்பத்தின் பொருட்டு, நமது ஆசாபாசங்களை யெல்லாம் நிறைவேற்றுவது தகுதி என்றும், அப்படி நிறைவேற்றுவது அச்செயலுக் குரிய பலன் என்றும் சொல்லலாமே.

உத்தரவு.

அப்படிச் சொல்லக்கூடாது. திருஷ். கண், பார்வைக்காக உண்டாக்கப்பட்டிருக்கிறது. சூரிய வெளிச்சத்தினால் நாம் பார்க்கிறோம். நாம் அந்தச்சூரியனை நடுமதியத்தில் உற்றுப்பார்த்தால் கண்கெட்டுப் போம்.

3. நன்மை தீமைக்குத் தக்கதாக இன்பதுன்பங்கள் உண்டென்கிற உணர்வு நமக்கு இருப்பதால், நாம்கடவுளுடைய ஆளுகைக்கும் ஆக்கினைக்கும் உட்பட்டிருக்கிறோம் என்றும், அவர் நன்மை தீமைக்குத் தக்கபடி பலன் அளிப்பார் என்றும் அறிந்து கொள்ளுகிறோம்.

(1) நல்வினை தீவினைக்குரிய பலனையும் தண்டனையையும் கடவுள் தாமே, நேராய் உடனே நிறைவேற்றுவது அவசியமில்லை. அவர் ஏற்படுத்திய சட்டங்களே, அவைகளை நிறைவேற்றிக் கொள்ளும்.

(2) நல்வினை தீவினைக்குப் பலனாகவரும் அற்ப இன்பங்களும் அற்பநோய்களும், சரியான ஆளுகையை விளக்கும் குறிப்புகளுக்குத் திருஷ்டாந்தமாம்.

2. வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிற மறுமைக்குரிய சிட்சை இரட்சையானது, தற்காலத்தில் நம்முடைய அநுபோகத்தில் காணப்படும் சிட்சை இரட்சைகளுக்கு ஒப்பாயிருப்பதால், அது மெய்யாயிருக்கும்.

II. நாம் தண்டனையைச் செலுத்தும் ஆளுகைக்குட் பட்டிருக்கிறோம்; அப்படியே மறுமையிலும் இருக்கலாம்.

1 இயற்கை தண்டனையைப் பற்றி, நமது தற்கால அநுபோகத்தில் காணப்படும் சில விசேஷித்த குறிப்புகளைப் பார்ப்போம்.

(1) தற்காலத்தில் ஆசாபாசங்களினாலே நாம் அநுபவிக்கும் இன்பத்தின் பயனாக துன்பம்வரும். திருஷ். குடிவெறி அகாலமரணத்தை பிறப்பிப்பதுண்டு.

(2) நாம் தற்காலத்தில் அநுபவிக்கும் இன்பத்தைவிட பிங்கிவரும் துன்பம் கொடுமையாயிருக்கும்.

(3) தண்டனைகள் வரப்பிந்தினுலும், அவைதப்பாமல் வரவேவரும்.

(4) தண்டனைகள் படிப்படியாய் நேரிடாமல் சடுதியாய் நேரிடுவது முண்டு.

(5) தீவினைகளை நடப்பிக்கையில் தண்டனைவரும் என்று எதிர்நோக்காதிருப்பதுண்டு.

(6) துற்குணத்துக்கு ஒருமட்டுண்டு. அது மிஞ்சினுல், மனமாறிக் குணப்பட்டுச் சீரடைவது, கூடாத காரியமாய்ப்போம்.

(7) தண்டனைகள் பெருங்குற்றங்களைச் செயவதற்காகவருவதுடன், நலவிஷயங்களில் அஜாக்கிரதையையும், கவனத்தாழ்ச்சியையும் காட்டுவதினுலும் வரும்.

(8) சிலதருணங்களில் தண்டனைகள் வந்தால், மாற்றப்படக் கூடாதவண்ணமாய் வந்து லபிக்கும்.

2. இவ்வித குறிப்புகள் நாடோறும் நடந்துவருவதை நாம் வழக்கமாய்ப் பார்த்துவருகிறேும்.

(1) தண்டனைகள் ஏகதேசமாயும் அபூர்வமாயுமசம்பவிக்கிற வைகளாயிராமல், நமது கண்முன் நடக்கும் காரியமாயிருக்கிறது.

(2) இம்மையும் மறுமையும் ஒப்பாயிருப்பதால், மறுமையில் பாவிகளுக்குண்டாகும் தண்டனையைப் பற்றி வேதம் சொல்வதை ஒப்புக்கொள்ளவேண்டியதாயிருக்கிறது. நீதி. 1. அதி.

III. தண்டனைகளைப்பற்றி நாம் கவனிக்கவேண்டிய குறிப்புகள்.

1. இம்மையில் செலுத்தப்படும் தண்டனையின் பூரண அளவைப்பற்றி இந்த அதிகாரத்தில் வற்புறுத்திச் சொல்லாமல், பிரதி பலன் அளிக்கப்படுகிறதென்பதை மாத்திரம் காட்டியிருக்கிறது.

2. இது போதுமானதாயிருக்கிறது. எவைகளுக்கென்றல்,

(1) இயற்கைப் பிரமாணம் என்னசெய்யக் கூடியதென்ப தைக்காட்ட போதுமானது. திருஷ். மனமறி யபாவஞ் செய்யும் பாதகருக்கு இம்மையில்சுகம் கிடையாது.

(2) மறுமைத் தண்டனையைப் பற்றிச் சொல்லப்படும் ஆட் சேபனைகளுக்கு உத்தரவு சொல்லப்போதுமா னது.

க. மனிதர் பெலவீனர், தவறுதலுக் கேதுவானவர்கள்;

உ. அவர்கள் விதியினால் ஆளப்படுகிறார்கள்; ஆகவே அவர்களைத்தணடிப்பது நியாயமல்ல என்ற ஆட் சேபனைகளுக்குப் போந்த உத்தரவை அருளு கிறது.

ந. தேவ லட்சணங்களைப் பார்க்கில்.

(க) அவரது அளவற்ற சித்தத்தை என்றும் எதிர்க்க ஏலாது.

(உ) தண்டனையைச் செலுத்துவதற்கு அவர் மகா உருக்கமுள்ளவர் என்ற ஆட்சேபனைகளுக் கும் போந்த உத்தரவை அருளுகிறது.

(3) மறுமையைப் பற்றிய பயத்தை உண்டாக்கவும், துணி கரத்தை அகற்றவும, அவிசுவாசிகள் சொல்லும் அகங்கார ஆட்சேபனைகளை நிராகரித்து, அவர் களைக் கண்டித்துணர்த்தவும் போதுமானதாயி ருக்கிறது.

---

### 3. அதிகாரம்.

உலகத்தை நீதியாயும் நியாயமாயும் ஆண்டுநடத்தும் கடவுளின் தர்மஆளுகை.

இரண்டாம் அதிகாரத்தில் இயற்கை ஆளுகை உண்டென் கிறசங்கதி ரூபிக்கப்பட் டிருக்கிறது. இந்த அதிகாரத் தில்தற்கால அநுபவத்தைக்கொண்டு நாம் தர்மஆளு கைகக்குட்பட்டிருக்கிறோம் என்றும், கடவுள் ஓரள வாய தர்மஆளுகையைச் செலுத்துகிறா ரென்றும் கா

ட்டி, அதைக்கொண்டு வேதத்தில் சொல்லியபடி மறுமையிலே பூரணதர்ம ஆளுகை இருக்கத்தக்கதென்றும் விளக்கியிருக்கிறது.

இயற்கை ஆளுகை என்பது, சட்டப்படி குடிகளுக்குச் சிட்சை இரட்சை கொடுப்பதைக் குறிக்கும்.

தர்ம ஆளுகை என்பது, மனிதர் நடப்பிக்கும் செய்கையின் அறத்துக்குத் தக்கதாகச் சிட்சை இரட்சை கொடுப்பதைக் குறிக்கும்.

பூரணதர்ம ஆளுகை என்பது, நல்வினை தீவினையாகிய செய்கைகளை நோக்கி மாத்திரமல்ல, அவைகளுக்கு ஆதாரமாகிய குறை குணங்களையும் நோக்கி பாரபட்சமில்லாமல் குறைவற்ற பிரதிபலன் அளிப்பதைக் குறிக்கும்.

ஆட்சேபனை.

கடவுள் அன்புடைமையுள்ளவர், யாவருக்கும் தயவை அநுக்கிரகிப்பதே அவருடைய செயல் என்பாருண்டு. இந்த ஆட்சேபனையினால் நாம் அனுமானிக்கத்தக்கதென்னவெனில்;

1. கடவுள், நடக்கை செயல் முதலிய சத்லட்சணங்களைப்பாராமல், இன்பபாக்கியங்களைச் சும்மா அருளப்பிரிய முடையவரென்றும்;

2. நீதியானது, தன்னிலே விசேஷ முள்ளதல்ல, அது ஓர் நோக்கத்துக்கு வெறும் எத்தனமாய் மாத்திரம் இருக்கிறதென்றும் ஆகும்.

உத்தரவு.

1. கடவுள் தயவுள்ளவராய் மாத்திரம் இருக்கிறார் என்ற விஷயம் ரூபிக்கப்படாததும், ரூபிககப்படக் கூடாததுமா யிருக்கிறது.

2. அவர் சதபாத்திரரான சிருஷ்டிகளுக்கு அன்புள்ளவராய் விளங்கினாலும், நம்முடைய விஷயத்தில் அவர் அதிபதியாயிருக்கிறார்.

3. அவர் அதிபதியாயிருப்பதுடன் ஓர் வகையாய் தர்ம அதிபதியாயுமிருக்கிறார்.

தர்மஆளுகை உண்டென்பதை;

1. மனிதருடைய மனச்சாட்சியைக் கொண்டும்;

2. காரியங்களின் இயற்கையைக் கொண்டும், அதாவது காரியங்கள் மாற்றப்படக் கூடாதவண்ணம் நித்தியத்துக்குச் சம்பந்தப்பட்டிருப்பதைக் கொண்டும் அறியலாம். ஆனால் இந்த அதிகாரத்தில் காட்டப்பட்டிருக்கிற நியாயங்கள், மேற்சொல்லிய நியாயங்களைவிட வித்தியாசமானவைகளாயிருக்கின்றன.

நல்வினையினால் அதிகமான இன்பமுண்டாகிறதென்பதை ஒரு நியாயமாக எடுத்துரைக்கலாம். ஆனால் மனிதரின் மாறுதலுக்குரிய கிருத்தியங்களினால் இன்ப துன்பங்களைச் சீர்தூக்கிப் பார்த்துத் துல்லியமாய் நிதானிப்பது கூடாததால், இந்த நியாயத்தை இங்ஙனம் எடுத்துக் காட்டவில்லை.

ஆகவே வேறே நியாயங்களைக் கொண்டு தற்காலத்தில் தர்மஆளுகை செலுத்தப்படுகிறதென்பதைப் பார்ப்போம்.

I. கடவுள் சில சட்டங்களைக்கொண்டு ஆளுகிறார். தர்மசட்டமானது இருக்கக்கூடியதும், இயல்புமானதென்று நமக்குக் காணப்படுகிறது.

II. விவேகத்துக்கும் அவிவேகத்துக்கும் சிட்சை இரட்சை செய்யப்படுகிறது. அவை நன்னெறிக்கும் துன்னெறிக்குமுள்ள தாழ்ந்த சாங்கமாயிருக்கிறது. ஆகவே ஓர்வகை நன்னெறிக்கும் துன்னெறிக்கும் இரட்சை சிட்சை செய்யப்படுகிறதென்றாகும்.

III. தீவினையானது சனசங்க வாழ்வுக்கு விரோதமாயிருப்பதால், சனசங்கத்தார் அதைத் தீங்காக எண்ணித்தண்டிக்கிறார்கள். சனசங்க கர்த்தா, அதைச் சனசங்கத்தைக் கொண்டு தீவினையாகத் தண்டிக்கிறார்.

1. உள்ளபடி, தீவினை கண்டுபிடிக்கப்பட்டபின் தண்டிக்கிறார்.

2. சர்வாதிக்கத்தின்படி, தீவினையை நடப்பித்தபின் கண்டுபிடிக்கப் படுவேனென்கிற பயத்தினாலும் தண்டிக்கிறார். பயமே ஓர்வகை தண்டனை.

3 இயற்கையின்படி, தீவினையை நடப்பிக்கும் முன்னும் அதற்குத் தடுக்கலாக தண்டனைவரும் என்கிறபயமும் தீவினைக்கு விரோதமான சாட்சியா யிருக்கிறது.

ஆட்சேபனை.

சனசங்க வாழ்வுக்கு அநுகூலமான நற்கிரியைகளுக்கு அடிக்கடி தண்டனை செலுத்தப்படுவ தூண்டல்லவா?

உத்தரவு

1. அவ்விதத்தண்டனை சனசங்க வாழ்வுக்கு அநுகூலமில்லை.

2. அவ்விதத்தண்டனை சனசங்க வாழ்வுக்கு அநுகூலம் என்பதினால் செலுத்தப்படாமல், வீண் வைராக்கியத்தினாலும் அறிவீனத்தினாலும் செலுத்தப்படுவதுண்டு.

IV. நல்வினையும் தீவினையும் தர்ம இலட்சணங்களாக எண்ணப்பட்டு, அவைகளுக்கு இன்பதுன்ப பலாபலன்கள் செலுத்தப்படுகின்றன.

1. அந்தச் சங்கதியின் உரை. செய்கையினால் உண்டாகும் இன்ப துன்பத்திற்கும், செய்கையின் தர்ம இலட்சணத்தா லுண்டாகும் இன்பதுன்பத்துக்குமுள்ள வித்தியாசத்தைப் பகுத்தறிய வேண்டும். திருஷ். சீனியைக் கிரையத்துக்கு வாங்கியாவது, களவுசெய்தாவது சாப்பிட்டால் இனிப்பா யிருக்கும்; என்றாலும் உணர்வில் வித்தியாசமிருக்கும். பணத்தை நியாயமாயாவது அநியாயமாயாவது சம்பாதிக்கும் வகைக்காக இன்பதுன்பம் அளிக்கப்படும். இதால்செய்கை வேறே, செய்கையின் தர்மஇலட்சணம் வேறே என்வாகிறது.

2. அந்தச் சங்கதிக் குரிய அத்தாட்சி.

(1) சாதாரண நிர்ப்பாக்கிய நிலைமையைப்பற்றி உண்டாகும் துக்க வுணர்ச்சிக்கும், துன்மார்க்க நடக்கைகளினல் விளையும் நிர்ப்பாக்கிய நிலைமையைக் குறித்துண்டாகும் வியாகுல உணர்வுக்கும் வித்தியாசமுண்டு. கப்பல் சேதத்தினலாவது, அல்லது காமகமனம், சூதாட்டத்தினலாவது உண்டாகும் பொருள் நஷ்டத்தைப்பற்றிய துக்கவுணர்வு, பொருள் நஷ்டத்தைப் பற்றிய விஷயத்தில் ஒன்று போலிருக்கும். ஆனல் காமகமனத்தினலும் சூதாட்டத்தினலும் உண்டான பொருள் நஷ்டத்தைப் பற்றிய வியாகுல உணர்வின் தன்மையோ வித்தியாச மானதாயிருக்கும்.

(2) மறுமை நிலைமையைப் பற்றிய தற்கால நம்பிக்கைகளும் பயங்களும் நம்முடைய தற்கால நடக்கையினலுண்டாகிறது; அதைக் கடவுள் நமதுள்ளத்தில் அமைத்திருக்கிருர்.

(3) அதைப்பற்றி சனசங்கத்துக்கு இருக்கிற விருப்பு, வெறுப்பு.

க. சுயவிஷயத்தில், நமது தீயகிரியையினிமித்தம், நம்மைநாமே குற்றப்படுத்தி நொந்துகொள்ளுகிறேம்

உ. சனங்கவிஷயத்தில், அநீதியான அரசாட்சியின் பேரில் நீதியான கோபதாபமுண்டாகிறது அப்படியே பழிவாங்கும் குணம் நன்றியறிதல் என்ற குணங்கள் அவைகளின் கர்த்தனுடைய கருத்தையும் கருவியையும காட்டுகின்றன.

(4) இல்லற ஆளுகை, கல்லூரி ஆளுகையில் பலாபலன்களைக் கொடுப்பது இயற்கையாயுள்ளது, அதாவது அதுதெய்வீகத்துக் குரியதென்கலாம்.

(5) சனசங்கத்தாரின் பகிரங்க அபிப்பிராயங்கள் குற்றவாளிகளுக்கு விரோதமாய் நீதியின் பட்சத்திலிருக்கிறது.

கவனிப்பு.

1. தர்ம ஆளுகை உண்டென்கிற அத்தாட்சி, நாம் அறத் தன்மை யுள்ளவர்களா யிருப்பதினுல் மாத்திர மல்ல, மேற்சொல்லிய ஐந்து நியாயங்களினுலும் அறிந்து கொள்ளலாம். இது கடவுள் தர்மமாய் நீதி செலுத்துவார் என்பதற்கு ரூபகாரமாகும்.

2. சனசங்கத்தைக் கொண்டு கடவுள் நடப்பிக்கிற இந்தத் தர்ம ஆளுகையானது;

(1) கடவுள் நமக்குத் தந்திருக்கிற அறத்தன்மையினுலும்,

(2) அதோடு நாம் ஒருவர் பேரில் ஒருவர் சேர்க்கையாகச் சார்ந்திருக்கும்படி அவர் வைத்திருப்பதினுலும் விளங்குகிறது.

ஆட்சேபனை.

தர்ம ஆளுகைக் கேற்றபடி இன்பதுன்பங்கள் எப்போதும் சரிக்கட்டப் படவில்லையே; ஆகவே அப்படிப் பட்ட ஆளுகை இருக்கிறதென்பதற்கு அத்தாட்சி யில்லை.

உத்தரவு.

1. இன்பதுன்பங்கள் நல்வினை தீவினைக்குத் தக்கதாகச் சரிக்கட்டப்படவில்லை என்கிற காரியத்தை நாம் மறுக்கிறதில்லை; ஆனுல் சாத்தியத்தை மறுக்கிருேம். ஏனெனில்,

க. இன்பம் துன்பம் பயில் முறையாய்ச் செலுத்தப் பட்டு வரலாம்.

உ. அது பொது விதியின் பயனுயும், நாம் அந்நியோந் நியமாய்ச் சார்ந்திருக்கும் நிலைமையின் பயனுயு மிருக்கலாம்; அதால் உத்தமர் துன்பமடைந் தும், துஷ்டர்கள் வாழ்ந்தும் வருகிருர்கள்.

2. கடவுள் தீவினைக்கு எதிரிடையாக நல்வினை பட்சமாய்ச் சார்ந்து, அதையே விசேடமாக மதிக்கிருர்.

V. தற்செயலாய் நேரிடும் முகாந்தரங்களா லொழிய, நல்வினை தீவினைக்குரிய முக்கிய ஏதுக்களைப் பார்க்கையில். அவைகள் அதிகமான பயனை உண்டுபண்ணத் தக்கவைகளாயிருக்கின்றன; அதாவது அவைகள் இப்போது கொடுக்கிறதைவிட இனிமேல் அதிகமான இன்ப துன்பங்களைக் கொடுக்கும். இந்த ஏதுவை நாம் ஒவ்வொருவரிடத்திலும் காணலாம். ஆனால் சனசங்கத்தில் காணப்படும் ஏதுவை உதாரணங்களால் விளக்கவேண்டும்.

1. இந்த ஏதுவின்முக்கிய இலட்சணத்துக்குரிய உதாரணங்களைப் புத்திக்கும் புத்தியில்லாத மிருகங்களின் பெலனுக்கும் ஒப்பிட்டுப் பார்ப்போம்.

(1) புத்திக்கும் மிருகங்களின் பெலனுக்குமிருக்கிற உவமானம்,

க. புத்தியானது மிருகப்பெலத்தைவிட மேலானது, அதைமேற்கொள்ளத்தக்கது; என்றாலும் அதை விளங்ககாட்டுவதற்குச் சில நிபந்தனைகள் வேண்டிய தவசியம்.

(க) இருவகைக்கும் ஓரளவிருக்க வேண்டும். திருஷ். ஆயுதம் தரியாத ஒரு மனிதனால் பத்துச் சிங்கங்களை மேற்கொள்ள ஏலாது.

(உ) புத்தியுள்ளவர்களுக்குள் ஒருமைப்பாடும்உறுதியுமிருக்கவேண்டும். திருஷ். துஷ்டமிருகங்கள் நிறைந்த ஒரு தீவில் அங்கே சிதறியிருக்கிற மனுஷர் அவைகளை மேற்கொள்ளுவது கூடாதகாரியம்.

(ங) புத்தியுள்ளவர்கள் வல்லமையைச் செலுத்துவதற்குப் போதுமான காலமும், இடவிலாசமும், சமையமும் வேண்டும்.

(ச) சில தருணங்களில் மிருகங்கள் தங்களுக்குப் புத்தியிருந்தால் செய்யமாட்டாத காரியத்தைச் செய்து முடிக்கும்.

திருஷ். வைத்தியகாரர். இது;

a. மோசத்தை முன்னறியக் கூடாததால் பலிக்கும்.

b. விவேகம் விலக்குவதைப் புத்தியீனம் துணிந்து செய்வதால் பலிக்கும்.

c. பெலவீனமும் ஐக்கியத்தப்பும் அறிவீன மும் உண்டுபண்ணுகிற விஷயங்களால் பலிக்கும்.

d. இயற்கை அறிவாலும் பலிக்கும். இந்த இயற்கை அறிவுபுத்தியுள்ள வஸ்துக் களின் குணங்களினு லுண்டாகும் பிரி வினைகளற்றிருக்கவேண்டும்.

உ. சனசங்க நல்வினையையும் சனசங்கதீவினையையும் ஒப்பனையிட்டுப் பார்ப்போம்.

சனசங்க நல்வினையும் சில நிபந்தனைகளின்படியே சனசங்கத் தீவினையை மேற்கொள்ளும்.

(க) தன்னயத்தை வெறுத்து, ஒவ்வொருவரும் பரோபகாரத்தையும் பொதுவான நன்மை யையும் நாடும் நோக்கமுள்ளவர்களா யிருக் கவேண்டும்.

(உ) ஒவ்வொரு அங்கத்தாரும் தன் கடமையை யோசனையோடும் சுறுசுறுப்போடும் செய் யும்படி ஏவிவிடப்படவேண்டும்.

(ங) ஏக ஐக்கியத்தை நிலை நிறுத்தவேண்டும்.

(ச) அதோடே நீதிக்குரிய விஷயத்தில் கட்டுப் பாடும் இருக்க வேண்டும்.

2. இந்தஏதுக்குரிய செயலைப்பற்றிய இரண்டு திருஷ்டாந்தங் களைப் பார்ப்போம்.

(1) அளவுக்குள்ளடங்காத இடமாகிய சராசரத்தில் நல் வினை தீவினைகளை நடப்பிக்கும் வஸ்துக்கள் பரம்பு

வதாக வைத்துக்கொண்டால், மேற்காட்டிய நிப
ந்தனைகளும் இருக்கில், நல்வினையானது நாளா
வட்டத்திலே மேற்கொள்ளும்.

(2) அப்படிப்பட்ட வஸ்துக்கள் உலகத்திலே அளவில்லாக் காலமாக மேற்சொல்லிய நிபந்தனைகளோடு இருந்துவருமாகில், மேற் காட்டிய பயனே காணப்படும். அப்போது வேதம் சொல்லியது நிறைவேறும். ஏசா 60. 21.

(3) இந்த ஏது அறிவுக் குறைவினாலும் குறுகின ஆயுசாலும் தடுக்கப்படுவதுண்டு. அப்படி இருந்தாலும், இந்த ஏது முக்கியமானது.

3 இயற்கை ஆளுகையானது ஏகமாயும் ஒரே தன்மையுள்ளதாயும் இருப்பதால், பூரண தர்ம ஆளுகைக்குரிய இந்த ஏது, இயல்பாய் நல்வினை தன்மையுள்ளதாயிருக்கிறது.

ஆட்சேபனை.

இந்த ஏது விருந்தபோதிலும், இப்போதிருக்கிறது போலவே, எப்போதும் நன்மை தீமை கலந்திருந்து வரலாமே.

உத்தரவு.

1. தேவனுடைய தற்கால பூரண ஆளுகையை ரூபிப்பது, இந்த அதிகாரத்தின் நோக்கமல்ல.

2. அதின் அத்தாட்சியைக் குறித்துள்ள சங்கதிகளை எடுத்துரைப்பதே அதின் நோக்கம்.

3. மேற் சொல்லிய ஆட்சேபனையை ஒப்புக்கொண்டாலும், இந்த அதிகாரத்தில் காட்டிய நியாயங்கள் போலியாக எண்ணப்பட்டாலும், தீவினையானது மேற்கொள்ளும் என்று தீர்ப்பதற்கு ஏதுவில்லை.

4. இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிற நியாயங்கள் தர்ம ஆளுகை உண்டென்கிற அத்தாட்சியைப் பலமாய் உறுதிப்படுத்துகிறது. எப்படியெனில்,

(1) இயற்கைக்கு காரணர் நல்வினை பட்சமாயிருக்கிறார். இது, நாம் நல்வினையை நடப்பிப்பதற்கு நமது கடமையையும் விவேகத்தையும் காட்டுகிற சாதனை உதாரணமாயிருக்கிறது.

(2) ஒருவாறு நடந்தேறி வந்திருக்கிற ஏதுவை, மார்க்க உபதேசங்கள் வெளிப்படுத்தி மெய்ப்பிக்கிறதாயிருக்கிறது.

(3) தற்கால இயற்கை ஆளுகையானது, இனிமேல் கொடிய தண்டனை செலுத்தப்படும் என்று எதிர்நோககப் பண்ணுவதுபோலவே, அறத்துக்குத் தக்க, சிட்சை இரட்சையும் செய்யப்படும் என்று அநுமானிக்கலாம.

(4) இந்த அநுமான மானது, இந்த ஏதுக்களின் காரியங்களினால் பலமாய் உறுதிப்படுகிறது. ஆகவே இந்த ஏதுக்கள் நிலையாயிருக்கும்.

5 சாத்தியம். இந்த அதிகாரத்தில் காட்டப்பட்டிருக்கிற காரியங்களினால் தர்ம ஆளுகை பூரணப்படும் என அநுமானிக்கலாம். காரியங்களின் நித்திய சம்பந்தத்தினால் அது ஊர்ஜிதப்படுகிறது.

---

## 4. அதிகாரம்.

இம்மையிலே, மனுஷனுடைய நிலைமையானது சோதனையும் வருத்தமும் மோசமுமான பரீட்சை நிலைமையாயிருக்கிறது.

பரீட்சை என்பது சோதனை என்றர்த்தம்.

1. அது, மோசமும் வருத்தமுமான நிலைமையையும்.
2. அது, மனோதத்துவங்களும் குணங்களும்தேறி பக்குவமடைவதையும்,
3. அது, குணத்தை வெளிப்படுவதையும் குறிக்கும்.

இதில் முதலாம் காரியம் நாலாம் அதிகாரத்திலும், இரண்டாம் காரியம் ஐந்தாம் அதிகாரத்திலும், மூன்றும் காரியம் சொற்பமாய் ஐந்தாம் அதிகாரம கடைசியிலும் காட்டியிருக்கிறது.

நாலாம் அதிகாரம். பரீட்சை என்பதில் மோசமும் வருத்த மும் அடங்கியிருக்கிறது.

முகவுரை.

I. தர்ம ஆளுகைக்கும் பரீட்சைக்கு மிருக்கிற ஒற்றுமையும் வேற்றுமையும்.

1 இரண்டுக்கு மிருக்கிற ஒற்றுமை. மறுமைக்குரிய நம்மு டைய சுகதுக்கங்கள் நமது தற்கால நடக்கையில் தொ க்கி நிற்பதில் ஒற்றுமையாயிருக்கிறது.

2. இரண்டுக்குமிருக்கிற வேற்றுமை. பரீட்சையானது ஓர் பக்கம் பெலனைச் சாய்கிறதில், அதாவது அது அபா யங்களுக் கேதுவான தென்பதில் வேற்றுமையா யிருக்கிறது.

II. இயற்கை ஆளுகையானது இந்த ஜீவியத்துக்கு எப்படியோ, அப்படியே தர்ம ஆளுகையும் மறுமைக்குரிய ஜீவியத் துக்கு உவமான சம்பந்தமாயிருக்கிறது.

இந்த இயற்கை ஆளுகையானது பரீட்சையை, அதாவது இந்த ஜீவியத்துக்குரிய அபாயத்தைக் குறிக்கும் என் பது பின்னுன நியாயங்களினால் விளங்கும்.

1. அவிவேகத்துக்காக நாம் நம்மையும் மற்றவர்களையும் குற்றப்படுத்தி நொந்து கொள்ளுகிறோம்.

2. அதை நம்முடைய குற்றமாக எண்ணி, அப்படிச் செய் கிறோம்.

3 முக்கியமாய் வாலிபர் அபாயங்களுக் குட்படுகிறார்கள்.

4. கடவுள் நம்முடைய லௌகீக நன்மைகளை நம்முடைய வசத்தில் வைத்திருக்கிறார். நாம் அதை இழந்துவி டும் அபாயத்துக்குள்ளாகிறோம். பூமிக்குரிய பரீட் சையானது உள்ளபடியான காரியம் என்பதைப் பார் க்கையில், வைதீக பரீட்சையும் இருக்கக் கூடியதென் றறியலாம். அந்த இரண்டுக்கும் உவமான சம்பந்த முண்டு.

I. காரணங்களையிட்டும்.

II. காரியங்களையிட்டும் சம்பந்தமுண்டு.

I. காரணங்கள்.

1. அகப்பற்று புறப்பற்றுகளா லுண்டாகின்றன.

அதேகாரணங்களால் மனிதர் இருவகை ஜீவனுக்குரிய பரீட்சைநிலைமையி லிருக்கிறார்கள்.

(1) விவேகத்தினால் லௌகீகநன்மைகளுக்கும்.

(2) நல்வினையினால் மறுமைக்குரிய நன்மைகளுக்கும் பரீட்சைநிலைமையி லிருக்கிறார்கள்.

2. இக்காரணங்களினால் உண்டாகும் தீமைகள்.

(1) வைதீகபரீட்சையில். ஆகாதமாதிரி, தகாதமாதிரி, தகாதபடிப்பு, வீண்பக்தி, அவபக்தி, இவைகளினால் கெடுதலுண்டாகிறது.

(2) லௌகீகபரீட்சையில் மற்றவர்களுடைய தகாதநடக்கைகள், தகாத அபிப்பிராயங்கள், துர்வழக்கங்கள் இவைகளினாலும், நம்முடைய மூடத்தனம், அஜாக்கிரதை, துஷ்டத்தனம், கெட்ட அபிப்பிராயங்கள் முதலியவற்றாலும் அதிகக்கெடுதல் நேரிடுகிறது.

II. காரியங்கள்.

1. சிலர் இம்மைக்கென்று மாத்திரம் ஜீவிக்கிறார்கள்.

2. சிலர் அடங்காத ஆசாபாசங்களினால் மதிமயங்கி, வஞ்சிக்கப்பட்டு வருகிறார்கள்.

3. சிலர் மதிமயங்கிப் போகாதிருந்தும், இச்சையினால் கட்டாயமாய் இழுக்கப்பட்டு மோசம்போகிறார்கள்.

4. சிலர் வெட்கமும் கூச்சமுமில்லாமல் பாவத்தையே நடப்பிப்போமென்று அகங்கரித்துத் தீவினையை மனமறியச் செய்கிறார்கள்.

5. எல்லாரும் இகபரத்துக் குரியநன்மைகளுக்கு விரோதமாய் மனதாரநடந்து மோசம்போகிறார்கள்.

ஆட்சேபனை.

மனிதர் பாவமுள்ள தாழ்ந்தஸ்திதியில் பிறந்து, வசதியில்லாத நிலைமையிலிருப்பதால், இப்படிப்பட்ட அபாயமான நிலைமையில் அவர்கள் வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது சந்தேகத்துக் குரியது.

1. மனிதர் விவேகத்தோடே தங்களுடைய சொந்த லௌகிக காரியங்களை நடத்தி வருகிறார்கள், அப்படிப்போல அவர்கள் வைதிக காரியங்களையும் நடத்திக்கொள்ளக் கூடியதே, இதிலே அநியாயமொன்று மில்லையே.

2. காரியங்கள் எப்படிக் காணப்பட்டாலும், அவைகளைப் பற்றி நாம் என்ன எண்ணங்கொண்டாலும், உள்ளபடியே நாம் உலக நன்மைகளுக்காகப் பரீட்சை நிலைமையிலிருக்கிறோம். ஆகவே வைதிக நன்மைகளுக்கும் அப்படியிருக்கலாமே. நம்முடைய எண்ணமானது தெய்வீக நடத்துதலின் புறம்பான காரியங்களைத் தாரதம்மியப் படுத்துகிறதில்லை.

3. இந்தப் பாக்கியம் பொதுவாகக் கொடுக்கப்படுவதில்லை. நாம் அதைத்தேடி சம்பாதித்துக் கொள்ளும்படி நியமிக்கப்பட்டிருக்கிறோம்.

ஆகவே, துற்குணத்தினாலும், அஜாக்கிரதையினாலும் பரமபுருஷார்த்தத்தை நாம் இழந்துபோகிறதை உணர்ந்து, நம்முடைய முயற்சியினாலும் உற்சாகத்தினாலும் உண்டாகவேண்டிய மறுமையைப் பற்றின தர்மத்துக் குரிய பேரின்ப சுகத்தை நாடவேண்டும்.

## 5. அதிகாரம்.

**பரீட்சைநிலைமையானது வைதீகதர்மத்துக்குப் பக்குவப்படுத்துகிற நிலைமை.**

**முகவுரை.**

1. முந்திய அதிகாரத்தில் காட்டியபடி நாம் மோசத்துக்கேதுவான பரீட்சைநிலைமையில் வைக்கப்பட்டிருப்பதற்குக் காரணம் என்னவென்ற கேள்விக்கு, எளிதில் உத்தரவுசொல்ல முடியாது. ஆனால்,

(1) இந்த மோசங்களில் சிலவற்றைப் பின்காட்டிய குறிப்புகளினால் சாந்திசெய்யலாம்.

க. நிர்ப்பாக்கியங்களுக்குக் காரணமாகிய எல்லாத்துன்மார்க்கங்களும் சுய இஷ்டமாய்நடத்தப் படுகின்றன.

உ. சில நிர்ப்பாக்கியங்கள் பயிலுக்குரிய சிட்சைகளாயிருக்கின்றன.

(2) மட்டான நமது அறிவினாலும் தத்துவங்களினாலும் நாம் அந்தகேள்விக்கு உத்தரவுசொல்லத் தகுதியற்றவர்களாயிருக்கிறோம்.

2. மேற்காட்டிய கேள்விக்கு இனமான இன்னொருகேள்விக்கு ஒருவாறு உத்தரவுசொல்லலாம்; அதாவது நாம் ஏன் இந்தநிலைமையில் வைக்கப்பட்டிருக்கிறோம்.

உத்தரவு. நாம் நல்வினையில் தேர்ச்சியடையவும், இந்த நிலைமையிலிருந்து இரட்சிப்படையவுமே.

3. லௌகீகவிஷயத்தில் நம்முடைய இளமைப்பிராயத்துக்கும் முதுமைப்பிராயத்துக்கும் இருக்கிற சம்பந்தமானது, நம்முடைய வைதீக தற்கால நிலைமைக்கும் பிற்கால நிலைமைக்கும் சம்பந்தமாயிருக்கிறது.

I. இந்த உவமானத்தின் இரண்டு உறுப்புகளுக்கு முரியதாய் நாம் கவனிக்கவேண்டிய குறிப்புகள்.

II. அவைகள் ஒவ்வொன்றையும்பற்றிப் பிரத்தியேகமாய்க் கவனிக்கவேண்டிய குறிப்புகள்.

III. பரீட்சையானது நம்முடைய குணத்தை வெளிப்படுத்துகிறதாயிருக்கிறது.

I. இந்த உவமானத்தின் இரண்டு உறுப்புகளுக்கு முரியதாய் நாம் கவனிக்கவேண்டிய பொதுவான குறிப்புகள்.

1. ஜீவனும் பாக்கியமும், உள்ளான தன்மைக்கும் புறம்பான நிலைமைக்கும் இருக்கிற சம்பந்தத்துக் கடுத்ததாயிருக்கிறது.

2. நாம் பழக்கத்தின் சக்தியால் உள்ளாகப் பக்குவப்பட்டுப் பலபுறம்பான நிலைமைகளில் ஜீவிக்கத் தகுதியுள்ளவர்களா யிருக்கிறோம்.

(1) சரீர முயற்சியினுலும் மனோகரணத் தகைமையினுலும், நாம் தத்துவமடைந்து குணத்தை ஸ்தாபிதம் செய்கிறோம். முயற்சி, தகைமை, குணம், இம்மூன்றும் பழக்கத்தினுலுண்டானவை என்று சொல்லப்படும். திருந்திய ஞாபகசக்தியும், செயற்கை அறிவும், அப்பியாச முயற்சியா லுண்டாகிறது.

(2) பழக்கங்களை இருவகையாய்ப் பிரிக்கலாம்.

க. *a*. செய்வினை பழக்கம். *b*. படுவினை பழக்கம்.

உ. மனுஷீக சக்திகள். 1. சரீரத்துக் கடுத்ததும். 2. மனத்துக் கடுத்ததுமாயிருக்கிறது. மனதுக் கடுத்த சக்தியானது, அந்தக்கரண சக்தியென்றும், தர்ம சக்தியென்றும் வகுக்கப்படும்.

(3) உள்ளான தர்மகுணமானது, தர்ம சட்டங்களை உள்ளாக அப்பியாசிப்பதால் உண்டாகும்.

(4) செய்வினைக்கு ஊற்றுகிய உணர்வுகள் திரும்பத்திரும்ப உண்டாகையில், அவைகள் பலவீனப்பட்டுவரும்; ஆனுல் அந்த உணர்வினு லுண்டாகும் உத்தமகிரியைகளினுல், செய்வினை பழக்கங்கள் பலப்பட்டுவரும். திருஷ். மோசத்தைப்பற்றிய அறிவினுலுண்டாகிய உணர்வு, படுவினைபயம், செய்வினை எச்சரிப்பு; இடுக்கண், படுவினை பரிதாபம், செய்வினை சகாயம்; மரணம், படுவினை உணர்வு, அப்பியாசத்துக் குரிய எண்ணிக்கை.

(5) இப்படியாக (ஒழுங்கு முறைப்படி) உணர்வின் சக்திகள் பெலவீனப்படுகையில், பழக்க சக்திகள் நிலை நிறுத்தப் படுகிறது. அப்பால் ஊற்றுக உணர்ச்சிவேண்டிய தவசியமில்லை. திருஷ். படுவினை பயம்.

(6) இப்படி அப்பியாசத்தினுல் நாம் புது தத்துவங்களை அடைகிறோம், புதுகுணங்களை நிலைநிறுத்துகிறோம், புதுஜீவ நிலைமைக்குத் தகுதியுள்ளவர்களாயிருக்கிறோம்.

II. லௌகீக விஷயத்தில் நமது இளமைப் பிராயத்துக்கும், முதுமைப் பிராயத்துக்கும் இருக்கிற சம்பந்தத்தையும், வைதீகத்துக்குரிய நமது தற்கால நிலைமைக்கும் பிற்கால நிலைமைக்கு மிருக்கிற சம்பந்தத்தையும் வெவ்வேருகப் பார்ப்போம்.

1. லௌகீக ஸ்திதியில் பூரணப்பட இயற்கையாய் நாம் பக்குவமற்றவர்கள்; நாம் பக்குவமடைய வேண்டியதோ அவசியமும், கூடியதும், ஆகும் காரியமுமாயிருக்கிறது.

(1) நாம் பக்குவமடைவதற்கு அவசியம். நாம் ஆயத்தமில்லாதவர்களாய் நமது ஜீவியத்தைத் துவக்குகிறோம். ஒருவன் பயிற்சியில்லா சத்துவங்களோடு பிராய முள்ளவனுய் இவ் வுலகத்துக்கு வருவானுகில்; அவன்.

க. தன் ஐம்புலன்களை உபயோகிக்க ஏலாதவனுய் மதி மயங்கிப் போவான்.

உ. கற்க இயலாதவனுய் பிடிவாதம் சாதிப்பான்.

(2) பயிற்சிக்கு உறைவிடமான பள்ளிக்கூடத்தில் நாம் இயற்கையாய் வைக்கப்பட் டிருப்பதால், பக்குவமடைவது கூடியதும் ஆகும்காரியமுமா யிருக்கிறது.

க. பிள்ளைகள் குடும்ப ஆளுகையினுலும், மற்றவர்களுடன் பழகுவதினுலும், தினசேரி அநுபோகத்தினுலும் தங்கள் ஐம்புலன்களை உபயோகிக்கப் படிப்படியாய்க்கற்றுத், தங்கள் சித்தத்தை அடக்கி, எச்சரிக்கையாய் நடக்கப் படிக்கிறுர்கள்.

(க) இந்தப் பயிற்சியின் ஓர் பாகம் மற்றவர்கள் மூலமாயும், மிச்சமான பாகம் தங்களாலும் உண்டாகிறது.

(உ) ஓர் பாகம் இயற்கையாயும் இலகுவாயும் கிடைக்கிறது, ஓர் பாகம் முயற்சியினாலும் பிரயாசத்தினாலும் கிடைக்கிறது.

உ. இந்தப் பயிற்சியை இளமையில் பிரயோகப்படுத்திக் கொள்வதற்குத் தக்கதாகப் பிந்தியகாலத்தில் உலகத்திலே ஸ்திதிமான்களாகத் தகுதியுள்ளவர்க ளாவோம்.

(3) சாதனம். உவமான சம்பந்தமாக, இந்த ஜீவகால முழுமையும் மறுமைக்குப் பயிற்சி நிலைமையாயிருக்கிறதென்று அநுமானிக்கலாம்.

ஆட்சேபனை.

இந்த ஜீவகாலம், பயிற்சி முறையா யிருக்கிற தென்பதை நாம் பிரத்தியட்சமாய்க் காண்கிற தில்லையே.

உத்தரவு.

(1) நாம் அதைக் கண்டறியக்கூடாதது, காரியத்துக்கு விரோதமான ரூபகாரமாக மாட்டாது.

(2) போஜனமும் நித்திரையும் சரீரவளர்ச்சிக்கு அநுகூலம், என்றாலும் நாம் அதைக்கண்டறிகிறதில்லை.

(3) பிள்ளைகளுக்கு விளையாட்டு அவசியம் என்பதும், அதற்கு ஒரு மட்டிருக்கவேண்டு மென்பதும், அடங்கிநடக்க பயிலவேண்டும் என்பதும் அவைகளுக்குத் தற்காலத்தில் விளங்காதவைகளாயிருக்கின்றன.

2. இயற்கையாய் நம்முடைய வைதீகநிலைமையில் மறுமைக்கு நாம் பக்குவமற்றவர்களா யிருந்தபோதிலும், அறத்தினாலும் தேவபக்தியினாலும் பக்குவமடைவது அவசியமும் கூடியதுமான காரியமாயு மிருக்கிறது.

(1) அந்த மறுமைக்குரிய நிலைமை தேவசமுகத்தில் பலரோடு கூடிவாழும் தன்மை யுள்ளதாயிருக்கும்.

அதில் பிரவேசிப்பதற்கும் அதை அநுபவிப்ப தற்கும் பரிசுத்தம் இன்றியமையாத அவசியம்.

(2) நாம் இயற்கையாய் அந்த நிலைமைக்குத் தகுதியுள்ள வர்களல்ல. ஆனால் பழக்கத்தினால் அவ்வித நிலை மைக் குள்ளாகலாம். நமக்கு அவசியமான சற் குணங்களை அடைவதற்குத் தகைமையான பயி லுமிடத்தில் வைக்கப்பட் டிருக்கிறோம். அந்த நற்குணங்களைப் பெற்றுக்கொள்ளும் வகையைப் பற்றி இதற்கு முன்னே சொல்லியிருக்கிறது.

(I. 2. (1-5.)

3. மேலும் இந்தக் காரியங்களும், சட்டங்களும், தவறிப்போ காத மானிடருக்கும், அளவுக்குட்பட்ட அறவர்களுக் கும் செல்லத்தக்கதாயு மிருக்கிறது.

ஏனெனில்,

(1) மனோதர்மம் தன் அதிகாரத்தைச் செலுத்தாத பட் சத்தில், சில விசேஷித்த தாபங்களுக்கு மிஞ்சி இடங்கொடுக்க நேரிட்டு மோசத்தில் அகப்பட ஏது வாகும்.

(2) மோசம் உள்ளுக்கு இருந்து உண்டாவதால், காவலும் உள்ளுக்கு வேண்டும், அதாவது மனோதர்ம அதி காரம் பழக்கத்தினால் பலப்பட விசேஷித்ததா பங்கள் அடங்கிக், கீழ்ப்படியும்படி பயிற்றப் படும்.

(3) மறுமையில் விசேஷித்த தாபங்கள் இருந்தாலும், இல் லாவிட்டாலும் சரி, இந்தத் தர்மபயிற்சியும் ம னோதர்மும் நாம் இனிமேல் அடையும் பரமசு கத்துக்கு நிபந்தனைகளா யிருக்கும்

4. ஆகவே நாம் அநுமேயமாய்க் கற்றுக்கொள்வதாவது.

(1) தர்மநிலையில் செம்மையாகச் சிருஷ்டிக்கப்பட்ட வஸ் து, சிலவிசேஷித்த பாசங்களை அப்பியாசிக்கில், சீர்கெட்டு, மோசத்தில் அகப்படக் கூடியதாய் நேரிடலாம்.

ஆட்சேபனை.

இது சுயாதீன சித்தத்தினு லாகிறதல்லவா?

உத்தரவு.

பூட்டப்படாத கதவு, களவுக்கு எத்தன்மையுள்ளதாயிருக்கிறதோ, அத்தன்மையே சுயாதீன சித்தமும் தீமையில் விழுவதற்கு எதுவாயிருக்கிறது, ஆனுல் அதுகாரணமல்ல.

(2) விபட்சமாய். செம்மையாய்ச் சிருஷ்டிக்கப்பட்ட அறவர் பழக்கச் சக்தியினுல் தவறிப்போகக்கூடாதபடி, தர்மநிலைமையில் பலப்படலாம்.

(3) பூரண சிருஷ்டிகள், அதாவது வரையறைக் குட்பட்ட பூர்ண சிருஷ்டிகள். (திருஷ். தேவதூதர், பரதீசில் ஆதாம்) இன்னமும் அதிகமாய்ப் பூரணப்பட அவசியமாயிருக்கலாம்; அதற்கு.

க. தருமபயிற்சியும்.

உ. தகுவநிலைமையும், பயிலும் இடமும் வேண்டும்.

5. குறைவற்ற உத்தமநிலையி லிருக்கிறவர்கள் தேறுகிறதற்கு நல்வினை பழக்கங்கள் வேண்டியதானுல், தவறிவிழுந்துப் போனவர்களின் குணமாறுதலுக்கும் தேறுதலுக்கும் நல்வினைபழக்கங்கள் அதிகமாய் வேண்டியதல்லவா? ஆகவே, இவ்வுலகத்தில் துன்மார்க்கம் அதிகமாய் விர்த்தியடைந்திருக்கிறதைப் பார்க்கில், சீர்ப்பட வேண்டும் என்று விரும்புகிறவர்களுககு அதுபயிலும் இடமாயிருக்கிறது. அது,

(1) தீவினையாலுண்டாகும் நிர்ப்பாக்கியத்தை அநுபோகத்தினுல் அறியவும், தன்னை அடக்கியாளவும் ஏவுகிறது.

(2) இயற்கையாய்ப் பாவஉலகில் நாம் அடையும் அநுபோகமானது, தேவதூதரும் மனிதரும் நித்தியத்துக்குரிய திட்டமான போதனையை அடைவதற்கும் அவசியமா யிருக்கலாம்.

கவனிப்பு. சுயவெறுப்பு அல்லது தன்னடக்கமானது தன்னில்தானே தர்ம இலட்சணமுள்ளதல்ல, ஆனால் தர்மத்தில் பயிலவும் தேறவும் அது அவசியம், அதாவது அது நோக்கத்துக்கு எத்தனமா யிருக்கிறது.

ஆட்சேபனை.

ஆனால் மனிதர், சரீரத்துக்கும் அந்தக்கரணத்துக்குமுரிய பயிற்சி விஷயத்தில் தவறிப்போவதுண்டே, அப்படியாகில் தர்மத்திலும் பக்திக்குரிய விஷயத்திலும் தவறலாமே.

உத்தரவு.

1. அப்படிப்பட்ட விஷயத்தில் ஒரு திருஷ்டாந்தம் சம்பவிக்குமுன் இப்படிப்பட்ட மனோரதியமான ஆட்சேபனையைப் பற்றிப் பேசுவது உத்தமமல்ல.

2. உவமானமானது பொதுப்பட காரியத்தை விளக்குகிறது. அது போதுமானது.

ஆட்சேபனை. 2.

காரியத்தையும் அநுபோகத்தையும் பார்க்கில், இவ்வுலகத்திலுள்ள துன்மார்க்கமானது தீவினைக்குரியபயிற்சியே யல்லாது நல்வினைக்குரிய பயிற்சியல்ல.

உத்தரவு.

1. நாம் இவ்வுலகில் வைக்கப்பட்டிருக்கிற நோக்கம் முழுவதையும் விளங்கக் காட்டுவது நம்மால் கூடியதல்ல.

2. இவ்வுலகம் நல்வினைக்குப் பயிற்சியாயிருக்கிறது. நல்வினையாய் நடக்கவேண்டும் என்று விரும்புவோருக்கு, அது அதிகமாய் அப்படி யிருக்கிறது.

3. நாம் இவ்வுலகில் பயிற்சிநிலைமையில் வைக்கப்பட்டிருக்கிறோம் என்ற நோக்கத்துக்கு, அநேகர் இந்தப் பயிற்சியை உபயோகப்படுத்தாமல் கெட்டுப்போவதே அத்தாட்சியா யிருக்கிறது.

4. நிலத்தில் விதைக்கப்பட்ட வித்துக்களில் அநேகம் அழிந்துபோக, சிலவைமாத்திரம் பூரணபக்கு

வத்துக்கு வருவதுபோல, அந்த நஷ்டமும் நம
க்கு விளங்காததா யிருக்கிறது.

ஆட்சேபனை. 3.

இந்தப் பயிற்சியானது தர்மகுணத்தைப் பிறப்பித்தாலும், அது சுயநேசம் பயம் இவைகளினுல் உண்டாகிறது, ஆகவே அது தர்மபயிற்சியல்ல திருஷ், புலி, சங்கிலி யால் கட்டப்பட் டிருந்தாலும் கட்டப்படாதிருந்தா லும் புலிதானே.

உத்தரவு.

1. கட்டளை தேவனுடையதாயிருப்பதால் அதற்குக்கீழ்ப் படிவது தர்மகீழ்படிதலாம், அப்படிப்பட்ட கீழ் ப்படிதல், தர்மபழக்கத்தை உண்டுபண்ணும். அப்படிப்போலவே தர்மசட்டங்களுக்குக் கீழ் ப்படிவதும் தர்மகுணத்தைப் பிறப்பிக்கும்.
2. தர்மம், தேவசித்தம், நமது உன்னதநன்மை முதலிய வைகளைப்பற்றிய வெவ்வேருன நோக்கங்களை வித்தியாசப்படுத்திப் பேசுவது தகாதது. அவை ஒவ்வொன்றும் இயற்கையா யுள்ளது. அவைகள் தர்ம இலட்சணத்தை உண்டு பண்ணுவதற்குப் பொருந்திக் கொள்ளுகின்றன.

ஆட்சேபனை. 4.

பயிற்சி நிலைமையில் தேறுதலடைய அடக்கமுடைமை பரித்தியாகம் முதலான குணங்கள் இம்மைக்கு மாத் திரம் வேண்டியது, அவைகள் மறுமைக்குவேண் டியதில்லை.

உத்தரவு.

1. வாழ்வும் உபத்திரவத்தைப்போல சோதனை யுள்ளது, அதற்கும் பரித்தியாக மிருப்பது அவசியம்.
2. இம்மையில் பரித்தியாகத்தா லுண்டாகும் பழக்கமா னது மறுமையில் பேரின்ப ஆசைகளைச் சமரசப் படுத்தவேண்டிதா யிருக்கலாம்.
3. உய்த்துணருகையில், அதின் செய்காரியங்களில் அது சுயநேசத்தைத் தர்மகட்டளைக்குஅமைந்து நடக்

கப்பண்ணுவதற்கு பொருந்திக் கொள்ளுகிறது. ஆனால் சுயநேசத்தை தேவசித்தத்துக்கு நீங்கலாகத் தனியேவைத்துப் பார்க்கில், அது மற்றக் குணங்களைப் போலவே பயிற்சியடைய வேண்டிய தவசியம்.

4. தேவசித்தத்துக்கு அமையுதல், சரியான அதிகாரத்துக்குச் சரியாய்க்கீழ்ப்படிவதாம். இது அன்பத்தினுலாகிறது.

ஆட்சேபனை 5.

சிட்சையினுலுண்டாகும் வருத்தமும் அபாயமு மில்லாமல், மனிதர் ஈறுக இருக்கவேண்டிய சீரில் முதலில் உண்டாக்கப்பட்டிருந்தால் நலமாயிருக்கும்.

உத்தரவு.

1. இயற்கையின் நோக்கம் நாம் வருத்தங்களில்லா திருக்கவல்ல, அந்த வருத்தங்களை மேற்கொள்ள நாம் தகுதியுள்ளவர்க ளாகும்படி பயிற்று விப்பதேயாம்.

2. பழக்கத்தினுல் குணமானது நம்முடைய குறைவை நிறைவாக்கி, மூலஅபாய நிலைமையினின்று நம்மை விலக்கிக்காக்கும் காவல்போ லிருக்கிறது.

3. உலகில் எங்கேபார்த்தாலும் முயற்சியினுல் நாம்தேற்சி அடையலாம், அதில்லாமல் கெட்டுப்போகலாம்என அறிந்துகொள்ளுகிறோம். ஆகவே, மறுமைக்குரிய விஷயத்திலும் முயற்சிக்குத்தக்க பலனுண்டென சொல்லத்தகும்.

III. பரீட்சை நிலைமையானது நம்முடைய குணத்தை வெளிப்படுத்துகிறதா யிருக்கிறது. அப்படி அதை வெளிப்படுத்தி விளக்குவிப்பதற்கு வேண்டியதை உலகம் கொடுக்கிறது.

1. மேற்சொல்லிய இரண்டு காரியங்களில் காட்டியிருக்கிறபடி அது பரீட்சையின் பயனுயிருக்கலாம்.

2. அது, குணமானது உலகத்துக்குத் தெரியவரும் பொருட்டு காரணமா யிருக்கலாம். அதால் மனிதர்வற்ற பிரகாரம் பலன் அளிக்கப்படுவார்கள்.

3. அது, இம்மையில் தர்ம ஆளுகையைக் கொண்டுசெலுத்த காரணமாயு மிருக்கலாம்.

---

6-ம். அதிகாரம்.

விதியையும் முயற்சியையும் பற்றியது.

முகவுரை. விதியைப்பற்றிய உபதேசத்தைத் தீர்மானிப்பது இந்த அதிகாரத்தின் நோக்கமல்ல.

விதியானது உலக முறைமையோடே சம்பந்தப்பட நாம் காணுதிருந்தாலும், அது அந்த முறைமையோடே சம்பந்தப்பட்டிருக்கிற தென்று வைத்துக்கொள்ளுகிறதானுல், அது மறுமைக்கும் சம்பந்தப்பட்டிருக்கிறதாக விளங்கும். அதாவது விதிவாதி தன் உபதேசத்தினுலே மார்க்க சத்தியத்தையும் கடமையையும் தள்ளுவது அநீதியென ரூபகாரப்படும்.

விதி என்பது கட்டாயம், அவசியம் என்றர்த்தங்கொள்ளும்.

கவனிப்பு. விதியானது இவ்வுலக முறைமையோடே சம்பந்தப்பட்டிருப்பதாக வைத்துக்கொண்டு, இந்த அதிகாரம் முழுவதிலும் நியாயஞ் சொல்லப்படுகிறது. இந்தக் கோட்பாட்டை விதிவாதி ஒப்புக்கொள்ள வேண்டியவனு யிருக்கிமுன். நியாய தோரணையின் பொருட்டு, பட்லர் அத்தியக்ஷர் அவன் கொள்கையை ஒப்புக்கொள்ளுகிறவராகக் காணப்படுகிமுர்.

I. பாயிரம். விதியானது பேரறிவுள்ள அதிகாரண கர்த்தர் ஒருவர் உண்டு என்கிற உதாரணத்தைக் கெடுத்து, அவர் உலகத்தை இயற்கையாய் ஆண்டு நடத்துகிறவர் என்னும் கொள்கையை நிராகரித்து நாஸ்திகத்தை நாட்ட மாட்டாது. விதி உண்டென்றுல் அதை விதித்தவர் ஒருவர் இருக்கவேண்டுமே.

1. அதைப்பற்றிய ஆதாரமான காரியங்களும்காரணங்களும்.

(1) விதியுண்டென்றபோதிலும், மனச்சாட்சி நேராய் ரூபிக்கிற வைகளைச் சத்தியமென ஒப்புக்கொள்ளவேண்டியதாயிருக்கிறது.

(2) கருத்துப் பொருளாகிய விதியானது நிமித்தகாரணமாக மாட்டாது. அது நோக்கத்தையாவது மதியையாவது காரணரையாவது மறுக்கிறதில்லை.

2. நாம் இப்போது பார்த்திருக்கிற காரியத்தோடே பின் காட்டிய சங்கதிகளை ஒப்பிட்டுப் பார்ப்போம்.

(1) விதி உண்டென்றபோதிலும், மனிதர் மனதாரயோசனையோடு சுய இஷ்டமாய்க் காரியங்களை நடப்பிக்கிறதுண்டு.

(2) விதியானது, நிமித்த காரணம் கிரியையை நடப்பிக்கும் வகையை விளக்கும் உரைபோலிருக்கிறது திருஷ். நீராவி சூத்திரம் தண்டவாளத்தின் மேல் ஓடுகிறதென்போம். விதியல்ல, நீராவியே அதை ஓடப்பண்ணுகிறது.

(3) சாத்தியம்.

க. விதிவாதி சகலமும் விதியினால் நடந்துவருகிறதென்று சொல்லும்போது அதன் அர்த்தம் கர்த்தாவினால் கட்டாயமாய் நடப்பிக்கப் படுகிறது என்பதைக் குறிக்கும்.

உ. அப்படிப்பட்ட கர்த்தாவைப் பற்றிய கட்டாயம், அவருடைய யோசனையையும் சுயேச்சையாய்த் தெரிந்துகொள்ளுதலையும் அகற்றுகிறதில்லை.

ங. பேரறிவுள்ள கர்த்தா ஒருவர் உண்டென்று காட்டுகிற அத்தாட்சியானது, விதி என்ற உபதேசத்தினால் கெடுதலடையாது. ஒருவிஷயத்தில் அது கட்டாயக் கர்த்தனையும் மற்ற விஷயத்தில் சுயாதீன பேரறிவுள்ள கர்த்தனையும் குறிக்கிறது.

II. விதியை இவ்வுலக முறைமைக்குப் பொருந்தியது என்று வைத்துக்கொண்டாலும், அது தர்ம செயலையும் புண்ணிய நிலையையும் நிராகரிக்கமாட்டாது.

I. அதைப் பொதுப்படப் பார்போம்.

(1) இம்மைக்குரிய செய்காரியங்களுக்கு ஒவ்வாதது, உபமான சம்பந்தத்தின்படி மறுமைக்குரியசமமான காரியங்களுக்கும் ஒவ்வாது.

க. பிள்ளைகளைப் படிப்பிக்கும் விஷயத்திலாவது அல்லது அதற்குச் சமமாயுள்ள வேறே செய்காரியத்திலாவது விதியைக் கையாடினால், அது தப்பாமல் முழுவதும் பொய். அல்லது எவ்வளவும் பொருந்தாதது என்று தள்ளநேரிடும். ஆகவே செய்கைக்குரிய விஷயத்தில் அது தப்பெனவாகிறது.

உ. சுயாதீனத்தைக் கையாடுகையிலோ, ஆகாத பயன் காணபபடாது. ஆகவே காரியங்கள் நடந்தேறும் விதத்தைப் பார்க்கையில் சுயாதீனம் என்கிற உபதேசம் சத்தியம் எனவாகும் எப்படியும் அது உண்மை என்பதுபோல கிரியையை நடப்பிக்கிறது. இது நமது தற்சமய நோக்கத்துக்குப் போந்தது.

ங. ஆகவே மிகமுக்கியமானதும், கிரியாகாரியத்துக்கு அடுத்ததுமான மார்க்க விஷயத்தில் விதியானது மிகக்கெடுதலான பயனைப் பிறப்பிக்கும் என்று அறியலாம்.

ச. இந்த பயன், விதியை நிர்நியாயமான வகையாய்ப் பிரயோகிப்பதினாலுண்டாகிறது.

(2) விதி உண்டென்று வைத்துக்கொண்டாலும், உத்தரவாதிகளாக நமது நடத்தைக்கும் மனச்சாட்சிக்கும் பொருந்துகிறவைகள், இவ்வுலகத்துக்குக் காரணரின் இலட்சணத்துக்கும் மனதுக்கும் பொருந்தியவைகளா யிருக்கவேண்டும். (கடவுளின் சுயம்புவானது விதியினால் நிராகரிக்கப்படுவதில்லை, I பார்) விதி உண்டென்று வைத்துக் கொண்டாலும் தர்ம இலட்சணத்தைப் பற்றி நமக்குச் சுயசித்தமும் யுக்தியும் சுயேச்சையுமுண்டென்பதை அறிவோம்.

ஆகவே விதி உண்டென்று வைத்துக்கொண்டாலும், இயற்கைக்குக் காரணருக்கும் அப்படியே சுயசித்தமும் அறிவும் தர்ம இலட்சணமும் உண்டென்று அறியலாம்.

ஆட்சேபனே.

விதி உண்டென்கில், தர்ம அதிபதியாவது தண்டனையாவது இருப்பது கூடியகாரியமல்ல; ஏனெனில் மனிதர் இன்றியமையாதபடி செய்யும் காரியத்துக்கு அவர்களைத் தண்டிப்பது அநியாயம். உத்தரவு.

(1) விதி எல்லாவற்றேடும் பொருந்தி நிற்கும் என்று வைத்துக்கொள்கையில, அது பாவக்குற்றத்தை நீக்குவதுபோலவே, அதைத் தண்டிக்கும் குற்றத்தையும் நீக்கவேண்டுமே.

(2) தர்ம உணர்ச்சியை நீக்கிவிடும் என்ற ஆட்சேபனேயிலே அந்த உணர்ச்சி உண்டென காண்பிக்கிறது. திருஷ். ஒரு கல்லானது ஒரு வீட்டைக் கட்டுவதற்காவது அல்லது ஒருவனைக் கொல்லுவதற்காவது உதவும் கட்டாயக் கர்த்தனுயிருக்கிறது. ஆனல் தர்மவகையின்படி அதைத் துத்தியஞ்செய்ய அல்லது குறைகூற ஏதுவில்லை.

ஆட்சேபனே - 2.

விதியானது, தேவனது தர்ம இலட்சணத்தைப் பற்றிய அத்தாட்சியை நிராகரிக்கிறது. ஏனெனில் நாம் விதிக்குட்பட்டிருப்பதால் தர்ம ஆளுகையுமில்லை, மார்க்கமுமில்லை.

உத்தரவு.

1. நம்முடைய நிலைமை விதியின் பயனுக இராமல் நமது நடக்கையின் பயனுக இருக்கிறது.

2. கடவுள் நம்முடைய செய்கைகளுக்குத் தக்கதாக நமக்கு சிட்சை இரட்சை செய்கிருர் என்பது பிரத்தியட்சகாரியமா யிருக்கிறது.

3. ஆகவே சுயாதீனத்தைப் பற்றியாவது விதியைப் பற்றியாவது நமக்கு இருக்கிற கருத்துப் பொ

ருள் எப்படிப்பட்டதா யிருந்தபோதிலும், கட
வுள் நமது செய்கைகளின் தர்மத்துக்குத் தக்க
தாக நமக்குச்சிட்சை இரட்சை செய்கிறார் என்
பது நாம் இயல்பாய் அறியும் சத்தியம்.

2. இதை விசேஷித்துப் பார்ப்போம்.

(1) அநுமான நியாயங்கள்.

க. இயற்கைக் காரணர் பேரறிவுள்ளவர் என்பதை
உலக இயலில் காணப்படும் நோக்கத்தினால் அறி
யலாம்

உ. அவர் இயலுக்கு அதிபதி என்பதைத் தற்கால காரி
யாநுபோகத்தால் அறியலாம்.

ந. நாம் தர்ம சக்தியுள்ளவர்களா யிருப்பதே அவர்
தர்ம அதிபதியா யிருக்கிறார் என்பதைக் காட்
டுகிறது.

(க) கடவுளுடைய இந்தச்சக்தி அதிகாரப்போங்
கானதா யிருப்பதால், அது கிரியா சட்டம்
உண்டெனக் காட்டுகிறது.

(உ) இந்தச் சட்டமானது இயலுக்கும் தெய்வீகத்
துக்கும் உரியதாகையால், நாம் அதின்படி
செய்யக் கடமைப் பட்டவர்களென விளக்
குகிறது.

a. அதின்படி செய்வதினால் தற்காலத்தில் சுக
முண்டென்றும்;

b. அதை அசட்டை செய்வதினால் தற்காலத்
தில் மோசமுண்டென்றும் கற்பிக்கிறது
(அது கீழ்ப்படிதலுக்கு இனிமேல் பல
னும் கீழ்ப்படியாமைக்கு இனிமேல் தண்
டனை உண்டென்றும் காட்டுகிறது.)

(ந) இந்தக் கற்பிதமானது தர்ம லட்சணத்தில்
புலப்படும். அது நன்மை தீமையின் பய
னால்த் தெளிவாய் விளங்குகிறது.

(ச) ஆகவே இந்தத் தர்மசக்தியானது இவ்வித லட்
சணங்களோடு திவ்விய ஆளுகையின் சித்தி

எப்படி முடியும் என்பதை நமக்கு ஏற்க னவே காட்டுகிறது.

(ரு) பகிரங்க திவ்விய ஆராதனைக்குரிய கடமை கள் நிலைப்பட தகுதியான ஆதாரத்தை உண்டு பண்ணுகிறது.

இந்த நியாயம் மேற்கொள்ளப்படக் கூடாததா யிருக்கிறது.

(க) அதின் சாதனங்கள் மறுக்கப்படாத சங்கதி கள்.

(உ) அதினு லுண்டாகும் சாத்தியம்.

a. காரியங்களின் பொருத்தத்தினு லுண்டா கிய கருத்துப்பொருளா லுண்டாகாமல்,

b. மறுக்கப்படாத சங்கதியினுல் உடனே பிற க்கிறது.

c. மூன்ரும் அதிகாரத்தில் காட்டிய மூன்று காரியங்களினுல் அது உறுதிப்படுகின் றது. அவையாவன,

a. நல்வினை தீவினைகளின் இயற்கையான ஏதுக்கள்.

b. கடவுள் சனசங்கத்தைக்கொண்டு தீவி னைகளைத் தண்டிக்கிறுர்.

c. அவைகளைத் தீவினைகளாகத் தண்டிக்கி றுர் என்பதே.

3 அதைக்குறித்துச் சரித்திர அத்தாட்சியைப் பார்ப்போம். மேற்சொல்லிய நியாயங்கள் உள்ளபடியே போந்தரூபகா ரமாயிருந்தாலும், அவைகள் சரித்திர அத்தாட்சியி னுல் உறுதிப்படுகின்றன.

(1) இயல் வேதம் சீர்கெட்டுப் போயிருக்கிற தென்பது பொதுவான அபிப்பிராயம். அது சாதாரணபுத் திக்கு இசைவா யிருக்கிறது.

(2) இயல் வேதம் துவக்கத்தில் சுத்தாங்கமாய் அநுசரிக் கப்பட்டு வந்தது.

க. இயல் வேத முறைமை, துவக்கத்தில் வெளிப்படுத்தலினால் உலகத்துக்கு வந்திருக்கவேண்டும். இது கல்விமான்களுடைய அபிப்பிராயம். அது அவர்கள் அபிப் பிராயப்படிக்கு இருக்கலாம் அல்லது ;

உ. இந்த முறைமை இயற்கையாக எல்லாருக்கும் தெளிவாய்த் தெரிந்தகாரியமா யிருக்கவேண்டும்.

(3) மேலும் இந்த முறைமை வெளிப்படுத்தலினா லுண்டான தென்கிற ஒருபாரம்பரிய மிருக்கிறது. அது உள்ளபடியான அத்தாட்சியா யிருக்கிறது. அது,

க. விசேஷித்த (வரிவடிவான) வெளிப்படுத்தலுக்கு முந்தினதாயும்.

உ. பூர்வ பாரம்பரிய வெளிப்படுத்தல் சீர்கேடடைவதற்கு முன்னுள்ளதாயு மிருக்கிறது.

4. எச்சரிப்பு.

(1) மனோரதிய நியாயமும் நன்னெறி அறிவும் ஒன்றுக்கொன்று ஒப்புமையா யிருக்கிறது. இரண்டும் சீர்கெடலாம், அல்லது அசட்டை பண்ணப்படலாம்.

(2) அந்த இரண்டு சக்திகளையும் சரியானபடி உபயோகிப்பதற்கும், அவைகளை நம்புவதற்கும் இது விரோதமான நியாயமாக மாட்டாது.

(3) ஆனால் மகாமுக்கிய காரியமாகிய மார்க்கவிஷயத்தில் நாம் வெகு எச்சரிக்கையாயிருக்க வேண்டும் என்று காட்டுகிறது.

ஆட்சேபனை.

இந்த அதிகாரம் முழுமைக்கும் விரோதமாய்ச் சொல்லப்படும் ஆட்சேபனை. மேற்சொல்லிய நியாயங்களினாலே ஸ்தாபிக்கப்படுகிற சத்தியமாவது, மனிதரின் செய்கைகள் பொல்லாதவைகள் என்றெண்ணி, அவர்களைத் தண்டிப்பதுபொய், ஏனெனில் அது மனிதர் சுயாதீனர் என்ற எண்ணத்தின்பேரில் ஸ்தாபிக்கப்

பட்டிருக்கிறது. நாம் விதிக்குட்பட்டவர்களா யிருக்கிறோம், ஆகவே இந்த நியாயங்களின் பலத்தைப் பற்றி விவாதிக்காமல், அவைகளை விட்டுவிடுவதே நலம். அப்படி பார்க்கில்;

பூர்வசாதனம். விதிக் குட்பட்ட வர்களைத் தண்டிப்பது நம்பத்தக்க தல்ல.

உத்தரசாதனம். மனிதருடைய கிரியைகளைக் குற்றமாக எண்ணி தண்டனையைச் செலுத்துவது விதிவசத்துக் குட்பட்டவர்களுக்குச் செய்யும் தண்டனையாயிருப்பதால், அது நம்பத்தக்கதல்ல என்றாகும்.

உத்தரவு.

1. இந்தச் சாத்தியம் காரியங்களுக்கும் அநுபோகத்துக்கும் எதிரிடையாக இருப்பதால் பொய்யாகும், ஆகவே நியாயதோரணையில் ஆபாசமிருக்கிறது, ஆனால் சாத்தியம் சாதனங்களிலிருந்து நியாயமான வண்ணம் வருவதால், இந்தச் சாதனங்களில் ஒன்று அல்லது இரண்டும் பொய்யாயிருக்க வேண்டும்.

(1) விதி உண்டென்று வைத்துக்கொண்டால், பூர்வசாதனம் பொய்யாகும். விதிவாதிகளின் தண்டனை நம்பப்படக் கூடாததல்ல, ஏனெனில் விதிவாதிகள் தண்டிக்கப் படுகிறார்கள் எனவாகும்.

(2) சுயாதீனம் உண்டென்று வைத்துக்கொண்டால் உத்தரசாதனம் பொய்யாகும், எப்படியெனில் மனிதர் விதிவாதிகளல்ல, அவர்களுக்கு வரும் தண்டனை விதிவாதிகளுக்குரிய தண்டனையல்ல எனவாகும்.

2. ஆகவே காரியத்தை உள்ளபடி பார்க்கில் மனிதருடைய செய்கை களுக்குத் தக்கதாகச் சிட்சை இரட்சை கொடுக்கப்படுகிறது என்றறிகிறோம். அதின் நியாயப் போக்கு;

(1) விதிவாதிகள் தண்டிக்கப்படார்கள் என்று வைத்துக் கொண்டால், எப்படியாகும்? விதிவாதிகள் சிட்சை இரட்சைக் குட்படுகிறதில்லை.

ஆனால் மனிதர் சிட்சை இரட்சைக் குட்படுகிறார்கள்
ஆகவே அவர்கள் விதிவசத்துக் குட்பட்டவர்
களல்ல எனவாகும். அல்லது;

(2) மனிதர் விதிவசத்துக் குட்பட்டவர்களென்று வைத்
துக்கொண்டால், எப்படியாகும்? எல்லா மனி
தரும் சிட்சை இரட்சைக் குட்படுகிறார்கள்.
எல்லா மனிதரும் விதிவசத்துக் குட்பட்டவர்கள்,
ஆகவே அவர்கள் சிட்சை இரட்சைக் குட்படுகி
றார்கள் எனவாகும்.

III. சாத்தியம்.

1. விதியானது உலக முறைமைக்குப் பொருந்தியதென்று வைத்துக்கொண்டால், அது இயல் வேத அருள்வேதத்தின் அத்தாட்சியையும் கடமையையும் இருந்த மட்டிலே விட்டுவிடுகிறதென்று பார்க்கிறோம். அதாவது கிரியாவிஷயத்தில் விதியானது பொய்யென்றாகிறது.

2 விதியானது மார்க்கத்தை எப்படி அவமாக்குகிறதென்று அறியலாம்.

(1) அதைப்பற்றிய கவலைகள் எல்லாவற்றையும் நிர்மூலமாக்கிப் போடுகிறது.

(2) மனிதருடைய மனச்சாட்சி சொல்லும் சாட்சியத்தை நம்பாதபடிபண்ணிப் போடுகிறது. அதை நாம் நம்பாதிருந்தால், வேறொன்றையும் நம்ப ஏதுவில்லை.

(3) விதியானது உலக முறைமையோடே சம்பந்தப்பட்டிருக்கிறதென்று வைத்துக்கொள்கையில், அது மார்க்கமுறைமையோடும் ரூபிக்கக் கூடியவண்ணமாய் பொருந்தவும் வேண்டும்.

## 7-ம். அதிகாரம்.

### கடவுள் ஆளும் முறைமையானது, நமக்கு முற்றிலும் விளங்காமல் குறைவாய் விளங்கும் முறைமை.

முகவுரை. ஒரு காரியத்தையும், அந்தக் காரியத்தின் தர்ம இலட்சணத்தையும் பகுத்துப் பார்க்கவேண்டும். திருஷ். பாம்பின் விஷம் ஜீவப்பிராணிகள் பேரில் தாவுகிற தற்கேற்றதாய் உண்டு பண்ணப்பட்டிருக்கிற நோக்கம், பிரத்தியட்சமா யிருக்கிறது. ஆனால் அதின் தர்ம இலட்சணமோ, அதாவது, அந்தநோக்கத்தின் காருண்யம தெளிவா யிருக்கிறதில்லை.

ஒப்புமையானது நேராய்க் காரியங்களைப் பற்றியது. விதி உண்டென்று வைத்துக் கொண்டாலும், வேதத்தையும் அதின் உபதேசங்களையும் காரியங்களாக மாத்திரம் பார்க்கில், அவைகள் சத்தியம் என்று முந்தின அதிகாரங்களில் விளக்கி யிருக்கிறது. ஆனால் தர்ம இலட்சணத்துக்கு, அதாவது, அந்தக் காரியங்களின் காருண்யத்துக்கும் நீதிக்கும் விரோதமாய்ச் சொல்லப்படும் ஆட்சேபனைகளுக்கு, ஒப்புமையானது நேராய் உத்தரவு சொல்லுகிறதில்லை.

"இந்த ஆட்சேபனைகள், நாம் நிதானித்துத் தீர்மானிக்கத்தக்கதான பூரண அறிவும் திறமையும் நமக்கு உண்டென்கிற எண்ணத்தினால் பிறக்கிறது. ஆனால் இயற்கை ஆளுகையின் ஒப்புமையானது, இப்போதிருக்கிற தர்ம ஆளுகை, ஒருமுறைமையென்றும், அது மனோவாக்குக் கெட்டாததென்றும் காண்பித்தால், ஆட்சேபனைக்குரிய ஆதாரம், அதாவது நமக்குப் பூரண அறிவுண்டென்று பாராட்டுவது, நமமுடைய அறிவீனத்தைப் பற்றிய அத்தாட்சியினால ஒன்றுக்கும் உதவாமற்போம். அந்த எண்ணத்தின் பேரில் சொல்லப்படும் ஆட்சேபனைகளும் மாய்ந்துபோம்.

"இந்த அதிகாரத்தின் நியாயமேதாரணை, இயற்கை ஆளுகைக்கும் தர்ம ஆளுகைக்கு முள்ளபொதுவான இலட்சணத்தின் பேரிலும், விசேஷித்த ஒப்புமையின் பேரிலும் ஸ்தாபிக்கப் பட்டிருக்கிறது."

I. ஒப்புமையின் பொது இலட்சணம்.

II. ஒப்புமையின் விசேஷித்த இலட்சணம்.

I. ஒப்புமையின் பொது இலட்சணம்.

1. இயற்கை ஆளுகையின் ஒப்புமையானது, தர்ம ஆளுகையும் ஒரு முறைமை எனக்காட்டுகிறது.

(1) இயற்கையைச் சேர்ந்த பலபாகங்களும் ஒன்றோடொன்று சம்பந்தப் பட்டுப் பொருந்தி யிருக்கின்றன.

(2) அநுபோகத்துக்கு முந்தி, அவைகளில் அநேகம் அப்படியிருப்பதாக நாம் எண்ணவும் மாட்டோம்.

2 இயற்கை ஆளுகையின் ஒப்புமையானது, தர்ம ஆளுகை மனோவாக்குக் கெட்டாததென்று காட்டுகிறது.

(1) ஒன்றோடும் சம்பந்தப் படாமல், தன்னந்தனியாயிருக்கும் காரியமுண்டென்பது, தெரியாத விஷயம் அப்படியே காரியங்கள் ஒன்றுக் கொன்றிருக்கிற எல்லா சம்பந்தங்களும் பொருத்தங்களும் தெரியாதவைகளா யிருக்கின்றன; அதாவது அந்தச் சம்பந்தங்கள் இவ்வுலகத்துக்கு அப்பாலும் செல்லத்தக்கதா யிருக்கலாம்.

(2) ஒவ்வொருகாரியமும், வஸ்துவும், செய்கையும், சம்பவமும் இறந்த காலம் நிகழ்காலம் எதிர்காலத்திலுள்ள ஒவ்வொரு காரியத்தோடும் மிக அற்பமான காரியத்தோடும் சம்பந்தப் பட்டிருக்கலாம்.

3. ஆகவே, இந்தச் சங்கதிகளினுல் தர்ம ஆளுகையானது ஒரு முறைமை என்றும், அது மனோவாக்குக் கெட்டாததென்றும் காணப்படும்.

(1) இயற்கை ஆளுகையும் தர்ம ஆளுகையும் ஒரேமுறைமையா யிருக்கலாம்.

(2) தாபரவர்க்கம் மிருகராசிக்கும், சரீரம் மனதுக்கும் உதவி உபயோகமாயிருப்பது போல, இயற்கை ஆளுகையும் தர்ம ஆளுகைக்கு இருக்கலாம்.

(3) தர்ம ஆளுகையில் ஒரு செய்கையாவது சங்கதியாவது தன்னைத் தனியானதல்ல. அது மற்றச் செய்கைகளோடும் பூரணமுறைமையோடும் சம்பந்தப்பட்டிருப்பதால், பூரணமுறைமையை அறியுமுன் பூரணமாய் விளங்காது.

(4) அதற்குரிய திருஷ்டாந்தங்களும் உதாரணங்களும்.

க. சமமற்றதாய்க் காணப்படும் இந்தக் கலம்பகக் காட்சியின் நீடிப்பும்;

உ. அது சீராக்கப்படும் வகையும் காலமும்;

ங. தெய்வசெயலின் விசேஷித்த ஏற்பாடுகளுமாகிய எல்லாம் ஒன்றுக்கொன்று சம்பந்தமானதும் மனோவாக்குக் கெட்டாததுமா யிருக்கின்றன.

4. இந்தத் தர்ம ஆளுகைக்குரிய எந்தப் பாகத்தையாவது தழுவிய தர்ம இலட்சணத்தைக் குறித்துச் சொல்லப்படும் ஆட்சேபனைக்கு, இந்த ஜீவகாலத்தில் நமக்கு முன்பாகச் சொற்பமானகாரியம் மாத்திரம் நேரிடுவதால், நம்முடைய அறிவுக்குறைவே, தகுந்த உத்தரவாயிருக்கிறது.

நியாயமுழுமையும் பற்றிய ஆட்சேபனை.

மேற்சொல்லிய குறிப்புகளிருந்தபோதிலும், இவைகளுக்கு விரோதமாய்,

(1) வரவிடப்பட்டிருக்கிற தீமைகளைப் பரிகரிக்க இந்த முறைமை நடந்துவருகையில் அதைச் சீர்திருத்தக் கூடாதா? அல்லது,

(2) இந்த முறைமையை முழுவதுமாய் நீக்கிப்போட்டுத், தன்னிட்டச் சுயாதீன செய்கைகளால் ஆளக்கூடாதாவென்று சொல்லப்படலாம்.

உத்தரவு.

1. இந்தச்சாதனை மெய்யென்று வைத்துக்கொண்டாலும், அது நம்முடைய அறிவீனத்தைப்பற்றிய அத்தாட்சியையும், அந்த அத்தாட்சியால் பிறக்கும் சாத்தியத்தையும் அவமாக்காது.

2. மிஞ்சினால் இந்தச் சாதனைகளால் உலகம் ஏற்கனவே நல்லதாயிருந்ததென்றல்ல, இப்போதிருப்பதை விட அது செம்மையானதா யிருக்கலாம் என காணப்படலாம்.

3. ஆனால் இந்தச் சாதனைகள் சுயேச்சையான சாதனைகளேயன்றி, அவைகள் ரூபிக்கப்படாததும் ரூபிக்கப்படக் கூடாதவைகளுமா யிருக்கின்றன.

4. முறைமை முழுவதையும் ஒன்றுக்கொன்றிருக்கிற சம்பந்தங்களையும்பற்றி நமக்கிருக்கிற அறிவீனமே, தகுந்த உத்தரவா யிருக்கிறது. நமக்குப் பூரண அறிவிருக்கும் என்றால், காருண்யத்துக்கும் நீதிக்கும் ஒவ்வாததாக ஆட்சேபிக்கப்படும் உதாரணங்களே, அவை இரண்டுக்கும் சிறந்தவகையாய்ப் பொருந்தத்தக்கவைகள் என்று காணப்படும்.

II. இயற்கை ஆளுகையில் காணப்படும் விசேஷித்த குறிப்புகள், தர்ம ஆளுகையில் காணப்படும் விசேஷித்த குறிப்புகளுக்கு ஒப்புமையா யிருக்கிறது. இயற்கை ஆளுகையில் இரண்டு குறிப்புகளைக் கவனிக்கலாம்.

1. எத்தனங்களுக்கும் முடிவுகளுக்குமுள்ள சாதாரணத்தன்மை.

2. பொது விதி ஆளுகை.

1. எத்தனங்களுக்கும் முடிவுகளுக்குமுள்ள சாதாரணத்தன்மை.

(1) காரியங்களைப்பற்றி கவனிக்கவேண்டிய விஷயங்கள்.

க. எத்தனங்களில்லாமல் முடிவுகள் நிறைவேறாது.

உ. விரும்பப்படத்தக்க முடிவுகள் உண்டாக விரும்பப்படத்தகாத எத்தனங்கள் கையாடப்படுவதுண்டு.

ங. இந்த விரும்பப்படத்தகாத எத்தனங்களும் விரும்பப்படத்தக்க முடிவுகளும் அநுபோகத்தால் நாம் கற்றறியக் கூடியவைகள். நியாயதோரணையால அவைகளைநாம் அறியக்கூடாது.

ச. அநுபோகத்துக்குமுந்தி, அவைகள் எதிரிடையான ஏதுக்களை உண்டுபண்ணும் என்று எண்ணியிருப்போம்.

(2) இந்தக்காரியங்களைத் தர்ம ஆளுகைக்கு ஒப்புமைப் படுத்திப் பார்ப்போம்.

க. தர்ம ஆளுகையில் ஆட்சேபிக்கப்படும் காரியங்களில் (நிர்ப்பாக்கியத்தை ஒருவருக் கொருவருடைய வல்லபத்தில் வைத்திருப்பதால் மனிதர் தீவினையில்விழ ஏதுவாயிருக்கிறது) விரும்பப்படத் தகாதவைகள் அதாவது அநீதியும் அவகாரமுமாய்க் காணப்படுகிறவைகள், விரும்பப்படத்தக்க முடிவுகளுக்கு அதாவது நீதியும் உபகாரமுமான எத்தனங்களா யிருக்கலாம்.

உ. இந்த ஏதுவை அவைகள் எப்படி உடையவைகளாயிருக்கக் கூடியதென்பதை நாம் அறியக்கூடாதிருப்பது, இதற்கு விரோதமான அசாத்தியமாகாது.

ந. அவைகள் இதற்கு எதிரிடையான ஏதுவையுடையவைகளாக யிருப்பதாய்க் காணப்பட்டாலும், அதுவும் விரோதமான அசாத்தியமாகாமல்,

ச. ஞானமும் நலமுமான முடிவுகளை உண்டுபண்ண எத்தனங்களாய்மாத்திர மிருக்கலாம்.

ஆட்சேபனை. இந்த நியாயத்தினால் துன்மார்க்கம் பிரபலமாகிறது, உள்ளபடி நன்மையென்றாகுமே.

உத்தரவு.

1. அதை ஒப்புக்கொண்டு பார்ப்போம்.

க. துன்மார்க்கம் உற்பத்தியாகிற மனித சுபாவமானது உலகத்துக்கு நன்மையை வருவிக்கக் கூடியதாயிருக்கலாம்.

உ. அப்படிப்பட்ட காரியத்துக்கு இடங்கொடுப்பதால் நன்மை உண்டாகலாம். ஆனால் அப்படிப்பட்ட காரியத்தைப் பலவந்தமாய்த் தடுப்பதோ, தீமையாக இலபிக்கலாம்.

2. ஆனால் துன்மார்க்கமானது உலகத்துக்கு நன்மை என்பதை மறுக்கிறோம்.

க. ஒன்றுமில்லா திருப்பதைவிட தீமை பிரபலமாவது வாசி என்பதையும், அல்லது,

உ தீமை தன்னிலேதானே நன்மையான தென்பதையும் நிராகரிக்கிறோம். சிலவகை துன்மார்க்கங்கள், சில வியாதிகளைப்போல கெட்டதாயிருக்கலாம். ஆனால் அந்த வியாதிகள், மிகக்கொடிதான வியாதிகளைத் தடுப்பதற்கு உதவுவதுபோல, துன்மார்க்கங்களும் அதிகமான துன்மார்க்கங்களைத் தடுப்பதற்கு உதவலாம். அப்படியிருந்தபோதிலும், வியாதியானது சுகத்தைவிட சிறந்த நிலைமை என்று சொல்லத்துணிவது மதியீனமே.

2. பொதுவிதி ஆளுகை.

(1) இந்தக் காரியங்களைப்பற்றி கவனிக்கவேண்டிய விஷயங்கள்.

க. இயற்கைச் சட்டங்கள் ஏகதன்மை யுள்ளவைகளாயிருக்கிறதென்கிற முகாந்தரத்தின்பேரில் இவ்வுலகத்தில் ஆசீர்வாதங்களெல்லாம நடந்தேறுவதால், அதாவது, ஆசீர்வாதங்கள் கிடைக்கும் வழியை எதிர்நோக்கி அதில் நடந்தோமானால் நாம் அதைக்கண்டடையலா மாதலால், இந்த ஆளுகையின் முறைமையானது மகாஞானமும் மகாசிறந்ததுமா யிருக்கலாம்.

உ. நாம் அறிந்திருக்கிறபடி கஷ்டமான ஒவ்வொரு காரியத்துக்கும் அநுகூல ஆதரவுகள் சவுதரிக்கப்பட் டிருப்பதைக் கடைசியாகக் காணலாம்.

ங. ஆனால் இந்தக்கஷ்டங்கள் நேரிடும்போது, அவைகளைத் தடுப்பதும் அல்லது மாற்றுவதும் கூடாததா யிருக்கலாம். தேச ஆளுகையிலும் அது இப்படியே யிருப்பதைப் பார்க்கிறோம்.

ஆட்சேபனை. 1.

பொதுவிதிகள் நன்மை யென்றும், அதால் கஷ்டங்கள் நேரிடக் கூடியவைகளென்றும் ஒத்துக்கொண்டாலும், இந்தக் கஷ்டங்களை விசேஷித்தவகையாய்க் குறுக்கிட்டு நீக்கக்கூடாதா?

உத்தரவு.

1. அதினால் காரியம் முடிந்து போகுமென்றால், இந்தக்கஷ்டங்களை நீக்குவது விரும்பப்படத்தக்க காரியந்தான்.

2. அதினால் காரியமும் முடிந்துபோக மாட்டாதாகையால், தடுப்பதினாலே வேறேகெடுதலான பயன்கள் நேரிடலாமே. அப்படி யாகும்போது, பரிகாரமானது வியாதியை விடகெடுதலாய்முடியுமல்லவா?

(1) தடுப்பது, சோம்பலையும் கவலையீனத்தையும் உண்டுபண்ணும், முயற்சிக்கும் சாக்கிரதைக்கும் இடமிராது.

(2) ஜீவியத்துக்குரிய இயற்கைச் சட்டங்களின் ஏகதன்மையானது சந்தேகத்துக் குரியதாகும்.

(3) அவைகள் தூரத்திலுள்ள மற்றக்காரியங்களோடே பொருந்தாமல், பெரியபின்னத்தை உண்டாக்கலாம்.

ஆட்சேபனை. 2. அதிகக்கெடுதலான பயன்கள் நேரிட்டால், வேறே ஒரு விசேஷித்த தடுக்கலால் மாற்றலாமே.

உத்தரவு.

1. அப்படிச் சொல்வது மகாமதியீனம், அது முடியக்கூடாதகாரியம். ஒரு குழியை நிரப்புவதற்காக இன்னொருகுழியை வெட்டுவதுபோலிருக்கிறது.

2. இந்தச் சங்கதிகளைத் தர்ம ஆளுகைக்கு ஒப்பிட்டுப் பார்ப்போம்.

(1) பொது விதிகளினால் செலுத்தப்படும் ஆளுகைக்கு மகா சிறந்த நியாயங்களிருக்கலாம்.

(2) ஆகவே நம்முடைய ஆட்சேபனைகளுக்கு ஆதாரமாயிருக்கிற ஒழுங்கீனங்கள், அதாவது, தேவ செயலில் நமக்கு விளங்காத காரியங்கள் சம்பவியாதபடி தடுப்பது கூடாதகாரியமாயிருக்கலாம்.

(3) அந்த ஒழுங்கீனங்களைவிட, அவைகளைத் தடுப்பது பெருந்தீமையை உண்டுபண்ணலாம்.

(4) ஆகவே, தடுக்கலாயிருப்பதே (அதாவது தேவசெயலில் கருகலாய்க் காணப்படும் காரியங்கள்) ஆட்சேபனைக்கு ஆதாரமாயிருப்பதை விட நன்மைக்குத் திருஷ்டாந்தமா யிருக்கலாம்.

முழு அதிகாரத்துக்கும் விரோதமாய்ச் சொல்லப்படும் ஆட்சேபனை, "நம்முடைய அறிவினுல் அல்லது அறிவீனத்தினுல் நாம் நியாயஞ் சொல்லக்கூடியவர்களாய் மாத்திரமிருக்கிறும்"

"நாங்கள் (ஆட்சேபனைக்காரர்) சொல்லியபடி தெரிந்திருக்கிற காரியங்களைக் கொண்டு சொல்லும் நியாயம் சரியென்றுல், திவ்விய செயலின் வழிவகைகள் அநீதியென்று எங்களுக்குக் காணப்படுகிறது. நீங்கள் சொலலியகருகலான சம்பந்தங்களையும் ஒண்ணுத அநுமைகளையும் நாங்கள் எவ்வளவும் அறியாதவர்களாகையால் அவைகளைத் தள்ளிப்போட வேண்டும்"

"நீங்கள் (பட்லர்) சொல்லியபடி நம்முடைய அறிவீனத்தைக் கொண்டு சொல்லும் நியாயங்கள் செல்லாததென்றுல், அப்போது அறிவீனத்தைச் சகலத்துக்கும் முகாந்திரமாகக் கொள்ளவேண்டும். நம்முடைய அறிவீனமானது மார்க்க விஷயத்தை அதாவது தெய்வீக ஆளுகையைப் பற்றி நிதானிப்பதற்கும் தடையாயிருக்கும். காரிருளில் ஒன்றையும் தெளிவாய்ப் பார்த்தறியக் கூடாதே.

உத்தரவு.

1. இந்த ஆட்சேபனை இந்த அதிகாரத்தின் நியாயசாதனங்களைப் பற்றிய எண்ணப் பிசகாயிருக்கிறது.

ஆட்சேபனையைப் பற்றிய காரிருள் அல்லது பூர ண அறிவீனமாகிய சாதனத்தின்மேல் நிற்கிறது. ஆனால் இந்த அதிகாரத்தின் நியாயங்கள், அரு ளுதயம் அல்லது அறைகுறையான அறிவீ னமாகிய சாதனத்தின் பேரில ஸதாபிக்கப்பட்டி ருக்கிறது.

தர்ம இலட்சணத்தையும் திவ்விய ஆளுகையையும் பற்றி அறிய, போதுமான வெளிச்ச மிருக்கிறது. ஆகவே முடிவான நோக்கத்தை வகையறுக்க அது போதுமானது. ஆனால் அந்த முடிவை உண்டுபண்ணும் சிறந்தவழிவகைகளைக் குறித்து நிதானிப்பதற்கு அது போதுமானதல்ல.

2. ஆட்சேபனையின் சாதனத்தையும் சாத்தியத்தையும் ஒப்புக்கொண்டாலும் தர்மத்தையும் மார்க்கத் தையும் பற்றிய கடமைகள் அம்மட்டிலேயே இருக்கும். ஏனெனில் அவைகள் நமக்கிருக்கிற தர்ம தன்மையினால் உண்டாகின்றன. ஆகவே அவைகளை அசட்டை செய்வது யுக்தியாயிருக்க மாட்டாது.

3. ஆனால், நம்முடைய அறைகுறையான அறிவீனத்தின் பேரில் ஸதாபிக்கப்படும் காரியமானது, மார்க்க அத்தாட்சிக்குச் செல்லாது. ஏனெனில் இயற் கை ஆளுகையானது, உள்ளபடியான காரியம். அது மனோவாக்குக் கெட்டாத முறைமை என் பது உண்மையான விஷயம். தர்ம ஆளுகையும் அப்படியே மனோவாக்குக் கெட்டாத முறைமை யாயிருக்கிறது. ஆகவே, அதில் ஒழுங்கீனங்க ளாகக் காணப்படுகிறவைகள் நல்லமுடிவுக்கு ஞானமான எத்தனங்களாயும், நீதிக்கும் நன்மை க்கும் மிகச்சிறந்த உதாரணங்களாயு மிருக்க லாம்.

4. திட்டமாய்ச் சொல்லுகையில் நியாயத்தின் சாதனம் நம்முடைய அறைகுறையான அறிவீனத்திலல்ல

நம்முடைய அறிவீனத்தைப்பற்றிய மட்டான அறிவில் நாட்டப்பட்டிருக்கிறது. ஆகவே நமது வரையறைவான அறிவைக்கொண்டு திவ்விய செயலின் தர்மத்தை விசேஷமாயும் விபரமாயும் நிதானிப்பதற்குநாம் ஏலாதவர்களாயிருக்கிறோம்.

---

## முதலாம் பங்கின் சுருக்கம்.

இவ்வுலகத்தை உண்டாக்கி ஆண்டு நடத்துகிற காரணக் கடவுள் ஒருவர் இருக்கிறார்.

அவர் சகல தர்ம இலட்சணங்களுமுடையவர்.

அவர் மனுப்புத்திரரைப் புத்திசித்தமுள்ளவர்களாய் அமைத்திருக்கிறார்.

மனுப்புத்திரர் இப்படி சிருஷ்டிக்கப் பட்டிருப்பதால் அவர்கள் கதியென்ன? எங்கேயிருந்து வந்தோம் எங்கேபோகிறோம் என்பதைக் கவனித்து நடக்கவேண்டியவர்கள் என்பதைக் கவனித்திருக்கிறோம்.

முதலாம் அதிகாரத்தில், பல ஒப்புமை நியாயங்களினாலே மனுஷர் செத்தாலும் பிழைப்பார்கள், அவர்கள் மறுமைக்கும் உரியவர்கள், ஆத்துமா அழியாத வஸ்து என்றும்;

இரண்டாம் அதிகாரத்தில், மறுமையுண்டென்பது நிசமானால் அதற்குரிய நிலைமையும், குணமும், செயலும் நமக்கு அவசியம் வேண்டும், நமது குணகுணங்களுக்குத்தக்கதாக மறுமையில் சிட்சை, இரட்சை நமக்கு அருளப்படும் என்றும்;

மூன்றாம் அதிகாரத்தில், அதைமெய்ப்பிக்க உலகத்திலே இயற்கை ஆளுகையோடே தர்ம ஆளுகையும் விதிக்கப்பட்டிருக்கிறதென்றும், இம்மையில் ஒருவாறு நன்மை தீமைக்கு இரட்சை சிட்சை நடக்கிறதினால் மறுமையில் நீதி பூரணமாய் விளங்க, பலனும் தண்டனையும் நிறைவாய்ச் செலுத்தப்படும் என்றும்;

நாலாம் அதிகாரத்தில், இம்மையில் தேவ ஆளுகைகுறைவாய்த்தோன்றினாலும் மறுமையில் நிறைவாய் விளங்கும் என்றும், இம்மையில் நம்முடைய நடக்கைக்குத் தக்கதாய் மறுமையில் பலன் அளிக்கப்படும் என்றும் இம்மையில் நம்முடைய நிலைமை சோதனையான நிலைமையாயிருக்கிற தென்றும்;

ஐந்தாம் அதிகாரத்தில், நாம் மறுமைக்குத் தேறும்படிக்கு இம்மையில் சிட்சைரட்சையான நிலைமையில் வைக்கப்பட்டிருக்கிறோம் என்றும்;

ஆறாம் அதிகாரத்தில், மனுஷர் விதியினாலல்ல முயற்சியினாலும் ஊக்கத்தினாலும் கடைத்தேற வேண்டுமென்பதற்கு அநுபவமே திருஷ்டாந்தம் என்றும்;

ஏழாம் அதிகாரத்தில், மனுஷன் சிற்றறிவாளனா யிருக்கிறபடியால் உலகில் தோன்றும் தேவ செயலைப்பற்றி ஆட்சேபனை செய்ய அவன் தக்கவனல்லவென்றும் காண்பித்திருக்கிறது.

மேற்படி விஷயங்களைக் கவனித்த நாம் செய்யவேண்டியதென்ன? இவ்வுலகில் நாம் குறுகிய காலம்மாத்திரம் இருக்கிறவர்களாதலால், மறுமைக்குரிய காரியங்களை நாடி, அதற்குரிய முயற்சிகளை உடனே செய்யவேண்டும்.

தர்மத்துக் கேதுவான நியாயங்கள் நமது அகத்திலிருந்து உண்டாகிறது. நமக்கு மனச்சாட்சியுண்டு, உலக இயலும் மனச்சாட்சியும் உலகத்தில் நடக்கும் தேவசெயலையும் நீதியையும் யதார்த்தமானவைகள் என்று சாட்சியிடுகின்றன.

"ஜீவனும் அழியாமையும் சுவிசேஷத்தினால் வெளிப்பட்டதென்றும், சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கி வைக்கிற மனுஷருடைய எல்லாவித அவபக்திக்கும் அநியாயத்துக்கும் விரோதமாய் தேவகோபம் வானத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கிற தென்றும்" வேதம் சாட்சியிடுகிற தென்பதை அறிந்து உணர்ந்து நடக்கவேண்டும.

---

# இரண்டாம்பங்கு.

## அருள்வேதம்.

### 1. அதிகாரம்.

### கிறிஸ்து மார்க்கம் முக்கியமானது.

இருவகைப்பேர் அருள்வேதம் முக்கியமல்ல என்பார்கள். அவர்கள், இயற்கை அறிவு பூரணமானது, அதைக் கைக்கொண்டு நடந்தால்போதும்; ஆகவே, அருள் வேதம் நம்பப்படத் தக்கதல்லவென்று சொல்லுவார்கள்.

இப்படிச் சொல்லுகிறவர்கள், அருள் வேதத்துக்கடுத்த சகல நியாயங்களைப்பற்றிய அறிவும், அந்த நியாயங்களெல்லாம் இனிமேல்செல்லாதென்கிற அறிவும் உடையவர்களாகத் தங்களை எண்ணிக் கொள்ளுகிறார்கள். எல்லாம் கற்றவனில்லை.

1. அருள்வேதம் நம்பப்படத்தக்கது என்பதுக்குரிய நியாயங்கள்.

(1) அருள்வேதம் கொடுக்கப்படுமுன் இயல் வேதத்தைக் கையாடின மனுஷருடைய நிலைமையையும்,

(2) அருள்வேத ஒளி இன்னும் வீசாதிருக்கிற தேசத்தாருடைய நிலைமை பரிதாபமாயிருப்பதையும்,

(3) விசேஷ முக்கியமான காரியங்களில், அக்கியான ஞானிகளுக்குள்ளிருந்த சந்தேகங்களையும்,

(4) ஆத்தும விஷயங்களைப்பற்றி மனிதருக்குண்டாயிருக்கிற அறியாமையையும், அசட்டையையும்,

(5) வீண்பக்திக்கு இடங்கொடாமல், இயல்வேதத்தின் படி உத்தமமாய் நடப்பது கூடாதென்பதையும்,

(6) இயல் வேதத்தினால் மனுஷருக்குள் உடன்பாடும் ஒற்றுமையும் உண்டாக ஏதுவிராததையும்,

(7) ஒரு காரியத்தை ஸ்திரப்படுத்த இரண்டு சாட்சிகள் வேண்டும் என்பதையும்,

(8) மனிதர் அறிவீனரும், பலவீனருமானபடியால் அவர்களுக்கு இயல்புக்கெட்டாத போதனைகளும் உதவியும் வேண்டிய திருக்கிறதென்பதையும்,

(9) சிலர் அருள்வேதத்தைத் தள்ளினபோதும், அதிலிருந்து விதிகளை எடுத்துக்கொள்ளுவதையும் பார்க்கும்போது, அருள்வேதம் அவசியமல்ல என்று சொல்லுவது விபரீதமா யிருக்கிறதென் றறியலாம்.

2 சிலர், இயல்வேதம் உணர்த்துவதையே அருள்வேதமும் உணர்த்துவதால், அது அவசியமல்ல வென்பார்கள். தேவன் அருள்வேதத்தைத் தந்திருப்பதினால், அது மகாமுக்கிய முள்ளதென்பதைக் கவனித்தறியவேண்டும். அதை இருவகையாய் அறியலாம்.

I. அருள் வேதமானது இயல்வேதத்தை மீளவும் பிரசித்தப் படுத்துகிறதா யிருக்கிறது.

1. அது, இயல் வேதத்தை யதார்த்தமும் சுத்தாங்கமுமாய் விளங்கப் பண்ணுகிறது.

2. அது, அற்புதங்கள் தீர்க்கதரிசனங்கள் முதலான அத்தாட்சிகளினால் இயல்வேதத்தின் உண்மையை இதற்கு முன்னிராத அதிகாரத்தோடே காட்டுகிறது.

3. அது, மறுமை, உத்தம மனஸ்தாபம், விசுவாசம் முதலியவைகளைப்பற்றி தெளிவாய்க் காட்டுகிறது.

4. அது நியமங்களையும் ஆசாரங்களையும் நாட்டி, நடத்திக் கொண்டு வருகிறது.

(1) அது சத்தியத்தை ஒரு முறையாக அதிகாரத்தோடே மனுஷருக்குப் போதிக்கிறது.

(2) அது நயமும் பயமுமாய் நியாயப்பிரமாணங்களைக் கொண்டு மனுஷருக்குப் போதனைசெய்து; அதின் சத்தியம் விருத்தியடையவும் நிலைபெற்றோங்கவும் செய்கிறது.

(3) இயல்வேத ஒளியினால நடக்கிறவர்களின் சீரையும், அருள்வேத ஒளியினால் நடக்கிறவர்களுடைய

சீரையும் ஒத்துப்பார்த்தால், அருள் சிறந்ததெ ன்று விளங்கும்.

இயல் வேதத்தில் மூன்று உபதேசங்கள் அடங்கியிருக்கிறது.

1. அளவில்லாப் பூரணர், இவ்வுலகை உருவாக்கி, அதை ஆண்டு வருகிறூர்.
2. தர்மம் அவர் ஆளுகைக்குச் சட்டமாயிருக்கிறது.
3. கடைசியாக, அவர் எல்லாருக்கும் நீதியான பூரணபலனை அளிப்பார்.

ஆட்சேபனை.

கிறிஸ்து மார்க்கம் ஆரம்பத்தில் சுத்தமாயிருந்தபோதிலும் இப்போது அது விகாரப்பட்டு, வீண்சடங்காசாரங்களினுல்மாறி, அதின் சக்திசீர் கெட்டிருக்கிறபடியினுல் அதைக் கைக்கொள்ளுவதில் பிரயோசனமில்லை.

உத்தரவு.

1. இந்த ஆட்சேபனையானது அருள்வேதத்தைமாத்திரமல்ல இயல் வேதத்தையும் பற்றியதா யிருக்கிறது.
2. கிறிஸ்து மார்க்கத்தினுல் உலகத்துக்கு உண்டாயிருக்கிற பிரயோசனம் கொஞ்சமல்ல. பேர்க் கிறிஸ்தவர்கள் செய்கிற துற்கிரியைகள், கிறிஸ்துமார்க்கத்தினுல் உண்டாகிறதல்ல, அவைகள் அவர்களுடைய துற்குணத்தா லுண்டாகிறது.
3. மேலும் இந்தத்துற்கிரியைகள் அதிகமாய்ப் பாராட்டப்பட்டுத் தூற்றப்படுகிறதுண்டு.
4. இயல் வேதத்தையாவது அருள் வேதத்தையாவது கைக் கொள்ளுகிறவர்களின் நடக்கைகள் நோக்கங்கள் கொள்கைகளைக் கவனிக்க வேண்டும். மனிதர் செய்யும் விபரீதங்களினுல், அவர்கள் மார்க்கத்தை நிந்தித்துப் பழிப்பது நியாயமல்ல.
5. அருள் வேதம் மற்றவர்களுக்கும் எட்டத்தக்கதாக முயற்சிசெய்து, பிரயாசத்தைச் செலுத்தத் திட்டமாய்ப் போதிக்கிறது.

**II.** கிறிஸ்துமார்க்கம் மனுஷபுத்திக்கெட்டாத நூதன விஷயங்களையும் கடமைகளையும் விதிக்கிற மார்க்கமாயிருக்கிறது.

1 நூதனவிஷயம். தேவசுதனாலும் பரிசுத்த ஆவியினாலும் மனிதர்மீட்பு அடைவதை வெளிப்படுத்துகிறது.

2 நூதனகடமை, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே, நாம் ஞானஸ்நானம் பெறவும், அவர்கள் விஷயத்தில் மற்றும் புதியகடமைகளை நிறைவேற்றவும் கற்பிக்கிறது. இந்தக் கடமைகள் சம்பந்தங்களா லுண்டாகின்றன.

(1) இயலின்படி, பிதாவாகிய தேவன் உலகத்துக்குத் தர்ம அதிபதியாக நமக்குச் சம்பந்தப்பட்டிருக்கிறார். இது விஷயமாய் நாம் அவருக்குக் கடமைகளைச் செலுத்தவேண்டியவர்களா யிருக்கிறோம்.

(2) குமாரனும் பரிசுத்த ஆவியானவரும் நமக்கு மத்தியஸ்தராயும் நம்மைப் பரிசுத்தமாக்குகிறவராயுமிருக்கிற விஷயத்தில் நமக்குச் சம்பந்தமா யிருக்கிறார்கள்.

3 இதைச்சற்று விபரமாய்ப் பார்ப்போம். வேதம் இருவகையுள்ளது அதாவது இயல்வேதம், அருள்வேதம்.

(1) இயல்வேதம்.

க. இயல்வேதத்தில் பிதாவாகிய தேவனுக்குச் செய்யவேண்டிய வைதீக கடமைகள் அடங்கியிருக்கின்றன. அருள்வேதத்தில் குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும் செய்யவேண்டிய வைதீக கடமைகள் நாட்டப்பட் டிருக்கின்றன.

உ. திரியேகருக்கு நாம் செய்யவேண்டிய கடமைகள், அவர் நமக்குச் சம்பந்தமாயிருக்கிறார் என்ற விஷயத்தில் தழுவியிருக்கின்றன.

ந. இந்தக் கடமைகள், நாம் அவரில் அன்புகூர்ந்து, அவரைக் கனப்படுத்தி, அவரிடத்தில் நம்பிக்கைவைத்து, அவருக்குப் பயந்து, அவருக்கு நன்றியறிதலைக் காட்டுவதைக்குறிக்கும்.

(2) அருள்வேதமானது, இந்த வைதீககடமைகள் காட்டப்பட்டிருக்கிற வகை கிறிஸ்து மார்க்கத்தைப் பற்றிய விஷயத்தில் வெளிப்படுத்தலுக் குரியது என்று காட்டுகிறது. இயல்வேதத்தைப்பற்றிய விஷயத்திலும் அப்படியிருக்கலாம்.

பலிதம்.

1. பொதுவாய் இயல்வேதத்தைக் கைக்கொள்வதினாலே, கிறிஸ்துமார்க்கத்தின் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளலாமென்று மனரம்மியமா யிருக்கிறவர்கள், கிறிஸ்து மார்க்கமானது இயல்வேதத்துக்குப் பிரத்தியேகமான மார்க்கமாயிருந்தாலும், அது தர்மத்தின்படி மகா அவசியமானது என்றறியவேண்டும்.

(1) இயலின்படி நாம் பெற்றோருக்குக் கடமைப்பட்டவர்களா யிருப்பதுபோல, குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும் தர்மவிஷயமாய்க் கடமைப்பட் டிருக்கிறோம்.

(2) நாம் பெற்றோருக்குச் செய்யவேண்டிய கடமைகளை நிறைவேற்றாமற் போவதினால், நஷ்டம் உண்டாகும். அப்படியே, வெளிப்படுத்தலினால் நமக்கு அறிவிக்கப்பட்டிருக்கிற கடமைகளை நிறைவேற்றாமற்போனால், தீங்கு நேரிடும்.

2. விசேஷமாய்.

(1) இயேசு மத்தியஸ்தரா யிருக்கிறார், அவரைப்பற்றிய கடமைகளை அசட்டைசெய்தால், தண்டனை தப்பாமல் செலுத்தப்படும்.

(2) தேவனாகிய பரிசுத்த ஆவியானவர் பரிசுத்த மாக்குகிறவர். மனிதர் சீர்கெட்டுப் போயிருக்கிறார்கள். இந்தச் சீர்கேட்டை நிவிர்த்திக்கப் பரிசுத்த ஆவியானவர் திவ்விய கருவியாயிருக்கிறார். அவரை அசட்டைசெய்தால், பெருமோசத்துக் கேதுவாகும்.

க. இயற்கை உபமான சம்பந்தத்தின்படி பார்க்கில், ஏற்படுத்தப்பட்ட வழிவகையைக் கையாடா திருந்தால் பிரயோசன முண்டாகாது.

உ. இந்த வழிவகைகளை ;

(க) கருத்துப்பொருளைப்பற்றிய நியாயத்தினுலாவது.

(உ) அநுபோகத்தினுலாவது.

(ந) வெளிப்படுத்தினுலாவது அறியலாம்.

ந. பரிசுத்த ஆவியானவர் பரிசுத்தமாக்குகிற விஷயத் தைக்குறித்து கருத்துப் பொருளைப்பற்றிய நியா யமானது ஒன்றும் சொல்லுகிறதில்லை. ஆகவே வெளிப்படுத்தப்பட்டிருக்கிற வழிவகைகளை அச ட்டைசெய்வது கேடாய்முடியும்.

சாத்தியம். கிறிஸ்துமார்க்கமானது உண்மையுள்ளதா யிரு க்கில் அது விசேஷ முக்கியமானது. அதை அற்ப மாய் எண்ணுவது, துணிகரமாயும் நிராசாரமாயு மிரு க்கும்.

4. மேற்சொல்லியவைகளை நாம் தெளிவாய் அறியும்பொரு ட்டு நியாயப் பிரமாணத்துக்கும் நியமப் பிரமாணத் துக்கும் இருக்கிற வித்தியாசத்தைப் பகுத்தறிய வே ண்டும்.

(1) நியாயப் பிரமாணமும் அதின் கடமைகளும், நியமப் பிரமாணத்துக்கு முந்தினதும் பிரத்தியேகமு மானது. அதை நிறைவேற்ற இயற்கையாகவே நமக்குக் கடமையுண்டு. நியமப் பிரமாணமா னது கட்டளைபெறுமுன் நம்மைக் கட்டமாட் டாது. கட்டளைபெற்றபின் அதின்படிசெய்ய கடமைப்பட் டிருக்கிறோம். இயல் முறைமை யாக அதை நிறைவேற்ற கடமையில்லை.

(2) மூலசம்பந்தத்தைக் காட்டிய வகையானது, நியாயப் பிரமாணத்தையும் நியமப் பிரமாணத்தையும் பகுத்தறிய பொருந்தாததா யிருக்கிறது.

க. திருஷ். பிதா குமாரன் நாமத்திலே ஞானஸ்நானம் பெறுவது நியமப் பிரமாணம். பிதாவுக்குரிய

விஷயத்தில் இயற்கை சம்பந்தத்தால் ஸ்தா பிக்கப்பட்டிருக்கிறது. குமாரனுக்குரிய விஷ யத்திலோ வேதத்தில் காட்டப்பட்டிருக்கிற சம்பந்தத்தால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

உ. பிதாவுக்கும் குமாரனுக்கும் நன்றியறிதலைக் காட் டுவது, தர்மத்துக்குரிய கடமை. பிதாவுக்கு ரிய காரியத்தில் அது இயற்கை சம்பந்தத் தால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. குமாரனுக் குரிய காரியத்தில் வேதத்தில் காட்டப்பட் டிருக்கிற சம்பந்தத்தால் ஸ்தாபிக்கப்பட் டிரு க்கிறது.

(3) நியமப்பிரமாண கடமைகள் இருவகையுள்ளது.

க. இயல்வேதத்துக்கும்.

உ. வெளிப்படுத்தலுக்கும் அடுத்தது.

5. மேற்சொல்லிய வித்தியாசத்திலே நியாயப் பிரமாணம், நியமப்பிரமாணத்திலும் சிறந்ததென்று அறியலாம்.

(1) எச்சரிப்பு. நியமப்பிரமாண ஏற்பாடுகள், அதாவது, சிலவைகள் பொதுப்பட நியாயப் பிரமாணத் துக்குரியது. ஏனெனில் அதற்கு நியாயங்களிரு ப்பதைப் பார்க்கிறோம். ஆனால் அவைகளில் ஏதாவது ஒன்று விசேஷித்தவகையாய் நியமப் பிரமாண ஏற்பாடா யிருக்கலாம் அந்த ஏற்பாடு என்னத்தினால் அப்படித் தெரிந்துகொள்ளப்பட் டிருக்கிற தென்பதை நாம் அறியக் கூடாதவர் கள். திருஷ்டாந்தம்.

க. புறம்பான ஆராதனை தர்மத்தின்படி நம்மைக்கட்டு கிறது. ஆனால் இன்னவகையான ஆராதனை நம்மைக் கட்டுகிறதென்பதை அறியோம்.

உ. திருச்சபையில் சேருவதற்கு ஒருமுறைமை அவசி யம் என்பது தர்மத்துக்குரியது ஆனால் ஞான ஸ்நானத்தினால் அதைச் சேரவேண்டும் என் பது நியமத்துக்குரியது.

(2) நியாயப் பிரமாணமும் நியமப்பிரமாணமும் ஒன்றை யொன்று விரோதித்ததால் நியாயப் பிரமாணத் தையே அனுசரிக்கவேண்டியது.

க. நியாயப் பிரமாணத்துக்கு முகாந்தரம் தெளிவா யிருக்கிறது. நியமப் பிரமாணத்துக்கு முகாந் தரம் தெளிவில்லை.

உ. நியமப்பிரமாணம் காரியத்தையும் நியாயப் பிரமா ணம் காரணத்தையும் குறிக்கிறது.

(3) பொதுப்பட வெளிப்படுத்தலில் நியாயப்பிரமாண கற்பனைகளும் நியமப்பிரமாண கடமைகளும் வெளிப்படுத்தப்பட்ட திவ்விய கட்டளையாக அறிவிக்கப்பட் டிருக்கிறது. நியாயப்பிரமாணம் வெளிப்படுத்தலில் மாத்திரமல்ல, நம்முடைய இருதயத்திலும் எழுதப்பட் டிருக்கிறது.

(4) இந்தக்காரியத்தை நிதானிப்பது வருத்தமல்ல; நியா யதோரணையினால் அதைத் தீர்மானிக்க வேண் டும் என்பதும் அவசியமல்ல.

க. மனிதர் நியாயப்பிரமாணத்துக்குப் பதிலாக, நிய மப் பிரமாணத்தைக் கைக்கொண்டால் போ தும் என்பது மார்க்கத்துக்கு ஒவ்வாதது. நியா யப்பிரமாணத்துக்குப் பதிலாக இன்னொன் றை ஏற்படுத்துவதும் கூடாத காரியமாம்.

உ. வேதம் நியாயப்பிரமாணத்தையே சிறந்ததாக ஒப் புக்கொண் டிருக்கிறது. மத். 9, 13.

ரு. நியமப்பிரமாணம், நியாயப்பிரமாணத்தைவிட தா ழ்ந்தது என்றாலும், அதைக் கைக்கொள்ளும் படி தேவன் கட்டளையிட்டிருப்பதால், அதற் குக்கீழ்ப்படிந்து நடப்பது தர்மத்துக்குரியது.

சாத்தியம். கிறிஸ்துமார்க்கம் இப்படிப்பட்ட தென்பதை வேத எழுத்துக்களால் மாத்திரம் தீர்மானிக்கலாம். அருள்வேதபோதனை, இயல்வேதபோதனைக்கு விரோ தமாயிராமல் அதற்கு மேற்பட்டதா யிருக்கிறது.

## 2. அதிகாரம்.

அருள்வேதத்தில் அற்புதசெயல் கண்டிருக்கிறதினால், அது இயலுக்கு விரோதம் என்று சொல்லப்படும் ஆட்சேபனையைப் பற்றியது.

*பேலிசாஸ்திரியார், கிறிஸ்துமார்க்க உதாரணத்தைக் கிறிஸ்தவர்களுக்கு எழுதினதால், முதலாவது நேரான அத்தாட்சிகளை எடுத்துக்காட்டி யிருக்கிறார். பட்லர் அத்தியக்ஷர், கிறிஸ்தவர்க ளல்லாதவர்களுக்கு எழுதினதால், முதலாவது அருள்வேதத்துக்கு விரோதமாய்ச் சொல்லப்படும் ஆட்சேபனைகளுக்கு நியாயங்களை எடுத்துரைத்து, அப்பால் கிறிஸ்துமார்க்கத்துக்குரிய அத்தாட்சிகளை விளக்கி யிருக்கிறார்.*

*இந்த அதிகாரத்தில் அவர், அருள்வேதத்துக்கு விரோதமாய்ச் சொல்லப்படும் ஆட்சேபனைகளை நிவிர்த்தித்து, அப்பால் பிந்திய அதிகாரங்களில் கிறிஸ்துமார்க்கத்துக்குரிய அத்தாட்சிகளை எடுத்துரைக்கிறார்.*

*அருள்வேதத்தில் அற்புத செயல்கண்டிருக்கிறதால், அது இயலுக்கு விரோதம் என்று சொல்லுகிறவர்களின் ஆட்சேபனைகளுக்கு மூவகை நியாயங்களை இதில் காட்டி யிருக்கிறது.*

I. *அருள்வேத முறைமைக்கு விரோதமாகச் சாமானியமாய்ச் சொல்லப்படும் ஆட்சேபனைகள். அவையாவன;*

க. *தேவன் உலகத்தைச் சிருஷ்டித்து, இப்போது, அதை அதரிசனமாய் ஆண்டுவருகிறார். அதைக்கடைசியாக இயேசுகிறிஸ்துவைக் கொண்டு நியாயந்தீர்ப்பார் என்பதும்;*

உ. *நல்லமனிதர் அந்தரங்கமாய் இப்போது தேவ ஆவியின் ஏவுதலால் நடத்தப்படுகிறார்கள் என்பதுமாம்.*

*இயலின் உபமான சம்பந்தத்தைக்கொண்டு இந்த முறைமைக்கு விரோதமாய்ச் சொல்லப்படும் ஆட்சேபனைகளுக்குப், பின் காட்டப்படும் நியாயங்கள் ஆதாரமாயிருக்கலாம்.*

1. அருள்வேதமானது இயற்கையாய் அறியப்படக் கூடாத தாயிருக்கிறது (அதாவது மனிதரின் யுத்தியினாலும் அநுபவத்தினாலும் அறியக்கூடாதவைகள்) அல்லது ;
2. அருள்வேதமானது அறியப்பட்ட உலக இயலுக்கு விகற்பமாயிருக்கிறது என்பவைகளே.

1. அருள்வேதமானது இயற்கையாய் அறியப்படக் கூடாத தா யிருக்கிறது.

(1) ஒன்றுக்கொன்று சம்பந்தமாயிருக்கிறது என்று சொல்லப்படும் காரியங்களின் முக்கியமான இலட்சணங்களைப்பற்றிப் போதுமானபடி அறியவேண்டும் என்பது உபமான சம்பந்த நியாயங்களின் ஓர் நிபந்தனை. ஆனால் சராசர மனைத்துமுள்ள இயலையும் தர்மத்தையுங்குறித்து நமக்கிருக்கிற அறிவு மிகச்சொற்பம்.

க. தேவசெயலில் கடந்துபோன எண்ணிறந்த காரியங்களும், இனி சம்பவிக்கும் எண்ணிறந்த காரியங்களும் மனுஷர் புத்திக்கெட்டாதவைகளா யிருக்கின்றன.

உ. தேவசெயலில் நடந்தேறும் காரியங்கள் சராசர மனைத்துக்கும் அடுத்தவைகளாயிருக்கின்றன.

(2) ஆகவே இயலிலும் தர்மத்திலும் எண்ணிக்கைக்கு அடங்காத காரியங்கள் அறியப்படக் கூடாதவைகளா யிருப்பதால், அது முகாந்தரமாக அவைகள் உண்மையுள்ளவைக ளல்லவென்று சொல்க்கூடாதே.

2. அருள்வேதமானது அறியப்பட்ட உலக இயலுக்கு விகற்பமாயிருக்கிறது.

(1) சமஸ்தத்திலும் அறியப்படாததெல்லாம், அறியப்பட்டிருக்கிற சொற்பத்துக்கு இசைவாயிருக்கிறது என்று சொல்லத் துணியலாகாது.

(2) ஆகவே அருள்வேதமானது, அறியப்பட்டிருக்கிற காரியத்தைப்போலிராததையிட்டு,அருள்வேதத்தின் உண்மையைப்பற்றி தோஷம் சொல்லலாகாது.

(3) அறியப்பட்ட காரியங்களிலும்கூட அநேகம் ஒன்றுக்கொன்று விகற்பமாய்க் காணப்படுகிறது. ஆகவே அறியப்பட்ட காரியங்களும் அறியப்படாத காரியங்களும் ஒன்றுக்கொன்று விகற்பமாய்க் காணப்படலாமே.

(4) ஆனால் அருள்வேத முறைமையானது, இயல் முறைமைக்குச் சம்பந்தமா யிருக்கிறது.

க. அருளில் தெளிவிக்கப் பட்டிருக்கிற ஒவ்வொன்றும், அறியப்பட்டிருக்கிற முறைமைக்கு விகற்பமாய்க் காணப்பட்டாலும் அல்லது.

உ. கிறிஸ்து மார்க்க முறைமையைப் பொதுப்படப் பார்த்தாலும், அது அற்புத செயல் என்று விளங்கும்.

II. ஆதி சிருஷ்டிப்பிலே அருளுக்கு விரோதமான ஆட்சேபனையில்லை.

1. சிருஷ்டிப்பிலே உலக இயலில்லை. வேதம் ஆதியில் அருளப்பட்டால், அது அருளப்பட்ட அற்புத செயலானது, இயலுக்கு விரோதமாயிராதே.

2. சிருஷ்டிப்பிலே உபயோகிக்கப்பட்ட வல்லமையானது, அற்புதமல்லாததா யிருக்கவேண்டும் அல்லது அற்புதமுள்ளதா யிருக்கவேண்டும்.

(1) அது அற்புத மல்லாததாயிருந்தால், வேதத்தை அருளின வல்லமையானது அதின் அளவைப்பற்றினதா யிருக்கவேண்டும். அதின் வகையையும் வல்லமையையும் பற்றினதா யிராது.

(2) அது அற்புத முள்ளதாயிருந்தால், வேதத்தை அருளுவதில் அந்த வல்லமையைச்சற்று அதிகமாய்ச் செலுத்துவது விரோதமன்று.

(3) எல்லாச் சரித்திர பாரம்பரியங்களும் வேதம் அருளப்பட்டதென்ற அபிப்பிராயத்துக்கு இசைவா யிருக்கின்றன.

III. உலக இயல் ஸ்தாபிக்கப்பட்டு, நடந்தேறி வரும்போது, வேதம் அற்புதமாய் அருளப்படுவது கூடியதல்லவென்று ஒப்புமை நியாயத்தினால் சொல்லக்கூடாது. இதைப்,

1 பொதுப்படப் பார்ப்போம். நியாயதோரணைக்குரிய உபகரணங்கள் உபமான சம்பந்தத்திலில்லை. பாவமுள்ளவேறொரு உலகமிருந்தால், அதைக்கொண்டு இவ்வுலகின் இயலை அநுமானித்து, அறிந்து கொள்ளலாம். அப்படிப்பட்ட வேறொரு உலகமிருந்தாலும், ஒரு உபமானத்தினாலே மாத்திரம் ஒரு காரியத்தைத் தீர்மானிப்பது ஐயப்படலாகும். *

2. விசேஷித்துப் பார்ப்போம். அற்புதங்களுக்கு விரோதமாய் ஆட்சேபனைகளிருந்தபோதிலும்;

(1) சாதாரண விஷயங்களுக்கு அநுமான நியாயங்களிருந்தால், எதிர் நியாயங்கள் அவைகளை நிராகரிக்கமாட்டாது.

(2) உலக இயல், இன்னின்ன காரியங்களைத்தழுவி நடந்தேறுகிறதென்று நமக்குத் தெரியாதபடியால், பற்பல காரியங்கள் அற்புதமாய் நடந்திருக்கலாம் என்று சொல்லலாம்.

(3) மனுஷர்களுக்கு அடுத்தத் தர்மத்தைக் கவனிக்கும்போது, தர்மத்தை உறுதிப்படுத்துகிற அருளாகிய அற்புதம் அவசியம் வேண்டியதென விளங்கும்.

(4) அற்புதங்களை, உலகத்தில் சம்பவிக்கிற விசேஷித்த காரியங்களோடு ஒத்துப்பார்க்க வேண்டும். திருஷ்டி, பூகம்பம், தூமகேது, புகைக்கப்பல், புகைவண்டி, மின்தபால், இவைகளை முற்றும் அறியாதவன் இவைகளைப்பற்றி ஆட்சேபிப்பது, அற்புதத் தன்மையை அறியாதவன் செய்யும் ஆட்சேபனைக்குச் சமமாகும். ஆகேவே, பொருளடக்கம்.

---

* பட்லர் அத்தியக்ஷர், இயலுக்கு மிஞ்சின அற்புதங்களை இயலில் சம்பவிக்கும் ஆச்சரிய சம்பவங்களோடு குழப்புகிறார்.

1. அற்புதங்கள் நம்பப்படத் தக்கதல்ல வென்று சொல்லக் கூடாது.

2. அற்புதங்கள் நடக்கலா மென்பதற்கு நியாயங்க ளிருக்கிற படியால், அவைகள் நடப்பிக்கப் பட்டனவென்று ஒப்புக்கொள்ள வேண்டும்.

3. உலக இயலில் நடக்கிற ஆச்சரியமான விசேஷங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கில், அவைகளைப்போல அற்புதங்களும் நடக்கலாம் என்று தீர்மானிக்க வேண்டும்.

பூகம்பம் முதலிய ஆச்சரிய சம்பவங்கள் நடந்தபின், அவைகள் அற்பமான சாட்சியத்தினால் உறுதிப்பட்டுப்போம். அற்புதங்கள் வேறே வகையாய் நடப்பிக்கப்படுவதால், அவைகளுக்கு வேறே வகை சாட்சியம் வேண்டும்.

கிரேக்குப் பாஷையில் Teras, Dunamis, Semion, என்ற மூன்று பதங்கள் வேதத்தில் அற்புதங்களுக்காக உபயோகிக்கப் படுகின்றன.

Teras என்று வருமிடத்தில் அது மனிதருடைய கவனத்தை எழுப்பி விடுவதற்கான பலிதத்தைக்காட்டும். அது மனிதருடைய அநுபோகத்தில் விளங்கும் ஆச்சரியம.

Dunamis என்று வருமிடத்தில் அற்புதம் நடத்தப்படும் கருவியைக் காட்டும். அது விசேஷித்த முகாந்தரமாய் தெய்வீகசெயலால் செய்யப்படுவதென்று விளக்கும்.

Semion என்று வருமிடத்தில் அது நோக்கத்தை விளக்கும் காரணமாய் உபயோகிக்கப்படும், அது ஓர் பெரிய நோக்கமாய்ச் செய்யப்படுவதையும், தர்மத்துக்கேற்ற கருவியாக உபயோகிக்கப் படுவதையும் விளக்கும். ஆகவே, கிறிஸ்து மார்க்க அற்புதமானது தெய்வீக கருவியால், தர்ம நோக்கத்துக்காகச் செய்யப்படுகிற ஆச்சரிய சம்பவம் என்று சொல்லப்படும்.

## 3. அதிகாரம்.

அருள் வேதத்தில் இன்னின்ன காரியங்கள் வெளிப்பட்டிருக்கும் என்று நாம் முன்னர் கருதி நிதானிக்கத் தகுதியுள்ளவர்களல்ல வென்றும், மனிதருடைய புத்திக் கெட்டாத அநேக காரியங்கள் அதில் வெளிப்பட்டிருக்கும் என்றும் அவைகள் சந்தேகத்துக்கும் ஆட்சேபனைகளுக்கும் இடங்கொடுக்கும் என்றும் ஒப்புமை நியாயத்தினால் விளங்கும் என்பது.

*அருள் வேதத்தில் அற்புதகிரியைகள் நடந்திருக்கிறதாகக் காட்டியிருக்கிறதினால், அது உலக இயலுக்கு விரோதம் என்று சிலர் பாராட்டும் ஆட்சேபனைக்கு முந்தின அதிகாரத்தில் உத்தரவு சொல்லப்பட்டது. இந்த அதிகாரத்தில் கிறிஸ்து மார்க்கமானது திவ்விய வெளிப்படுத்தல், என்பதற்கு விரோதமாய், அதாவது, அது அருளப்பட்டவகை, அதின் பொருள், பாஷை நடை, முதலியவைகளைப் பற்றிய பொதுவான ஆட்சேபனைகளைக் குறித்து கவனிப்போமாக. அநுபவத்துக்கு முன், வெளிப்படுத்தலைப்பற்றி ஆட்சேபிக்கிறதாயிருந்தால், அநேகமான ஆட்சேபனைகளைச் சொல்லத் துணிவார்கள் என்பது இந்த அதிகாரத்தில் காட்டப்படும் நியாயப் போங்காம்.*

இதில் இரண்டு காரியத்தை நாம் மனதில் வைத்துக்கொள்ளவேண்டும். அவையாவன,

1. மனிதருடைய புத்தியானது ஒரு காரியத்தின் தன்மையைப் பற்றி நிதானிக்கத் திறமையுள்ளதல்லவென்று சொல்லாமல், மனிதர் தங்கள் புத்தியை ஆகாத வகையாய் உபயோகிக்கக் கூடும் என்பதும்;

2. வெளிப்படுத்தலில் அடங்கிய உள்ளான குறிப்புகளைக் கொண்டு, அதை ஆகாததென்று ரூபிக்க ஏலாது என்பதுமே.

ஏனெனில் நீதி நெறிக்கு நேர்விரோதமான காரியங்களும், புத்திக்கு விகற்பமான காரியங்களும் அதில் காணப்படுமாகில், அதை அபத்தமென்று தீர்மானிக்கலாம். ஏகேச்சுரவாதிகள், இயல் முறைமை கடவு

ளால் உண்டானதென்று சொல்லுகிறார்கள். கிறிஸ்தவர்கள் வெளிப்படுத்தல் கடவுளால் அருளப்பட்டதென்கிறார்கள். ஆகவே இயலும், அருளும், அறிவைத், தெரியக் காட்டும் திவ்விய முறைமை என்றும் அவை ஒன்றுக்கொன்று ஒப்புமையானதென்றும் விளங்கும், உலக இயலில் அநேக காரியங்களை அறிந்து கொள்ளக் கூடாதது போல, வெளிப்படுத்தலிலும் அநேக விஷயங்களை அறியக் கூடாதிருக்கிறது, இந்த ஒப்புமை நியாயத்தினால்,

I. அநுபவத்துக்கு முன்னர் வெளிப்படுத்தலைப் பற்றி நிதானிக்க நாம் திறமை யற்றவர்களா யிருக்கிறோம் என்றும்;

II. அநுபவத்துக்கு முன்னர் அது ஆட்சேபனைக் குரியதென்றும் கவனிக்க வேண்டியது.

I. அநுபவத்துக்கு முந்தி வெளிப்படுத்தலைப் பற்றி நிதானிக்க நாம் திறமை யற்றவர்களா யிருக்கிறோம்.

1. வெளிப்படுத்தலின் பொருளைக் குறித்து நிதானிக்க நாம் திறமை யுள்ளவர்க ளல்லவென்பதைப் போதுப்படப்பார்ப்போம்.

(1) அநுபவத்துக்குமுந்தி, இயல் முறைமையானது நாம் எண்ணியதற்கு விகற்பமானது என்பதை அறிவோம். அப்படிப் போலவே வெளிப்படுத்தலின் பொருளும் இருக்கலாம்.

(2) ஒன்றை நிதானிக்க நாம் தகுதியற்றவர்களா யிருப்பது போலவே, மற்றதை நிதானிக்கவும் தகுதியற்றவர்களா யிருக்கலாம்.

(3) உதாரணமாக, ஓர் இராச்சியம் சாதாரணமாய் அறிந்த சட்டங்களால் ஆளப்படுகிறது. ஆனால் விசேஷித்த அவசியமான காலங்களில் விசேஷித்தசட்டங்களினால் ஆளப்படுவதுண்டு.

க. ஓர் மனிதன் அநுபவத்துக்கு முந்தி சாதாரண சட்டங்கள் கொடுக்கப்பட்ட கருத்தை நிதானிக்கத் தகுதியற்றவனா யிருந்தால, விசேஷித்த-

காலத்துக்கென்று ஏற்படுத்திய சட்டங்களை எப்படி நிதானித்தறியக்கூடும்?

உ. சாதாரண சட்டம் ஏற்படுத்தப்பட்ட ஞானத்தை நிதானிக்கக் கூடாதவனு யிருந்தால், விசேஷித்த சட்டம் ஏற்படுத்தப்பட்ட ஞானத்தை அவன் எப்படி அறியக்கூடும்?

௩. சாதாரண சட்டத்தைப்பற்றி அவனுக்கு ஆட்சேபனையிருக்கையில், விசேஷித்த சட்டத்தைப் பற்றி ஆட்சேபனை இருக்க மாட்டாதா?

அவ் வண்ணமே, இயல் வேதத்தைச் சரியானபடி அறியாத ஏகேச்சுரவாதிகள், அருள்வேதத்தைப்பற்றி ஆட்சேபிப்பது ஆச்சரியமல்ல.

2 அருள் வேதத்தின்பொருளை வெளிப்படுத்தும் வகையைப பற்றி முக்கியமாய்ப் பார்ப்போம்.

(1) இயற்கை அறிவை அருளுகையில், கடவுள் இன்ன பொருளை இன்னவகையாய் அருளுவார் என்றும்;

(2) இந்த அறிவை மனுஷர், மற்றவர்களுக்கு எவ்விதமாய் வெளிப்படுத்துவார்கள் என்றும்;

(3) அவர்கள் வெளிப்படுத்தும் காரியங்கள் மற்றவர்களுக்கு எளிதாய் விளங்குமோ என்றும்;

(4) அறிவுக்குரிய பலவிஷயங்களின் பொருள் எல்லாருக்கும் வித்தியாசமின்றி விளங்குமோ, விளங்காதோ? என்றும்;

(5) மனிதர் அறிவில் தேறுவது படிப்படியோ, அல்லது ஒருமிக்கவோ என்றும் மனிதருக்கு முன்னர் விளங்காது. அப்படிப்போலவே, கடவுள் வேதத்தின்பொருளை தெரியக்காட்டும வகையுமிருக்கிறது.

க. கடவுள் இன்னின்ன நூதன விஷயங்களை அருளுவார் என்பதையும்!

௨. வேதம் பின்னடியாருக்கு விளங்க இன்னின்ன பிரயத்தனங்களையும் செய்வார் என்பதையும்!

௩. வேத அத்தாட்சி யாவருக்கும் எளிதில் விளங்குமோ விளங்காதோ; என்பதையும்!

௪. அது யாவருக்கும் பலிக்குமோ பலிக்காதோ? என்பதையும்;

௫ அது ஒரே முறையாக ஏககாலத்திலோ படிப்படியாகவோ எப்படி வெளிப்படுத்துவார்? என்பதையும் முன்னர் அறிந்து தீர்மானிக்க நாம் திறமையற்றவர்களா யிருக்கிறோம்.

ஆட்சேபனை.

எழுதப்படாத வெளிப்படுத்தல் காரியத்துக்கு உதவத்தக்கதா?

உத்தரவு.

1. இந்த ஆட்சேபனை யானது, ஆட்சேபிக்கிறவனுக்கு வெளிப் படுத்தலின் நோக்கத்தைப்பற்றித் திட்டமான அறிவுண்டெனக் காட்டுகிறதா யிருக்கிறது. இந்த எண்ணமானது அபத்தம்.

2. ஒலி வடிவான வெளிப்படுத்தல் சில காரியங்களுக்கு ஏற்றதா யிருக்கலாம். அது அப்படி யிருப்பது கடவுளின் நோக்கமாயு மிருக்கலாமே.

3. இந்தப் பிரிவினால் விளங்கிய சாத்தியம்.

(1) வெளிப்படுத்தல் எவ்வகையாய்க் கொடுக்கப்படலாம், அது எப்படிப்பட்டதா யிருக்கவேண்டும்? என்பதைக் குறித்து நிதானிக்க நமது புத்திபோதுமானதா யிராததால், அது அருளப்பட்டபின், அது இன்னின்னவகையாய் அருளப்படவில்லை, அல்லது நாம் கருதியபடி அது அளிக்கப்படவில்லை என்று ஆட்சேபிப்பது கிஞ்சில் காரியம்.

(2) நாம் தீர்மானிக்க வேண்டிய ஒரே காரியம், அது திவ்விய வெளிப்படுத்தலா அல்லவா? என்பதே.

(3) வேதத்தில் குற்றமாக எண்ணப்படுகிறவைகளில் ஒன்றுவது, (திருஷ்டாந்தமாக, கருகலான வாக்கியங்கள், பாஷை நடை, வாக்கியங்களின் பாடபேதங்கள், கிரந்த கர்த்தாக்கள், காலப்பிழைகள்) வேத உண்மையை நிராகரிக்கத் தக்கதல்ல. வெளிப்படுத்தலில் இவைகளுக்கு இட மிராதென்று சொல்லப்படவு மில்லை.

(4) வேதம் அருளப் பட்டபோதும், அது பிரபல்லியப் படுத்தப் பட்டபோதும், நடந்த அற்புதங்கள் தீர்க்க தரிசனங்களைப்பற்றி நிராகரிக்கக்கூடாத ஆட்சேபனைகள் சொல்லக்கூடுமானல், வேதம் உண்மை என்கிற அத்தாட்சி விளங்காது.

(5) உண்மையான அத்தாட்சி இருக்கும் பரியந்தம் வேதத்திலுள்ள தர்மத்தையும் நீதியையும்பற்றி ஆட்சேபனைசொல்ல ஏதுவில்லை.

சித்தாந்தம். வேதத்தில் இன்னது அடங்கி யிருக்கவேண்டும் என்பதை நிதானித்துத் தீர்மானிக்க நாம் அசக்தரா யிருப்பதால், மற்றப் புஸ்தகங்களைக் குறித்து ஆட்சே பிப்பதுபோல, வேதாகமத்தைப்பற்றி ஆட்சேபிக்கக் கூடாது.

ஆட்சேபனை.

வேதத்தில் அசாத்தியமாய்க் காணப் படுகிறவைகள் புறம்பான அத்தாட்சிகளை நிராகரிக்குமே.

உத்தரவு.

1. இந்த ஆட்சேபனையானது, அசாத்தியம் இன்னது என்று ஏற்கனவே அறியத்தக்க திறமை நமக்குண்டென்று காட்டுகிறதா யிருக்கிறது; அப்படிப்பட்ட எண்ணம் பிசகு.

2. மனோ தோற்றத்தின்பேரில் சார்ந்து நிற்கும் அசாத்தியமானது, அற்பமான அத்தாட்சியினல் தள்ளுபடியாய்ப்போம்.

II. அநுபவத்துக்கு முன்னர் வெளிப்படுத்தல் ஆட்சேபனைக்குரிய தென்பதைக் கவனிப்போம்.

1. பொதுப்படப் பார்க்கில், இயலைப்பற்றிய அறிவைப்புகட்டும்வகை, மேரை, அளவு முதலியவைகள் அநுபவத்துக்கு முன்பெரிய ஆட்சேபனைகளுக்கு இடமாகும். திருஷ்டாந்தமாக,

(1) கடவுள் புத்தியில்லாத மிருகங்களுக்குக் கொடுத்திருக்கிற இயற்கை அறிவு, நரஜீவன்களுககுக் கொடுத்திருக்கிற செயற்கை அறிவிலும் சில விஷயங்களில் விசேஷித்ததென்று பார்க்கிறோம்.

(2) மனுஷர் பூமியிலுள்ள சத்து சித்துப் பொருள்களின் தன்மையையும், பிரமாணங்களையும், வானசோதிகளின் விதிகளையும் நடைகளையும் எளிதில் அறிந்தும, தங்களைப்பற்றிய அவிழ்தம் முதலிய எத்தனங்களை ஏற்கனவே அறிந்து கொள்ளக்கூடாதவர்களா யிருக்கிறார்கள்.

(3) மனுஷர் வெகுகாலமாய்க் கண்டறியாத புகையந்திரம், மின்தாது சூத்திரம் முதலியவைகள் தற்செயலாய்க் கண்டறியப்பட் டிருக்கின்றன.

(4) மனுஷர் பேசும் பாஷையானது சில விஷயங்களில் கருத்தைப் பூரணமாய் வெளிப்படுத்தக கூடாததும், இலபொருள் பயனுள்ளதாயு மிருக்கிறதே. கடவுள் இதைவிட நமக்கு அநுகூலமாக நன்மை செய்யக்கூடாதா?

(5) மிருகங்கள் சிலவிஷயங்களில் மனுஷரைப் பார்க்கிலும் அதிக நுண்ணறிவும் முன்னறிவும் காட்டுகின்றன. இதை யார்தான் எண்ணக்கூடும்?

2. குறிப்பாய்ப் பார்க்கில, ஆதிச்சபையிலே கொரிந்தியருக்கு அளிக்கப்பட்ட அற்புத வரமானது, அதைத் தகுந்தபடி கையாடாமல் சபையில் தாறுமாறை வருவித்தபடியால், அது சரியான அற்புத வரமல்லவென்று ஆட்சேபிககப் படுவதுண்டு. கடவுள் அற்புதவரங்களைச் சரியானபடி உபயோகிக்கிறவர்களுக்கு அல்லவா கொடுக்கவேண்டியது, அல்லது சிந்தனைக் கிடமில்

லாமல் அதைச் சாவதானமாய்க் கையாடுகிறவர்களுக்கு அல்லவா அளிக்க வேண்டியது; அல்லது.

(1) அந்த வரங்களைக் கொடுப்பதற்குத் தகுந்த விவேகிகளைத் தெரிந்துகொள்ள வேண்டியது; அல்லது.

(2) அவர்களுக்கு வரத்தோடே விவேகத்தையும் கொடுக்கவேண்டியது; அல்லது.

(3) அந்த வரங்களை உபயோகிக்க, ஒவ்வொரு தருணத்திலும் அவர்களை அற்புத வகையாய் நடத்தவேண்டியது என்பாருண்டு.

உத்தரவு.

1. அதைக் குறித்து நிதானிக்க நாம் திறமை யுள்ளவர்களல்ல.

2. விசேஷித்த இயற்கை வரங்கள் ஞானிகளுக்கும விவேகிகளுக்கும் மாத்திரம் கொடுக்கப்பட் டிருக்கிறதில்லையே.

3. இயல்பாய் நமக்குக் கிடைக்கிற பயிர்ச்சியும் எப்போதும் இன்பத்தைத் தரத்தக்க தல்லவே.

3. மற்ற விஷயங்களிலும் இயலினாலும் அருளினாலும் உண்டாகிற அறிவுக்கு ஒப்புமை யுண்டு.

(1) இரண்டிலும் அவசியமான நாடோடிய கடமைகள் தெளிவாய் சாதாரணமாக விளங்கும்.

(2) இரண்டிலும் நுட்பமான காரியங்களை அறிய அதிகப் படிப்பும முயற்சியும் வேண்டும்.

(3) இரண்டுக்கும் தடையா யிருப்பவைகளுக்கும் உதவியா யிருப்பவைகளுக்கும் ஒப்புமை யிருக்கிறது.

(4) தற்காலத்தில அவை இரண்டையும் பற்றி நமக்கு இருக்கிற அறிவானது இன்னமும் அறியப்படாதவைகளோடே ஒப்பிட்டுப் பார்க்கில், அது நெடுங்கணக்கு என விளங்கும்.

(5) வேதத்திலுள்ள சில பாகங்களைச் சரியானபடி அறியும்படி, இன்னமும் நிறைவேற வேண்டிய காரியங்களுண்டு.

ஆட்சேபனை. 1.

1. இந்த உபமான சம்பந்தம் ஒன்றுக்கும் உதவாது, ஏனெனில் வைதீக அறிவு இயலுக்குரிய அறிவைவிட மிக முக்கியமானது; உவமான சம்பந்தம் முக்கிய விஷயத்தில் தவறுயிருக்கிறது.

உத்தரவு.

1. அது தவறல்ல, முக்கியமோ, முக்கிய மல்லவோ, என்பது காரியமல்ல. கடவுள் இருமுறைமையினுலும் நாம் கருதியபடி நம்மைப் போதிப்பிக்கிருரா? என்பதுதான் காரியம். போதனையின் அருமையானது அதைக் கற்பிக்கும் வகைக்குச் சம்பந்த மற்றது.

2. இயலைப் பற்றிய சில ஆதார அறிவு மிக அவசியம். திருஷ்டாந்தமாக, நடக்கும்படி தரையைப்போல தண்ணீர் உதவ மாட்டாது.

3. கடவுள் உலக நன்மைகளை நாம் முதன்மையானவிதம் என்று எண்ணுகிற வகைப்படி பொதுப்பட அருளுகிறதில்லை என்பதை அநுபோகத்தால் அறிந்திருக்கிறேும். அதோடு அவர் கற்பிக்கும் இயலுக்குரிய வகையைப் பார்க்கில், அது இந்த உபமான சம்பந்தத்துக்குப் போதுமானது என்றறியலாம்.

ஆட்சேபனை. 2.

மனிதர் கெட்டுப்போ யிருக்கிருர்கள்; அதற்குக் கிறிஸ்து மார்க்கம் பரிகாரத்தைக் காட்டுகிறது.

1. பரிகாரமானது ஆதியிலே வெளிப்படுத்தப் படாமல், வெகு காலத்துக்குப்பின் சொற்பச்சனங்களுக்கு மாத்திரம் வெளிப் படுத்தப்படுவது நம்பக் கூடியதா?

2. இயலைப் போலவே அந்தப் பரிகாரம் சந்தேகத்துக்குரியதும் கருகலுமா யிருக்கிறதே அதை நம்பலாமா?

உத்தரவு.

1. அப்படி யிருந்தபோதிலும், இயலுக்கும் அருளுக்கும் ஒரே காரண கர்த்தாவானால், அவை இரண்டும் சம்பந்தப்பட் டிருக்கவேண்டியது அவசியம்.

2. கடவுள் சரீர வியாதிகளுக்கு இயலிலே பரிகாரத்தை உண்டுபண்ணி வைத்திருக்கிறார். ஆனால் அவைகள் வெகு காலமாய் வெளிப்படாமலும், பின்பு சிலருக்கு மாத்திரம் வெளிப்பட்டும், அவைகளைச் சரியானபடி உபயோகியாததினால் வேறே வியாதிகளைப் பிறப்பிக்கிறதும், சிலவைகளை மனதார வேண்டாம் என்று வெறுத்துத் தள்ளுகிறதுமாய் இருக்கிற படியினாலே (1) (2) சொல்லிய காரியங்கள் நமபத் தக்கவைகளே.

3. இந்த ஆட்சேபனையில் அடங்கிய விவகாரம் மிதமிஞ்சியது. ஏனெனில் இது விஷயங்களில் நாம் முதற்றரமான வகையென்று எண்ணுகிறபடி கடவுள் நடப்பிக்கிறதா யிருந்தால், அவர் வியாதிகளை வரவொட்டா திருக்கச்செய்ய வேண்டுமே. இப்படி ஆட்சேபிப்பது நியாயமா?

சாத்தியம்.

வேத விஷயத்தில் யுத்திக்கடுத்த காரியம்.

1. வேதத்தின் அர்த்தத்தையும் அத்தாட்சியையும் தர்மத்தையும் நிதானிக்கிறதோடு பின்வரும் விஷயங்களையும் நிதானிக்கலாம். அவையாவன;

2. அளவற்ற சம்பூரணவஸ்து, நமக்கு அருளவேண்டிய கட்டளைகள், வேதத்தில் அடங்கியிருக்கிறதோ என்பதை நிதானிக்கவல்ல, அவைகளை நிதானிக்க வகையில்லை.

3. இயலுக்கு அதிபதி யானவருடைய தர்மத்துக்கு அதாவது அவருடைய ஞானம், நீதி, நன்மைத் தன்மைக்கு விரோதமானவைகள் அதிலடங்கி யிருக்கிறதா இல்லையா? என்பதை நிதானிக் கலாம்.

4. இந்த ஆதாரத்தின்பேரில் ஏகேச்சுரவாதிகள் வேதத்தை அருளினவருக்கு விரோதமாய்ச் சொல்லும் ஆட்சேபனை இயற்கை காரணருக்கு செல்லத் தக்கதால், அது அவர்களுக்குச் சுய நியாய விரோதமாய் முடியும்.

ஆட்சேபனை.

கடவுள் கானானியரைச் சமூலமாய் அழித்துப்போடவேண்டுமென்று யூதருக்கு உத்தரவு கொடுக்க வில்லையா, அது, அநீதி யல்லவா?

உத்தரவு.

1. நியாயமான கட்டளைக்குக் கீழ்ப்படிந்து அதை நிறைவேற்றுவது வேறே, அநீதியான குணத்தைப் பேணி வளர்ப்பது வேறே.

2. நியாயமான அதிகாரிகளுடைய உத்தரவின் பேரில் கொலைபுரிவது தப்பிதமலல, திருஷ்டாந்தமாக யுத்த காலத்தில் போர்வீரர் மீ. ஜீவனுக்கு அதிகாரியாகிய இயற்கை காரணருடைய கட்டளையின்படி செய்வதும் தப்பிதமல்ல.

3 கடவுள் அநீதியாய் நாம் காரியங்களை நடப்பிக்கும்படி ஒருக்காலும் கட்டளை யிடுகிறதே யில்லை.

4. இப்படிப்பட்ட வேத வாக்கியங்கள கருசலானவைகளல்ல. ஆனல் ஏகேச்சுர வாதிகளுக்கு அவைகள் இடறலா யிருக்கின்றன.

5. இவ்வித ஆட்சேபனை இயல் முறைமைக்குரிய விஷயத்திலும் பெரிய ஆட்சேபனையாய்க் காணப்படும். திருஷ்டாந்தமாக. மின்னல், ஜலப் பிரளயம்,

அக்கினிப் பிரளயம், யுத்தம், பஞ்சம், கொள்ளை நோய் முதலியவற்றால் அநேகர் மடிந்து போவதுண்டு.

யுத்தியினால் வேத அத்தாட்சிகளைப் பகுத்தறியலாம்.

2. வேத உண்மையைப்பற்றி யுத்திக்கடுத்த காரியம்.

1. இது சத்தியமான அத்தாட்சிக்குத் தக்கதா யிருக்குமென்பதை அறியலாம்.

2. அதின் உபதேசங்களைப் பற்றிய ஆட்சேபனைகளால், அதின் உண்மை நிராகரிக்கப்பட மாட்டாது. இவ்வித ஆட்சேபனைகள் இயற்கை காரணரைப்பற்றியும் சொல்லக்கூடியது. அது நியாயமற்றதென்று முன்னமே ரூபகாரப்படுத்தி யிருக்கிறோம்.

3. முக்கியமாய் ஆட்சேபிக்கப்பட்ட காரியங்களே, இயற்கையில் நாம் அநுபோகத்தால் அறியும் காரியங்களுக்கு உவமான சம்பந்தமா யிருக்கிறது.

4. கிறிஸ்து மார்க்கமானது இன்னபடி இருக்கவேண்டும் என்று மனிதர் சொல்வதற்கு விகற்பமா யிருப்பதே, அதின் அநுகூலத்துக்குச் சுபட்ச நியாயமாயிருக்கிறது என் றறியலாம்.

---

## 4. அதிகாரம்.

கிறிஸ்து மார்க்கத்தின் முறைமையானது சிற்றறிவாளராகிய மனுஷருக்கு முற்றிலும் விளங்காமல் குறைவாய் விளங்கும் முறைமையென்பது.

வேதத்தில் அடங்கிய சங்கதிகள் நம்பப்படத்தக்கவைகள் என்பதை முந்தின அதிகாரத்தில் உபமான சம்பந்தத்தைக்கொண்டு காட்டியிருக்கிறோம். ஆனால் அந்த நியாயமானது கிறிஸ்துமார்க்கத்தில் சத்தியமும் நியாயமும் நன்மையுமான காரியங்கள் அடங்கியிருக்கின்றனவென்றும், அவைகள் நமது நம்பிக்கைக்குரியவைகள் என்றும் உறுதிப்படுத்தப் போதுமான நியாய

மல்லவென்றும் ஆட்சேபிப்பாருண்டு. இப்படிப்பட்ட ஆட்சேபனை உலக இயலுக்கும் செல்லத்தக்கதென்று முதலாம்பங்கு ஏழாம் அதிகாரத்தில் காட்டியிருக்கிறது.

1. உலக இயல் ஒரு முறைமை என்றும், அது நமது புத்திக்கெட்டாததென்றும் ;

2. அந்த முறைமையில் பலபிரயத்தினங்கள் மூலமாய்க் காரியசித்தி நடந்தேறுகிற தென்றும் ;

3. அந்த முறைமை பொது விதிகளினாலே நடந்தேறுகிறதென்றும் ரூபித்திருக்கிறது. ஆகவே, இயல்வேதத்தில் ஆட்சேபிக்கப்படும் விஷயங்கள்.

1. கடவுளின்ஞானம், நீதி, நன்மைகக்கேற்றதாயும் ;

2. தர்ம இலட்சணங்களுக்குத் திருஷ்டாந்தங்களாயும் ;

3. தர்ம இலட்சணங்களுககுப் பூரணமாதிரியாயு மிருக்கலாம். இந்த அதிகாரத்தில் வெளிப்படுத்தலைப் பற்றியும் அப்படியே நியாயஞ் சொல்லலாம.

I. கிறிஸ்துமார்க்கமானது ஒரு முறைமையாயும், நமது புத்திககு எட்டாத முறைமையாயு மிருக்கிறது.

1. அது மனிதர் இரட்சிப்புக்காக ஏற்படுத்தப்படட முறைமை.

(1) அநத முறைமையானது, கடவுளுடைய தர்ம ஆளுகையின் பொது முறைமைககுள் அடஙகியதும், அந்தத் தர்ம ஆளுகையின் பொதுமுறைமை நிறைவாகர மாவதற்கும் நோக்கமுள்ளதா யிருக்கிறது. யோவான் 11. 52. 2-பேதுரு 3. 13.

(2) அந்த முறைமையானது ஒன்றையொன்று சார்ந்து ஐக்கியமாய்க் கிரியையை நடப்பிக்கிற காரணங்களைப் பொருந்தினதா யிருக்கிறது. அதிலடக்கம்.

க. ஏற்கனவே செய்யப்பட்ட ஆயத்த ஏற்பாடுகள் 1-பேது 1: 11. 12.

உ. மேசியாவின் மனுடவதாரம், சிலுவைமரணம், மகிமை. பிலி 2. 6—11.

ங. பரிசுத்த ஆவியானவரின் கிரியை, பாவிகளைக் குணப்படுத்தி, அவர்களைத் தாங்கித்தேற்றி, மேசியாவின் புண்ணியத்தை அவர்களுக்குப் பலிக்கச்செய்து பரத்துக்கு அவர்களைப் பக்குவப் படுத்தி வருவது.

ச. மேசியா, தற்காலத்தில் தமது சபையை ஆளும் அதரிசிய ஆளுகை. யோவான் 14: 2.

ரு. அவர் நியாயந்தீர்க்க திரும்பிவருவதும், தமது இராச்சியத்தை ஸதாபிப்பதுமே. யோ. 5 22. 1-கொரி 15. 25 - 28, மத் 28. 18.

2. அது புத்திக்கெட்டாத முறைமை.

(1) வேதத்தில் அது அப்படித் திட்டமாய்ச் சாதிக்கப் பட்டிருக்கிறது "தேவபக்திக்குரிய ரகசியம்' 1. தீமோ. 3 : 16.

(2) அநுபோகத்தினால் அது அப்படிப்பட்ட முறைமையென்று நாம் அறிந்திருக்கிறோம். வெளிப்படுத்தப்பட் டிருககிறவைகள் எல்லாம், இன்னமும் வெளிப்படாதவைகளுக்கு தொடர்ந் தேர்ச்சியாய்ச் செல்வதால், நாம் அதைப்பற்றி அறிவீனரா யிருக்கிறோம்.

(3) அறியப்பட்டிருக்கிற சொற்பமான காரியத்தை இன்னமும் அறியப்படாத சவிஸ்தாரமான காரியத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கில், அது இயலில் அறியப்பட்டும் அறியப்படாததுமான காரியத்துக்கு இசைவான சம்பந்தமாயிருக்கிறது.

11. கிறிஸ்துமார்க்கமானது சித்திபெறும்படி பிரயத்தினங்களை கையாடு முறைமையா யிருக்கிறது.

கிறிஸ்து மார்க்கத்தில் அடங்கிய சங்கதிகள் உபதேசங்கள் மதியீனமாகக் காணப்படுவதை காரண காரியமா

கப் பார்க்கில், அது கிறிஸ்து மார்க்கத்துக்கு விரோதமான நியாயமாகாது. அவைகள் சிறந்த சித்திக்குச் சிறந்த எத்தனங்களா யிருக்கலாம்.

III. கிறிஸ்துமார்க்க மானது பொதுவிதிகளால் நடத்தப் படுகிறது.

1. உலக இயல் பொதுவிதிகளால் நடத்தப்படுகிற தென்பது உண்மை.

(1) விபட்சமாக, இயல் பொதுவிதியால் நடத்தப்படுகிற தென்கிற காரியம் பொதுவிதிகள் ஒவ்வொன்றையும் நாம் அறிந்திருக்கிறோம் என்பதினால் ரூபகாரப் படுகிறதில்லை; ஏனெனில் பொதுவிதிகளில் சிலவைகளை நாம் இன்னமும் அறியாதவர்களா யிருக்கிறோம். திருஷ்டாந்தமாக.

க. பூகம்பம், கொள்ளைநோய், பஞ்சம் முதலியவற்றின் பிரமாணத்தையும்;

உ. குணபேதங்கள், ஸ்திதி பேதங்களைப் பற்றிய பிரமாணத்தையும்;

ந. உலகத்தில் சம்பவிக்கிற திரளான விசேஷித்த காரியங்களைப்பற்றிய பிரமாணத்தையும்;

ச. கருத்துத் தொடர்புகளைப்பற்றிய பிரமாணத்தையும் அறியாதவர்களா யிருக்கிறோம்.

ரு. சம்பவிக்கும் காரியங்களைத் தற்செயல் என்று சொல்வதைப் பார்க்கையில், அது நம்முடைய அறிவீனத்தை விளக்குகிறது. ஏனெனில் தற்செயலானது ஒரு காரியத்துக்காவது காரணமல்ல,

(2) சுபட்சமாக; இயல் பொதுவிதியால் நடத்தப்படுகிற காரியமானது, பொதுவிதியால் நடத்தப்படும் இயலின் ஓர்பாகத்தை நாம் அறிந்து, அப்படியே இயல் முழுமையும் நடத்தப்படும் என்று நிதானிக்கும் அநுமான ரூபகாரமா யிருக்கிறது.

2. கிறிஸ்து மார்க்கமும் பொதுவிதியின் பயனுயிருக்கலாம்.

ஆட்சேபனை.

1. ஆவிக்குரிய இந்தப் பொதுவிதிகள் நமக்குத் தெரியாதவைகளா யிருப்பதால், அப்படிப்பட்ட விதிகள் இருக்கமாட்டாது.

உத்தரவு.

1. இயலில் பலவிதிகளை நாம் அறியாதவர்களா யிருக்கிறோம், அதினால் அவைகள் இல்லையென்று சொல்லலாமா? திருஷ்டாந்தமாக,

க. ஆயுசைப்பற்றியவிதி ;

உ. பலருக்குப் பலவகையாய்க் கொடுக்கப்பட்டிருக்கிற அறிவைப்பற்றியவிதி ;

ங. இந்த விதிகளுக்குக் காரண மின்னதென்று நாம் அறியக்கூடா திருந்தும் பொதுவிதியின்படி நடந்தேறுவதை அறிவோம்.

2. வேத இயலுக்கும் உலக இயலுக்குமுரிய பொதுவிதிகளுக்குக் காரணர் ஒருவரே இயலின் பொதுவிதி பூரணமாய் விளங்காததுபோலவே, வேத இயல் பொதுவிதியும் பூரணமாய் விளங்காதிருக்கிறது.

ஆட்சேபனை. 2.

கிறிஸ்துமார்க்கமானது எளிதாய் அறியக்கூடாத முறைமை என்பதற்குச் சொல்லப்படும் உத்தரவு சரியென்று ஒப்புக்கொள்வோம். ஆனால் ஏன் ஒருமுறைமை இருக்கவேண்டும்,

உத்தரவு.

1. இயல், ஒரு முறைமை என்பது நமக்கு விளங்காததுபோல கிறிஸ்துமார்க்கமும் ஒருமுறைமை என்பது விளங்காதிருக்கிறது.

2. உள்ளபடி இயல் ஒருமுறைமையா யிருக்கிறது, கிறிஸ்துமார்க்கமும் அப்படிப்பட்டதா யிருக்கலாம்.

3. ஆகவே கிறிஸ்துமார்க்கமானது நாம் பூரணமாய் அறியக்கூடாத முறைமையாயிருந்தும் அதின் நோக்கத்தை நிறைவேற்ற வழிவகைகள், பிரயத்தினங்கள் கையாடப் படுவதால், அது பொதுவிதியால் நடத்தப்படலாம்.

சாதாரண சாத்தியங்கள்.

1. இயற்கையில் காணப்படுவதுபோல கிறிஸ்து மார்க்கத்திலும் ஆட்சேபனைகள் காணப்படலாம்.

2. இயலுக்கு விரோதமாய்ச் சொல்லப்படும ஆட்சேபனைக்குக் கொடுக்கப்படும் உத்தரவு கிறிஸ்து மார்க்கத்துக்கு விரோதமாய்ச் சொல்லப்படும் ஆட்சேபனைக்கும் உத்தரவாயிருக்கும்.

அநுபந்தம். கிறிஸ்து மார்க்கத்தின் முழுமுறைமைக்கும் விரோதமாய்ச் சொல்லப்படும் ஆட்சேபனைக்குரிய விவாதம், அதாவது, மனிதர் புத்திக் குறைவுள்ளவர்களானதால் நாளாவட்டத்தில் தாமதமாயும் சுற்றுச் சுழலாயும் காரியசித்திக்கு ஏற்றவைகளைக் கையாடுவார்கள்; கிறிஸ்து மார்க்கத்தின் முறைமையைப் பார்க்கையில், தேவனுக்கு அப்படிப்பட்ட பெலவீனங்கள் உண்டென்று சொல்லத்தகுமல்லவா?

உத்தரவு.

1. ஏகேச்சுரவாதிகள் இப்படிச் சொன்னால், அது அவர்களுடைய மதியீனத்தைக்காட்டும். இயலிலே கடவுள் தமது நோக்கத்தை நிறைவேற்ற எங்கும் பலபல எத்தனங்களை உபயோகிப்பதைப் பார்க்கலாம்.

2. கடவுள் அப்படி எத்தனங்களைக்கொண்டு நடப்பிப்பது உலக இயலில் காணப்படுவதுபோல, வேத இயலிலும் அவைகள் பெரிதாகக் காணப்படும் இரகசியமாயிருக்கிறது.

3. காரண காரியத்தைப்பற்றிய வேற்றுமையானது, நம்முடைய வரையறை தன்மையினாலுண்டா

கிறது. ஆனால் அந்த வேற்றுமை பேரறிவாளருக்கு உண்டெனச் சொல்லக்கூடாது.

4. இயல் முறைமையும் வேதமுறைமையும் பல எத்தனங்களைக்கொண்டு படிப்படியாய் மறுமைக்குப் பூரணபக்குவமடைய நடந்தேறிக்கொண்டு போகிறது.

5 மனிதர் காரியங்கள் உடனே ஆகவேண்டும் என்று விரும்புவார்கள். கடவுள் எல்லாவற்றையும் தமது அநாதி தீர்மானத்தின்படி நிதானத்தோடு நடத்தி, பயனுக்காகக் காத்துக்கொண்டிருக்கிறார். இயற்கையிலும் வேத இயலிலும் அப்படியே நடப்பிக்கிறார்.

---

## 5. அதிகாரம்.

தேவனுக்கும் மனிதருக்கும் மத்தியஸ்தர் உண்டென்றும் அவராலே உலகம் இரட்சிக்கப் படுகிறதென்றும் சொல்லுகிற கிறிஸ்து மார்க்கத்துக்கேயுரிய உபதேசத்தைப்பற்றியது.

அநுபோகத்தினால் அறிந்திருக்கிறபடி கடவுளின் இயற்கை ஆளுகைககும் தர்ம ஆளுகைக்குமுள்ள உபமான சம்பந்தத்தைக்கொண்டு கிறிஸ்துவின் மூலமாய் மனிதர் இரட்சிப்படைவது நம்பக்கூடியகாரியம் என்றறியலாம்.

I. இதைப் பொதுவாயும்,

II. இதை விசேஷித்தும்,

III. வெளிப்படுத்தலில் சொல்லப்பட்டிருக்கிற மத்தியஸ்தரைப் பற்றிய விஷயமானது இயற்கை ஆளுகையில் காணப்படும் சங்கதிகளுக்கு ஒத்திருக்கிறது என்றும் பார்ப்போம்.

1. இதைப் பொதுவாய்ப் பார்ப்போம், கிறிஸ்துவின் மத்தியஸ்தம் நம்பப்படத் தக்கதல்லவென்று ஏகேச்சுரவாதிகள் சொல்லும் ஆட்சேபனைக்கு, இவ்வுலகத்துக்

குரிய சகலநன்மைகளும் இயல்பாய் அதாவது கடவுள் ஏற்பாட்டின்படி மற்றவர்கள் மூலமாய்க் கிடைப்பதே உத்தரவா யிருக்கிறது. திருஷ்டாந்தமாக, பிறர் உதவிகளினால், நாம் வளர்ந்து காக்கப்பட்டு, படிப்பு, தொழில், உத்தியோகம்பெற்று அநுபவிக்கிறோம். ஆகவே உலக இயலிலிருக்கிறபடி அருளிலும் மத்தியஸ்தர் ஒருவர் உண்டென்கிற கிறிஸ்துமார்க்க உபதேசம் நம்பப்படத்தக்கது என்று அறியலாம்.

II. இதை விசேஷித்துப் பார்ப்போம். இந்த ஜீவியத்திலே தேவனுடைய இயற்கை ஆளுகை முறைமையிலும் தர்ம ஆளுகை முறைமையிலும் தண்டனையைப்பற்றி அநுபோகத்தால் அறியப்பட்டிருக்கிற காரியங்கள், கிறிஸ்துவானவர், மத்தியஸ்தராக நிறைவேற்றின தொழில்களுக்கு இசைவாய் இருக்கிறதென்று காட்டுகின்றன.

1 தண்டனையைச் செலுத்துகிற வழிவகைகள். மறுமைத் தண்டனையானது, கடவுளின் இயற்கை ஆளுகையில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிற வகைக்கு அதாவது காரண காரியங்களுக்கு ஒப்பாயிருக்கலாம்.

(1) மறுமையில் உண்டாகும் தண்டனையானது, தக்கது என்பதையும், அது இன்னதண்டனை, இன்ன வகையாய், இன்னாரைக்கொண்டு செலுத்தப்படும் என்பதையும்பற்றிய சகல நியாயங்களையும் நாம் அறியாதவர்களா யிருக்கிறோம். என்றாலும் இயற்கையாய்த் தீவினையின்பலனாக தண்டனை செலுத்தப்படுவதுபோல, மறுமையிலும் அது செலுத்தப்படலாம்.

(2) கடவுள் நமக்குத் தந்திருக்கிற தன்மையையும், அவர் நம்மை வைத்திருக்கிற நிலைமையையும் பார்க்கில், இம்மையில் இயல்பாய்த் தீவினையின் பயனாகத் தண்டனைநேரிடுவதுபோல், மறுமையிலும் இந்தப் பிரகாரமாய் நேரிடலாம்.

ஆட்சேபனை.

இதினால் கடவுள் மறுமையில் தண்டனையைச் செலுத்தாமல், இயலே அதைச் செலுத்துகிறதென்று சொல்லலாகுமே? இது ஒவ்வாத போதனையல்லவா?

உத்தரவு.

1. இயலை நடத்துகிறவர் கடவுளாகையால், இயல்பாய் நடந்தேறுகிற காரியமும் தேவசெயல் என்றறியவேண்டும்.

2. வேதத்தில் இயல்பாய் நடக்கும் தண்டனையானது, கடவுள் செயலால் நடத்தப்படுகிறதென்று காட்டியிருக்கிறது.

3. தெய்வீகமாய் நடக்கும் தண்டனை கொடுங்கோன்மையாய்ச் செலுத்தப்படாமல், நீதி நியாயமாய்ச் செலுத்தப்படும். ஆனால் அதைச் செலுத்தும்வகை வித்தியாசமாயிருக்கும்.

4 அந்தவகை, தீவினைக்கு இயல்பான பயனாகவருகிறதென்று வைத்துகொண்டாலும், உவமான சம்பந்தத்தின்படி அது நமது காரியத்துக்குப் போதுமானது.

2. தண்டனையைப்பற்றிய சாந்தியைக்குறித்துப் பார்ப்போம். இச்சீவியத்தில் செலுத்தப்படும் தண்டனையை நிவிர்த்திக்க, அல்லது சாந்திசெய்ய, இயல்பான பிரயத்தினங்கள் நியமிக்கப்பட்டிருக்கிறது. அப்படியே மறுமையின் தண்டனையை நிவிர்த்திக்கவகையும் நியமிக்கப்பட்டிருக்கலாம்.

(1) அநுபோகத்தினால் நாம் அறிந்திருக்கிறபடி, நமது கிரியைகள் தடுக்கப்படாதிருந்தால், அவைகள் பூரண தண்டனையை வருவிக்கும்.

(2) இந்தத்தண்டனை விலக்கப்படாதிருந்தால், அல்லது சாந்திசெய்ய படாதிருந்தால் இவ்வுலக ஏற்பாடுகள் மிகவும் கண்டிப்புள்ளதாயிருக்கும். அப்படி யிருந்தாலும், அவைகள் நன்மைக் கேதுவாயிருக்கலாம்.

(3) இந்தத் தண்டனையானது, ஏற்கனவே நாம் செய்யும் முயற்சியினாலும், பிறர் உதவியினாலும் நிவிர்த்திக்க அல்லது சாந்திபண்ணப் படலாம் இப்படிப்பட்ட சகாயம் சன்மார்க்க அல்லது தர்ம பிரமாணத்துக்குப் பின்னமல்ல.

(4) ஆகவே பொது விதிப்படி, மறுமையில் பாவத்துக்கு நேரிடும் தண்டனையும் நிவிர்த்திக்க அல்லது சாந்திபண்ணப்படலாம்.

ஆட்சேபனை.

கடவுள் இந்தத் தண்டனையை எல்லாம் தமது சர்வவல்லமையால் நிறுத்திப்போடக் கூடாதா?

உத்தரவு.

1. நாம் அநுபோகத்தினால் அறிந்திருக்கிறபடி நெறிகேட்டினாலும் அசாக்கிரதையினாலும் வருந்தண்டனை பயங்கரமுள்ளதா யிருக்கிறது. மனதார துணிகரமாய்ச் செய்யும் பாவங்களுக்கு வருந்தண்டனையோ மிகக் கொடியதாயிருக்கும்.

2. இவ்வுலகில் தீமைக்குநேரிடும் பயன், சிலவேளைகளில் மீளாமலே அழிவும் மரணமுமாய் முடிவதுண்டு.

3. ஆகவே கடவுள் தண்டனையைத் தடுப்பது, அவருடைய நித்திய நீதிச்சட்டத்துக் கேற்றதா யிராதிருக்கலாம்.

(5) இந்தத்தண்டனையை நிவிர்த்திக்க நம்மால் ஏலாது ஏனெனில்,

க. தீவினையின்பயன் இன்னதென்றும், தண்டனைக்குரிய சகலநியாயங்கள் இன்னதென்றும் அறியோம்.

உ. இன்னகாரியங்கள் சம்பவிக்கும் என்று முழுவதும் அறியாதிருக்கிறோம்.

ந. அது சம்பவிக்கும்வகை இன்னதென்றும் நாம் பூரணமாய் அறியாதிருக்கிறோம்.

(6) இவ்வுலக அநுபவமாது, உபமான சம்பந்தத்தைக் கொண்டு இன்னவகையாய்த் தண்டனையை நிவிர்த்திக்கலாம் என்பதைச் சொல்லலாம்.

க. மனந் திரும்புதலானது செய்த குற்றத்துக்கு வர வேண்டிய தண்டனை நிறுத்த ஏலாததா யிருக்கிறது. நாம் அந்தத் தண்டனையைத் தடுக்கவும் சக்தியற்றவர்கள். உதவிக்காக மற்றவர்கள்பேரில் நாம் சாரவேண்டியதாயிருக்கிறது.

உ. இந்தஉதவி நமது துர்நடக்கையின்பயனால் பெற வேண்டியதாய் நேரிடுகிறது. மீட்சிக்கு அந்த உதவி அவசியம்.

ஆட்சேபனை.

கிறிஸ்துவானவரின் மத்தியஸ்தமீட்பு அவசியமில்லை; ஏனெனில் மனந்திரும்புதல் போதுமான பிராயச்சித்தமாயிருக்கிறது.

உத்தரவு.

(1) இராசாங்க ஆளுகையைப்பற்றி நமக்கிருக்கிற எண்ணத்தையும், இயற்கை அமைக்கப்பட்டிருக்கிற தன்மையையும் பார்க்கில், இனிமேல் சீர்ப்பட்டுக்கொள்வது, இதற்கு முன்செய்த தீமைக்கு நேரிடும் தண்டனையை எல்லா விஷயத்திலும் நிவிர்த்திக்கமாட்டாது என்பதை அறிவோம்.

(2) அஞ்ஞான இடங்களில் செலுத்தப்படும் பிராயச்சித்த பலிகளைப் பார்க்கில், மனந்திரும்புதல், பாவத்தை நிவிர்த்திக்கப் போதுமானதல்ல என்பது மனிதருடைய பொதுவான எண்ணமென்று அறியலாம்.

(3) மனிதர் பாவத்தினால் கறைப்பட்டிருப்பதால், அவர்கள் ஏற்றவண்ணம் மனந்திரும்ப ஏலாதவர்களாயிருக்கிறார்கள்.

(4) அவர்கள் மனந்திரும்பினார்கள் என்று வைத்துக் கொண்டாலும், கடவுள் தர்ம அதிபதியா யிருப்ப

தால், சாதாரண நீதிக்குப் பங்கம் வராதபடிக்குத் தண்டிக்கும்படி நேரிடும்.

III. வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிற சங்கதிகள் இயற்கை ஆளுகையில் காணப்படும் சங்கதிகளுக்குச் சம்பந்தமாயிருக்கிறது. வேதமானது பாவத்தின் பயனாகவரும் மறுமைத்தண்டனை நிவிர்த்தியாவதற்குத் திருப்திகரமான போந்தவகையை விளக்கிக் காட்டுகிறது.

1. உலகத்தாருடைய பாவத்துக்குவரும் தண்டனை மத்தியஸ்தத்தால் நிவிர்த்தியாகும் விஷயத்தைப் பொதுப்படப் பார்ப்போம்.

(1) கிறிஸ்துமார்க்க மானது, உலகம் கெட்டுப்போயிருக்கிறதென்று சொல்லுகிறது.

(2) கிறிஸ்துமார்க்கம், தேவாளுகையின் சட்டமானது, குற்றத்துக்கு மன்னிப்புண்டென்று போதிக்கிறது. அதாவது மறுமைத்தண்டனை நிவிர்த்தியாகக் கூடியது என்று கற்பிக்கிறது. ஆனால்;

க. மனந் திரும்புதலினால் மாத்திரமல்ல,

உ. உலகத்தில் நட்டவாளிக்கும் நட்டம் செய்தவனுக்கும் இடையில் மூன்றாவதான ஒருவர் குறுக்கிட்டு, உதவிபுரிவது போலவே, வைதீக விஷயத்திலும் மூன்றாவதான ஒருவர் இரக்கத்தினாலும் அன்பினாலும் ஏவப்பட்டு இடையீடு செய்வதால், நிவிர்த்தியாகும் என்று உபதேசிக்கிறது.

ந. இந்த மூன்றாவதானவர் இயேசுகிறிஸ்துவே அவர் பாவத்தை நிவிர்த்திக்கும்படி உத்தரவாதம் செய்தார்.

ஆட்சேபனை. 1.

1. இப்படிப்பட்ட முறைமை தெய்வீக காருண்யத்துக்கு விகற்பமானதல்லவா,

உத்தரவு.

அப்படியல்ல, கடவுள் இப்படி இடையிடு செய்யாதிருந்தால், உலகம் முழுமையும் அழிந்துபோயிருக்கும்.

ஆட்சேபனை (2)

இப்படிப்பட்ட முறைமையினாலே மனிதர் நிர்ப்பந்த நிலைமையி லிருக்கிறார்கள் என்று காணப்படுகிறதல்லவா?

உத்தரவு.

(1) அது மெய்தான். ஆனால் கிறிஸ்துமார்க்கமானது அவர்களை அந்த நிலைமையில் வைக்கவில்லை. அவர்கள் அந்த நிலைமையி லிருப்பதாக, அது காட்டுகிறது.

(2) மறுக்கப்படக்கூடாத சங்கதிகளினால் மனிதர் அழிவுக்குரிய சீர்கெட்ட நிலைமையி லிருக்கிறார்கள் என்பது பிரத்தியட்சமா யிருக்கிறது. இதைப்பற்றி நல்லமனிதரின் அறிக்கையும், பொல்லாதவர்களின் அக்கிரமங்களும், இதர மதஸ்தரின் சாட்சியமும், சமஸ்தமானவர்களின் ஏக அநுபவமாயிருக்கிறது.

(3) மனிதருடைய இந்தச் சீர்கெட்ட நிலைமைக்குக் காரணம் ஆதித்தாய் தந்தைகளின் பாவமே. இது தெய்வீக ஆளுகையில் நடக்கும் காரியங்களுக்குச் சம்பந்தமாயிருக்கிறது. திருஷ்டாந்தமாக, பெற்றோரின் ஆகாத நடத்தையால், அவர்கள் பிள்ளைகள் தீமைகளை அநுபவிக்கிறார்கள்.

2. மத்தியஸ்த வகையைப்பற்றி விசேஷித்துப் பார்ப்போம்.

(1) பொதுக்குறிப்பு.

க. கிறிஸ்துவானவர் உலகத்துக்கு ஒளியாயிருந்து தேவசித்தத்தை வெளிப்படுத்தினார்.

உ. அவர் முன்னுரைக்கப்பட்ட பிரதான ஆசாரியரும், கிருபாதாரப்பலியும், தேவாட்டுக்குட்டியுமாயிருக்கிறார்.

ஆட்சேபனை.

இதெல்லாம் பழைய ஏற்பாட்டு நியமநிஷ்டைகளுக்கு ஒத்ததா யிருக்கிறதே யல்லாமல், வேறல்ல.

உத்தரவு.

(1) இந்த ஆட்சேபனை, சங்கதிகளின் கிரமத்தை மாற்றுகிறதா யிருக்கிறது. கிறிஸ்துவின்பலி, பொருள்; மோசேயின்பலிகள், நிழலாட்டம்.

(2) கிறிஸ்துவானவருடைய பலி, மாதிரியாகவும் போதனையாகவும் மாத்திரமல்ல, உலகத்தின் பாவங்களை நிவிர்த்திசெய்கிற நிமித்தகாரணமாயு மிருக்கிறது.

(2) பொழிப்பு.

க. அவர் தீர்க்கதரிசி.

(க) அவர் இயற்கைப் பிரமாணத்தைத் மீளவும் அதிகாரத்தோடு தெளிவாகப் போதித்தார்.

(உ) தேவனுக்குப் பிரியமான ஆராதனை, மனந்திரும்புதலின் பலிதம், மறுமைக்குரிய சிட்சை முதலியவைகளைப்பற்றி முக்கியமாய் வெளிப்படுத்தினார்.

(ங) அவர் பூரணமாதிரியாக இருக்கிறார்.

உ. இராசாவாக வைதீக இராச்சியத்தை ஸ்தாபித்தார்.

(க) மார்க்கத்துக்கு ஞாபகக் குறிப்பாயும், அம்மார்க்கத்தில் சேரும்படியாகவும் சபையை ஸ்தாபித்தார்.

(உ) அதை அவர் தமது ஆவியானவரைக்கொண்டு ஆண்டு வருகிறார்.

(ங) அதைச் சேர்ந்த யாவருக்கும் அவர் ஒரு இராசசியத்தை ஆயத்தம் பண்ணுகிறார்.

(ச) அந்த இராச்சியத்துக்கு விரோதிகளா யிருப்பவர்களை அவர் தண்டிப்பார்.

ங. ஆசாரியராக, அவர் உலகத்தாரின் பாவங்களுக்காக தம்மைத்தாமே பலியாகச் செலுத்தி பிராயச்

சித்தம் செய்தார். இந்தப் பிராயச் சித்தத்தைப்பற்றி ஆட்சேபனை சொல்லப் படுவதுண்டு. அதைப்பற்றி நாம் கவனிக்கவேண்டியதாவது.

(க) கிறிஸ்துவானவருடைய பலிக்கடுத்த சம்பந்தம்.

a. பிராயச்சித்தப் பலி எங்கும் செலுத்தப்பட்டு வந்தது. யூதர்கள் அதை விசேஷித்த கட்டளையின்பேரில் செலுத்திவந்தார்கள். அஞ்ஞானிகள் பூர்வ வெளிப்படுத்த லிருந்துண்டான பாரம்பரியத்தினால் அப்படிச் செலுத்தி வந்திருக்கிறார்கள்.

b. அந்தப் பலிகள், கிறிஸ்துவானவருடைய பலிக்கு முன்னடையாளமாக விருந்தன. கிறிஸ்துவின் பலியானது நிறைவும் பூரணமும் போந்ததுமான பாவப் பரிகாரமா யிருக்கிறது. பொருளும் பயனும் இதுவே

(உ) இந்தப் பலியானது பலிக்கிறவகை நமக்கு வெளிப்படுத்தப்படவில்லை.

a. அஞ்ஞானிகள் தாங்கள் செலுத்தும் பலிகள், பலிக்கும் என்று எண்ணுகிற எண்ணம் நமக்குத் தெரியாது.

b. கிறிஸ்துவின் பலியானது பலிக்கிற வகையைப்பற்றி வேதாகமத்தில் ஒன்றும் சொல்லப்படவில்லை. நாம் அதைப்பற்றி முறைப்பாடிட நமக்குச்சரியான ஆதாரமில்லை. அதைக்குறித்த விபரம் வேண்டும் என்று கேட்க நமக்கு நியாயமுமில்லை.

c. சிலர் வெளிப்படுத்தப்படாத இந்தப் பலிதத்தைப்பற்றி நிராதாரமான வியாக்கியானம் சொல்லுவார்கள். மற்றவர்கள் அது வெளிப்படுத்தப்படாததால், கிறிஸ்துவானவருடைய மரணம் மாதிரியாகவும் போதனை

யாகவும் மாத்திர மிருக்கிறது. அவர் மற்றவர்களுக்காக உத்தரவாதியாய் மரிக்கவில்லை என்பார்கள்.

(௩) சுவிசேஷத்தில் காட்டப்பட்டிருக்கிற உண்மையுள்ள உபதேசமும் அதற்குச் சம்பந்தமாயுள்ள நமது கடமையும்.

a. அது மனந்திரும்புதலின் லுண்டாகிய பலிதத்தையும், கிறிஸ்துவின் உத்தரவாத புண்ணிய பாடுகளினால் அந்த மனந்திரும்புதல் அங்கீகரிக்கப் படுவதையும், இரட்சிப்புக்கு நாம் தகுதியுள்ளவர்களாவதையும் போதிக்கிறது.

b. இந்த நன்மைகள், உண்மையான விஷயங்கள். நமக்கு அறிவிக்கப்பட்டிருக்கிற நிபந்தனைகளின்படி நாம் அவைகளை அங்கீகரித்துக் கொள்வதே ஞானம்.

ஆட்சேபனை. (1)

கிறிஸ்துவானவரின் மரணத்துக்கு எப்படிப்பட்ட பலிதமுண்டென்பது நமக்குப் புலப்படாததால், நாம் அதை அங்கீகரிக்கக் கூடாது.

உத்தரவு

கிறிஸ்துவின் மரணம் பலிதப்படுகிற வகையும், மறுமைத் தண்டனையின் நியாயமும், விசுவாசிகளுக்கு வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிற நன்மைகளின் தன்மையும், மறுமைத் தண்டனையை நிவிர்த்திக்க நமக்கிருக்கும் திறமை அல்லது திறமைத் தப்பையும் நாம் அறியாததால், பின்வரும் காரியங்கள் விளங்குகின்றன.

(1) தண்டனையை நிவிர்த்திப்பதற்கும், மெய்ப் பாக்கியததை ஆயத்தம் பண்ணுவதற்கும், ஒரு மத்தியஸ்தர் அவசியம் என்பதை வெளிப்படுத்தலுக்கு முன்னர் நிதானிக்க நாம் தகுதியுள்ளவர்களல்ல.

(2) மத்தியஸ்தர் வேண்டிய தவசியம் என்று வைத்துக் கொண்டாலும், அவருடைய உத்தியோகம் இன்னதென்பதை வெளிப் படுத்தலுக்கு முன்னா நிதானிக்க நாம் தகுதி யுள்ளவர்களல்ல.

(3) கிறிஸ்து வானவருடைய மத்தியஸ்தம் இன்ன வகையாய் நோக்கத்தை நிறைவேற்றக் கூடியதென்பது நமக்குப் புலப்படாததால், அதைப்பற்றி ஆட்சேபிப்பது வீணும் வியர்த்தமு மாகும்.

ஆட்சேபனை. (2)

கிறிஸ்து வானவருடைய உத்தரவாதமானது, குற்றவாளிகளுக்காக, குற்ற மற்றவர் பாடுபடுவதைக் காட்டுவதால, அது நீதி வழுவு.

உத்தரவு.

(1) இவ்வகை ஆட்சேபனை இயல் முறைமைக்கும் செல்லத் தக்கது

(2) குற்ற வாளிகளுக்காக குற்ற மற்றவர்கள் பாடுகளை அநுபவிப்பது அடிக்கடி கட்டாயமாய் நடப்பதுண்டு, கிறிஸ்துவின் பாடுகளோ, கட்டாயமாயல்ல, உற்சாகமா யுள்ளது

(3) கடைசியாக எல்லாரும் அவரவர் கிரியைகளுக்குத் தக்கதாகப் பலன் அநுபவிப்பார்கள். அதற்கிடையில் உத்தரவாத பாடுகள் அவசியமா யிருக்கலாம்

(4) ஏகேச்சுர வாதிகள் சொல்லும் ஆட்சேபனையின் சொல்லப்படும் காரியங்களை எண்ணுத்தா லுண்டா கிறது.

ர. அவை யாவன, இயலானது கர் வுளின் கிரியை, அல்லது.

உ உத்தரவாத பாடுகள் தேவாளுகையில் நாமே றும் நாம் பார்க்கிற சங்கதிகள் என்பவைகளே

(1) கிறிஸ்துவின் உத்தரவாத புண்ணியமானது, தர்மதை நாட்டி, தேவ நீதியை நிறைவேற்றி பாவதை வெறுக்கும்படி செய்கிறது.

(6) ஆட்சேபனைக் காரர் அறியாமையினாலே மத்தியஸ்தம் அவசியமில்லை, அது திவ்விய ஏற்பாட்டுக்கு ஒவ்வாதது என்று சொல்லுகிறார்கள். இப்படிப்பட்ட ஆட்சேபனை மதியீனமுள்ளது.

(7) நம்முடைய கடமையைப்பற்றிய அறிவு நமக்கு இருக்க வேண்டியது அவசியம், தேவ செயலைப்பற்றிய அறிவோ அவசியமில்லை. இது நியாயமாயும் உபமான சம்பந்தத்துக்கு இசைவாயுமிருக்கிறது.

க. நமது ஜீவியத்தில் நாம் நடக்க வேண்டிய காரியங்களைப்பற்றி நமக்குப் போதுமானபடி அறிவிக்கப் பட்டிருக்கிறது. ஆனால் சுலாம்பகமான முழு முறைமையையும் பற்றி, நாம் அற்பமாய் மாத்திரம் அறிவோம்.

உ. கடவுளுக்கும் மத்தியஸ்தருக்கு மிருக்கிற காரியங்கள் இரகசியமா யிருக்கின்றன. ஆனால் கிறிஸ்துவின் மத்தியஸ்தத்தினால் நன்மை மனிதருக்குக கிடைக்கும் வகையோ தெளிவாயிருக்கின்றன.

ந. சாதாரண விதிகளும், சில நியமவிதிகளும் தெளிவான நியாயங்களின் பேரில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன.

---

## 6 அதிகாரம்.

வேதம் சாதாரணமாய் யாவருக்கும் ஒரே வேளையில் அருளப்படவில்லை என்றும், அது கடவுளால் அருளப்பட்டதென்பதற்குப் போதுமான அத்தாட்சி இல்லை என்றும் சொல்லப்படும் ஆட்சேபனைகளைப் பற்றியது.

இந்த அதிகாரத்தில் காட்டப்பட்டிருக்கிற நியாயங்களுக்கு விரோதமாய்ச் சொல்லப்படும் ஆட்சேபனைகளாவன.

முதலாவது. திவ்விய வெளிப்படுத்தல் என்று சொல்லப்படுவது, திவ்விய வெளிப் படுத்தலைப்பற்றிய நிபந்தனைகளுக்கு ஒத்திருக்கவேண்டும், அதாவது, அதின் அத்தா

ட்சி, நிச்சய முள்ளதாயும், அது யாவருக்கும் ஒரே கால த்தில் அருளப்பட்டதாயு மிருக்கவேண்டும்.

இரண்டாவது. கிறிஸ்துமார்க்க அத்தாட்சிகள், சந்தேகத்துக் குரியவைகளும், அந்த மார்க்கம் யாவருக்கும் ஒரே கால த்தில் அருளப்படாததாயு மிருப்பதால், மேற்படி நிபந் தனைகளுக்கு ஒத்து வருகிறதில்லை.

மூன்ருவது. அப்படி ஒத்து வராததால், கிறிஸ்து மார்க்கமா னது உள்ளபடி தெய்வீக மார்க்கமல்ல, என்பவைகளே.

பட்லர், கிறிஸ்து மார்க்கத்தைப் பற்றிச்சொல்லிய குறைவை அதாவது, இரண்டாவதாகக் காட்டிய உத்தர சாதனத் தை ஒப்புக்கொள்ளுகிருர். ஆனுல் பூர்வசாதன சாதா ரண கோட்பாடு சத்தியம் என்பதை மறுத்துச் சித்தாந் தத்தின் பலத்தை நிராகரிக்கிருர். அதாவது, கிறிஸ்து மார்க்க அத்தாட்சிகள் சந்தேகத்துக் குரியவைகளாயும், அம்மார்க்கம் ஏககாலத்தில் அருளப்படாததாயும் இரு ப்பதால் அது தெய்வீக முள்ளதல்ல என்று சொல்வ தை மறுக்கிருர். நமக்குரிய லௌகிக காரியங்களை எல் லாம் பூரண அத்தாட்சியைக் கொண்டு நடப்பிக்கிறதுமி ல்லை, அவைகள் யாவருக்கும் ஒருமிக்க அளிக்கப்படுகிற துமில்லை, என்கிற தெளிவான உபமான சம்பந்தத்தைக் கொண்டு அப்படி நிராகரணம் செய்கிருர்

I. இந்த உபமான சம்பந்தத்தின் முதல் அங்கத்தைச் சேர்ந்த சங்கதி; அதாவது உலகநன்மைகளைப் பெற்றுக்கொ ள்ள நமக்குக் கிடைத்திருக்கிற அறிவையும், இந்த அறிவு பாதிக்கப்பட்டிருக்கிறதையும் பற்றிக் கவனிப் போம.

1 லௌகிக அத்தாட்சியின் தெளிவைப் பற்றிப்பார்ப்போம்.

நாம் நடப்பிக்கும் காரியங்களைப் பற்றிய அத்தாட்சியா னது, எப்போதும் திர்ப்திகர முள்ளதும் சந்தேக மற்றதுமா யிருக்கிறதில்லை. அது சந்தேகத்திலும் சமுசயத்திலும் சூழப்பட்டிருக்கிறது.

(1) சில வேளைகளில் நாம் செய்யும் காரியங்களால் விளையும் இன்ப துன்பங்களைச் சம்ரசப் படுத்தக்கூடாதவர்களா யிருக்கிறோம்.

(2) சிலவேளைகளில் குணமும் பெலனும் சுகமும் மாறுகிறபடியால், அநுபவசக்தி குறைந்து போகிறது.

(3) சில வேளைகளில் மனிதர் படும்பாடுகளுக்குத் தக்க பலனை அடையாதபடி நாம் எதிர்நோக்காத இடையூறுகளும் அகால மரணமும் சம்பவிக்கிறது

(4) சில வேளைகளில் சித்திப்பெறத்தக்க நம்முடைய முயற்சிகள் பயன்படாமல் பலத்த ஆட்சேபனைகளுக்கிடமாகும்.

(5) காரியங்கள் வெளியாகத் தோன்றுகிறபடி இராததால், நாம் வஞ்சிக்கப்படுவதுண்டு. அதற்கு முக்கியமாய் சுகாநுபோகம் பலத்த எத்தனமாயிருக்கலாம்.

(6) சாத்தியம்.

க. நமக்கு வேண்டிய நன்மையானது இன்னது, அதை எப்படிச் சம்பாதிக்கலாம், முயற்சியினால் இறுதியில் சித்திபெறுவது என்பவைகளைப் பற்றிய அத்தாட்சி பொதுப்பட அசாத்தியமாயிருக்கிறது.

உ. பிரயத்தினங்களினு லுண்டாகும்பலன் அசாத்தியமாயினும்,அதால் தளை படாமல் காரியம் சித்தியாகும்படி முயற்சியுடன் வேண்டிய பிரயத்தினங்களை மனிதர் செய்து வருகிறார்கள்.

**2** உலக நன்மையை யாவருக்கும் சரிசமானமாய்க் கொடுக்கப் படுவதைப்பற்றிப் பார்ப்போம்.

(1) இயற்கையில் சிலருக்கு நன்மை கொடுக்கப்பட் டிருக்கிறது. அவர்களைப் போலவே, அவசிய மான மற்ற பேர்களுக்கு அது கொடுக்கபடா திருக்கிறது.

(2) லௌகீக வாழ்வு பலருக்குப் பலவிதமாய் கொடுக்கப் பட்டிருக்கிறது. திருஷ். சுகம், பெலன், ஐசுவரியம், ஸ்திதி, திறமை.

(3) இப்படி வேற்றுமைக ளிருந்தபோதிலும், பின் சொல்லப்படுகிற சங்கதிகள் சத்தியமாகவே யிருக்கின்றன.

க. கடவுள் இயற்கையில் அரசாட்சி செலுத்தி வருகிறார்.

உ. நமது சுகத்துக்கும் காரியாதிகளுக்கு முரிய விஷயமானது, விவேகமாய் அல்லது அவிவேகமாய் நடந்து கொள்வதிலிருக்கிறது என்பவைகளே.

II. உவமான சம்பந்தத்தின் இரண்டாம் அங்கத்தைச் சேர்ந்த சங்கதி. அதாவது திவ்விய வெளிப்படுத்தலின் தன்மையானது உலக இயலுக்கு ஒத்திருக்கிறது.

1. வேத உதாரணமும் அதைப்பற்றிய தெளிவும் பற்பல அளவாய்க் கொடுக்கப்பட்டிருக்கிற சங்கதி.

(1) உலக சரித்திரத்தைப் பார்க்கில், வேத உதாரணமானது மனிதருக்கு அளவு வித்தியாசமாய்க் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று பார்க்கலாம்.

க. சிறையிருப்புக்கு முந்தியுள்ள யூதருக்கிருந்த வேத உதாரணமானது, சிறையிருப்புக்குப் பிந்தியிருந்த யூதருக்குக் கிடைத்த உதாரணத்தைவிட சிறந்தது (திருஷ்டாந்தம் தீர்க்கதரிசிகளும் அற்புதங்களும்.)

உ இப்போதிருக்கிற கிறிஸ்தவர்களுக்குக் கிடைத்திருக்கிற வேதஉதாரணத்தைப் பார்க்கிலும், ஆதிக்கிறிஸ்தவர் களுக்கு அற்புதங்களினாலும் கிறிஸ்தவ ஜீவியத்தினாலும கிடைத்த உதாரணம் சிறந்தது.

௩. தீர்க்கதரிசனங்கள் நிறைவேறுவதினால் நமக்குப் பின்னடியாரான கிறிஸ்தவர்களுக்குக் கிடைக்

கும் உதாரணம் நமக்குக் கிடைத்திருக்கிற உதாரணத்தைவிட அதிக சிறந்ததா யிருக்கலாம்.

(2) வேதஉதாரணத்தைப்பற்றி பின் சொல்லப்படும் வேற்றுமைகள் சங்கற்பிக்கப்படலாம்.

க. சிலருக்கு அதின் சத்தியத்தைப்பற்றி அற்பமான அநுமானமும், அதின் தன்மையைப்பற்றி அற்பமான புலப்பாடு மிருக்கலாம்

உ. சிலருக்கு ஒருவாறு அதின் சத்தியத்தைப் பற்றிய உணர்வும், அதின் தன்மையைப்பற்றிய தெளிவான அறிவும், அதால் தாங்கள் நடந்துகொள்ளவேண்டிய கடமையும் தெரியலாம்.

ங. இந்த இரண்டும் அந்தங்களுக்கு இடையில் எண்ணிறந்த அளவான உதாரணமும் அறிவுமிருக்கலாம்.

(3) இந்த அறிவு பாகிக்கப்பட்டிருக்கிற விஷயமானது, பின்சொல்லப்படுகிற வகையாய்ச் சங்கற்பிக்கப்பட்டிருக்கலாம். அது இயலில் விளங்கும் சம்பவங்களுக்குச் சம்பந்தமா யிருக்கிறது.

க. தற்காலத்தில் வெளிப்படுத்தலானது, சூழ்ந்திருக்கும் இருளில் பிரகாசிக்கும் மங்கலான வெளிச்சம்போ லிருக்கலாம்.

உ. சிலர் அந்தஒளியை அநுபவிக்கலாம், ஆனால் அதின் மூலம் ஊழிகாலத்துக் குரியதால், அது திவ்வியவெளிப்படுத்தல் என்பதைப்பற்றி அறிவினராயிருக்கலாம்.

ங. சிலர் அந்தஒளியின் மூலத்துக்குச் சமீபித்திருக்கலாம், என்றாலும் அதின் கதிர் தட்டுத் தடுக்கலாகி மங்கலாயிருக்கலாம்.

ச. சிலர் சற்றுதுலாம்பரமாய் ஒளியை அநுபவிக்கலாம், என்றாலும் அது இருளானஇடத்தில் பிரகாசிக்கும் ஒளிபோல் மாத்திர மிருக்கும்,

(4) வெளிப்படுத்தல் பிரசித்தமான சரித்திரம்.

க. அது இதரமதஸ்தருக்கு முழுவதுமாய்க் கிடையாதிருந்தது.

உ. பாரசீகரும் மகமதியரும் இயல்வேதத்தை மாத்திரம் கற்றுக்கொண்டார்கள்.

ந. பாப்பு மார்க்கத்தார் அதின்பொருளை விகாரப்படுத்தி வியர்த்திமாக்கி யிருக்கிறார்கள்.

ச. புரோற்றெஸ்ருண்டு மார்க்கத்தாருக்கு அதின் அத்தாட்சியும் ஒளியும் கலப்பற்றதாய்க் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது அவர்கள் கடமையைச் செய்வதற்குப் போதுமானது. ஆனால் மனோபாவனைகளுக்குத் திர்ப்தியை உண்டாக்கத் தக்கதல்ல.

(5) இவையெல்லாம், இயலில் நடந்தேறிவருகிற சம்பவங்களுக்கு ஒத்திருக்கின்றன.

ஆட்சேபனை.

இப்படிப்பட்ட பலவகை வித்தியாசங்கள், கடவுளின் தர்ம ஆளுகைக்குப் பொருந்தமாட்டாதே.

உத்தரவு.

(1) அப்படியல்ல, கடைசியில் ஒவ்வொருவரும் நீதியின்படி ஏற்றவிதமாய்ப் பலனளிக்கப்படுவார்கள்.

(2) என்றாலும் இந்தவிஷயமானது.

க. மறுமைப்பாக்கியத்துக் குரிய சலாக்கியம் எல்லாருக்கும ஒன்றுபோலவே கிடைக்கும் என்பதைக் குறிக்கமாட்டாது.

உ. உலகவிஷயத்தில் ஒவ்வொருவரும் தங்களுக்கும் மற்றவர்களுக்கும் பிரயோசனமா யிருக்கவேண்டியதுபோலவே, வைதீகவிஷயத்திலும் ஒவ்வொருவரும் தனக்கும் மற்றவர்களுக்கும் பிரயோசனமா யிருக்கவேண்டியது என்பதைக் காட்டும்.

2. வேத உதாரணமும் அறிவும் பற்பல அளவாய்ப் பாகிக்கப்பட்டிருப்பதற்குரிய முகாந்தரங்கள்.

(1) பொதுப்பட, வைதீககாரியம் பலதரமாய் கொடுக்கப்பட்ட முகாந்தரம், உலககாரியம் பலதரமாய்க் கொடுக்கப்படும் முகாந்தரத்திற்கு ஒப்பாயிருக்கலாம்.

க. இயற்கைக்குக் காரணர் ஒரேவகை சிருஷ்டிகளைப் பற்பல நிலைமையில் வைக்க ஏவின முகாந்தரமே, பலவகையான சிருஷ்டிகளை உண்டுபண்ண ஏவின முகாந்தரமாயிருக்கலாம்.

உ. ஒரேவகை தர்ம திறமையுள்ளவர்களைப் பற்பல வைதீக நிலைமையில்வைக்க ஏவின முகாந்தரமே, பற்பல தர்மநிலைமையுள்ளவர்களை உண்டாக்க ஏவின முகாந்தரமாயிருக்கலாம்.

௩. ஒரேவகை தர்ம பிராணிகளைப் பற்பல நிலைமையில், பற்பலபடியில் வைக்க ஏவின முகாந்தரமே, ஓர்பிராயத்தில் மனிதனை அறமில்லா நிலைமையில், வைக்க ஏவின முகாந்தரமாயிருக்கலாம். திருஷ். பாலத்துவம், குழந்தைப்பிராயம்.

(2) விசேஷமாய்ப் பார்க்கில், அதற்கு முகாந்தரமுண்டு, ஆனால் அதுமிகக் கருகலாயிருக்கிறது.

க. நாம் நம்முடைய சுயநிலைமையைப் பற்றி அறிவீனராயிருக்கிறோம் அந்த நிலைமை, முந்தின நிலைமையின் பயனாயிருக்கலாம், அல்லது பிந்தின நிலைமைக்குச் சம்பந்தமாயிருக்கலாம், இந்த இரண்டையும் பற்றி நாம் கொஞ்சங் குறைய முழுவதுமாக அறிவீனராயிருக்கிறோம்.

உ. சவிஸ்தாரமும் சன்னல் பின்னலுமான கடவுளின் ஆளுகையானது, அநேகவிதமான காரியங்களுண்டென காட்டுகிறது. ஆகவே வேதமார்க்கம் ஆரம்பத்திலே எல்லாருக்கும் ஒன்றுபோல

வே வெளிப்பட்டபோதிலும், சீக்கிரத்துக்குள்ளாக வைதீகவிஷயத்தில் மனிதர் இப்போதிருக்கிறபடியே பலவித நிலைமையிலிருப்பார்களே ஒழிய, ஒரேவித நிலைமையிலிருக்கமாட்டார்கள்.

௩. உள்ளபடி பார்க்கில்,

(க) நாம் இந்த அறிவீனத்தில் வைக்கப்பட்டிருக்கிறோம்.

(உ) இந்த அறிவீனத்தில் நாம் ஏன் வைக்கப்பட்டிருக்கிறோம் என்பதையும் அறியோம்.

(௩) இந்த அறிவீனத்தில் நாம் ஏன் வைக்கப்படவேண்டும் என்பதையும், இந்த அறிவீனத்தில் ஏன் வைக்கப்பட்டிருக்கிறோம் என்பதையும் பற்றிய முகாந்தரத்தை அறியாதிருக்கிறோம். இந்த மூவகையான அறிவீனங்களில் ஒன்றுக்குச் சொல்லப்படும் உத்தரவே, மற்றவைகளுக்கும் செல்லத்தக்கது.

3. மனோபாவனையான மேற்படி கேள்விகளைப் புறநீங்கலாக வைத்துப்பார்க்கில், நாம் மூன்று காரியங்களைக் கவனிக்கவேண்டியவர்களா யிருக்கிறோம்.

(1) வேத அத்தாட்சியைப்பற்றிச் சிலருக்கு இருக்கிற சந்தேகமானது, வேதத்தைக் கைக்கொண்டு நடப்பதில் மற்றவர்களுக்கு உண்டாகிய வருத்தங்களுக்குச் சமமாயிருக்கிறது. இவை ஒவ்வொன்றும் மனிதர் பரீட்சை நிலைமையில் வைக்கப்பட்டிருக்கிறதைக் காட்டுகிறது.

க. வேதம் ஒவ்வொருவருக்கு முரிய முக்கியமான காரியம்.

உ. உணர்ச்சிக்கு முன் வேதசத்தியத்தைப்பற்றிப் பாராதாரமாயும் எதார்த்தமான எண்ணத்தோடும் விசாரித்தறிவது, உணர்ச்சிக்குப் பின்வேத

சத்தியத்துக்குக் கீழ்ப்படிந்து நடப்பதைப் போல பரீட்சைக் குரியதாயிருக்கிறது.

௩. உணர்ச்சிக்கு முன்வேத சத்தியத்தைப்பற்றிக் கவலைத்தாழ்ச்சியாயிருப்பது, உணர்ச்சிக்குப் பின் கீழ்ப்படிந்து நடக்கவேண்டிய விஷயத்தில் காட்டும் கவலையீனத்தைப்போல கேடுள்ளது.

ச. ஆகவே வேதமார்க்க அத்தாட்சியைப்பற்றிய சந்தேகமானது சிலருக்குப் பரீட்சை நிலைமையாயிருக்கலாம்.

(2) அத்தாட்சி அதிக சந்தேகமாய்க் காணப்படுகையில், இந்தப்பரீட்சையானது மூவகைக்கருத்தின்படியே (1 அவையாவன அது மோசமான நிலைமை, 2 தர்மபழக்கத்தில் தேறி பக்குவமடையும் நிலைமை, 3 குணத்தை வெளிப்படுத்தும் நிலைமை) உண்டாகும்

க. இப்படிப்பட்ட பரீட்சை நிலைமை உறுதிப்பட்டிருக்கிற சங்கதி.

(க) மற்றப்படி வெளிப்படுத்தலானது சத்தியமுள்ளதல்ல என்கிற நிச்சயமானது, அதின் சத்தியத்தைக்குறித்த சந்தேகத்துக்கொப்பாயிருக்கும். இதை லௌகீககாரியத்துக்குச் சம்பந்தப்படுத்திப் பார்க்கில், அது மதீயீனமாய்க் காணப்படும். திருஷ். *a* என்பவன் நாளைக்காலையில் தூக்கப்படுவேனோ, அல்லவோ என்கிற சந்தேகமுள்ளவனாயிருக்கிறான்; *b* என்பவன் தூக்கப்படமாட்டேன் என்கிற நிச்சயமுள்ளவனா யிருக்கிறான். *a* என்பவனுக்கு *b* என்பவனைப்போலமனச் சமாதானமிருக்குமா ?

(உ) ஆகவே கிறிஸ்துமார்க்கத்தைப்பற்றிய சந்தேகமானது எச்சரிக்கையை உண்டுபண்ணி, நாஸ்திகர்பேரில் கடமையைச் சுமத்தும்.

a. நாஸ்திகர் எச்சரிக்கையோடிருக்கவும், தாங்கள் பெற்றனுபவிக்கிற வெளிச்சத்தை உபயோகிக்கவும், இன்னமும் அதிகமான வெளிச்சத்தைப் பெற்றுக்கொள்ள விழிப்புள்ளவர்களா யிருக்கவும்,

b. பயபக்தியோடே பரிசுத்த ஜீவியம் செய்யவும் ஏவும்.

c. தாங்கள் நடந்துகொள்ளவேண்டிய விஷயத்தில் இப்படி விழிப்பாயிருக்கவேண்டியது, சன்மார்க்கத்துக்குரிய பரீட்சை நிலைமையா யிருக்கிறதுஎன்று அவர்களுக்குக் காட்டுகிறது.

(ங) செய்கையினுல் விளையும் சந்தேகமும் நிச்சயமும் விசுவாசிகளுக்கும் நாஸ்திகருக்கும் வைதீக பொறுப்பு விஷயத்தில் ஒன்றுபோலவேயிருக்கும். இந்தப்பொறுப்பு, முக்கியமாய் உயர்ந்த செல்வாக்குள்ள ஸ்திதியிலிருக்கும் நாஸ்திகருடைய மனதில் அதிகமாய்ப் பதியவேண்டியது.

உ. இந்தச் சாதாரண பொறுப்புக்குரிய நியாயம்.

(க) சந்தேகமானது பூரணமான அத்தாட்சி உண்டென்பதைக் காட்டுகிறது. சந்தேகிக்கப்பட்ட ஓர்காரியத்தைக் கவனிக்கத்தக்கதல்லவென்று முழுவதுமாய்த் தள்ளிப்போடக்கூடாது.

(உ) அத்தாட்சியானது சமமாயிருக்கையிலே மனோரதியத்தைப்பற்றி சந்தேகமிருந்தால் அப்போது அந்தச் சங்கதியைப்பற்றிய எண்ணிக்கையே செய்யவேண்டிய கடமையைத் தீர்மானிக்கும்.

ங. அநுமான அத்தாட்சியானது திரளான படிகளுள்ளது.

(க) சூனியத்துக்கும் சந்தேகத்தைப் பிறப்பிக்கும் அத்தாட்சிக்கும் இடையில் படிகளுண்டு.

(உ) சந்தேகத்தைப்பிறப்பிக்கும் அத்தாட்சிக்கும் தர்ம நிச்சயத்துக்கும் இடையில் படிகளுண்டு.

ச. வைதிக அத்தாட்சியைப் பகுத்தறிகிற யுக்தியானது ஒழுக்கமாய் நடப்பதற்குரிய தர்மசட்டத்துக்குச் சம்பந்தமா யிருக்கிறது.

(3) வேத அத்தாட்சியைப்பற்றிய வருத்தங்கள், மார்க்கத்தின்படி நடப்பதற்குரிய வருத்தங்களுக்கு ஒப்பாயிருக்கிறது. எப்படியெனில்,

க. தண்டனைக்குத் தப்பலாமென்று ஆகாமிய செய்கைக்குப் போகருச் சொல்வதுபோல, எதார்த்த மற்றமனதும், அசட்டையும் கவலையீனமுமாய் நடப்பதற்குச் சந்தேகமுள்ள அத்தாட்சியை போக்காக வைத்துக்கொள்ளும்.

உ. உலகத்தில் சீர்கேடு பெருகிவருவதால், அதற்கு எச்சரிக்கையாய் நடந்துகொள்ள வேண்டுவது போல, எதார்த்தமுள்ள மனதுக்குச் சந்தேகத்துக்குரிய அத்தாட்சியானது, எச்சரிக்கையாய் நடப்பதற்கு ஏதுவை உண்டுபண்ணும்.

ந. சந்தேகமுள்ள அத்தாட்சிக்கும், நல்லொழுக்கமாய் நடப்பதற்கு உண்டாகும் வருத்தங்களுக்குமுள்ள முகாந்தரமானது ஒன்றுபோலவே இருக்கும், அதாவது தர்மத்தில் பரீட்சைவிடியமாய் இன்னது தேறவேண்டுமென்று காட்டும்.

ச. மந்தப்புத்தி யுடையவர்களாய் நல்லஸதிதியி லிருக்கிறவர்களுக்குச் சொற்பமாக சோதனைகள் நேரிடுவதால, சந்தேகத்துக்குரிய இந்தப் பரீட்சை நிலைமையானது, அவர்களுக்கு அதிக அவசிய மாயிருக்கலாம்.

(க) உவமான சம்பந்தமாய்ப்பார்க்கில், லௌகீக விஷயத்தில் சிலருக்கு நேரிடும் பரீட்சையானது, சரியென்று அறியப்பட்டிருப்பதைச் செய்யாமல், செய்யவேண்டிய சரியான காரியமின்னதென்பதைக் கிரகிப்பதா யிருக்கும்.

(உ) பரீட்சையானது, அப்படிப்பட்டவர்கள் சன்மார்க்க ஒழுக்கத்தில் தேறிவந்திருப்பதையும், அவர்களுக்குள் மறைவாயிருந்த சன்மார்க்க இலட்சணத்தை மற்றவர்களுக்கு விளக்கவும் அது முக்கியமான அவசியம்.

III. நாஸ்திகர் எடுத்துச் சாதிக்கும் சந்தேகமானது, அவர்களுடைய திறமைக் குறைவினால் அதாவது அவர்களுடைய சுயகுற்றத்தினால உண்டாகலாம்.

1. மனதில் வெறுப்புள்ளவர்கள், வழக்கமுறையாயுள்ள கவலைத் தாழ்ச்சியினாலும் பழக்கத்தினாலும் ஒழுக்கத்துக்குரிய அத்தாட்சியைக்கண்டு பிடிக்கத் திராணியற்றவர்களா யிருப்பார்கள். லௌகீக விஷயத்திலும் அவர்கள் அப்படியே இருப்பதுண்டு.

2 வேதமானது எல்லாருக்கும் விளங்காதென்று சொல்லுகிறது, அத்தாட்சியின் சந்தேகத்தினாலாவது அல்லது சந்தேகிக்கிறவர்களுடைய திறமைக் குறைவினாலாவது நேரிட்டாலும் வித்தியாசமில்லை.

3. இயல், அருள் வேதங்களின் சாதாரண அத்தாட்சியானது, உண்மையும ஊக்கமுமுள்ள சாமானிய சனங்களுடைய திராணிக்கு மிஞ்சினதல்ல, அது அவர்களுக்கு விளங்கக்கூடியது.

4 இந்த அத்தாட்சியானது ஆட்சேபனைக் கேதுவாயிருப்பதினாலாவது, அல்லது விளங்காமல் கருகலாயிருப்பதினாலாவது நிராகரிககப் படமாட்டாது.

5. இயற்கை சாஸ்திரங்களை நன்றாய்ப் பரிசோதிப்பதற்கு காலமும் அறிவும், கவனமும் வேண்டியதுபோல,

வைதீக விஷயத்திலும் இருக்க வேண்டியது. அப்படியில்லாவிடில் மனிதர் அறிவீனராகவே யிருக்க வேண்டும்.

ஆட்சேபனை.

ஓர் எசமான் ஓர் காரியத்தை முடிக்க வேண்டுமானால், அதைப்பற்றித் தெளிவான கட்டளை கொடுப்பானல்லவா? கடவுளும் அப்படிச் செய்யவேண்டியதே.

உத்தரவு.

(1) உவமான சம்பந்தத்தின்படி அதற்கு நியாயமான மறுமொழி.

க. கடவுளைப்பற்றிய விஷயத்தில் அப்படிச் சொல்வது சரியல்ல.

உ. லௌகீக விஷயங்களில் கடவுள் அப்படித் தெளிவாய் அறிவித்திருக்கிறதில்லை. ஆதலால் வைதீக விஷயத்தில் அப்படி அறிவிககவில்லை என்பது ஆட்சேபனைக்கு உதவாது.

(2) வேத மார்க்கத்தின் தன்மையின்படி அதற்குரிய பூரண மறுமொழி.

க. எசமானுக்குப் பூரணமான கீழ்ப்படிதல் முக்கியமானது; உள்நோக்கம் வேறாயிருக்கலாம்.

உ. கடவுளுக்கு வைதீக கீழ்ப்படிதலின் நோக்கம் முக்கியமானது; புறம்பான நடகை மாத்திரம் போதாது.

(3) வைதீகத்தைப்பற்றி கடவுளின் சித்தமானது நிபந்தனைக் குரியதாய் அல்லது நிபந்தனைக் குட்படாததா யிருக்கலாம்.

க. அது முழுவதும் நிபந்தனைக் குரியதாயிராதிருந்தால், அசட்டை பண்ணப்படலாம்.

உ. அது நிபந்தனைக் குரியதாயிருந்தால், நமது நடக்கையின் தர்ம சுபாவத்துக்குத் தக்கதாய்ப்

பயன் அருளப்படும். இயற்கையில் நாம் காணும் பல திருஷ்டாந்தங்களினால் அதை அறியலாம்.

சாத்தியம்.

1. தர்ம நிலைமை என்பது பரீட்சை நிலைமையாயிருக்கிறது; பரீட்சை நிலைமையின் தன்மையைப்பார்க்கில், அதின் மூவகை கருத்தின்படியே சந்தேகத்துக்குரிய அத்தாட்சியினாலும், வைதீக கடமையை நிறைவேற்றுவதிலுண்டாகும் வருத்தங்களினாலும், அந்தப் பரீட்சை உண்டாகும்.

2. நம்முடைய லௌகீக பரீட்சையானது, அசாக்கிரதையினாலும் விசாரணை செய்யாம லிருப்பதினாலும் உண்டாகிற தென்பதை அநுபோகத்தினால் அறிந்திருக்கிறோம். அப்படியே வைதீக பரீட்சையு மிருக்கலாம்.

3 அத்தாட்சி குறைவாயிருக்கிறதென்று மார்க்கத்தை அசட்டை செய்கிற நாஸ்தீகர், லௌகீக காரியங்களிலும் தாங்கள் நடப்பிக்க வேண்டியவைகளுக்கு அத்தாட்சி குறைவாயிருப்பதை அறிந்தும், அவைகளை நடப்பிப்பதால், வேத விஷயத்திலும் அவர்கள் எச்சரிக்கையாயிருக்க வேண்டியது.

---

## 7. அதிகாரம்.

கிறிஸ்து மார்க்கத்துக்குரிய நேரான அத்தாட்சிகள்.

கிறிஸ்து மார்க்கத்துக்கு விரோதமாய்ச் சொல்லப்படும் ஆட்சேபனைகளைக் குறித்து முன் பார்த்திருக்கிறோம். இப்போது கிறிஸ்து மார்க்கம் உண்மை என்பதற்குரிய நேரான அத்தாட்சிகளையும், அவைகளை உறுதிப்படுத்துவதற்கு உலக இயலில் விளங்கிய நியாயங்களையும் பார்ப்போம்.

கிறிஸ்து மார்க்கத்தை உறுதிப்படுத்துகிற அற்புதங்களும் தீர்க்கதரிசனங்களுமான நேரான அத்தாட்சிகளும்

அவைகளுக்கு இசைவாக சார்பான அத்தாட்சிகளு முண்டு. அவை இரண்டும் சேர்ந்து கிறிஸ்து மார்க்கத்துக்குரிய ஏக வுதராண திரட்டாகும்.

## முதலாம்பங்கு.

## கிறிஸ்துமார்க்கத்துக்குரிய நேரான அத்தாட்சிகள்.

### பிரிவு. I. அற்புத அத்தாட்சிகளைப்பற்றிய குறிப்புகள்.

I. பொதுப்பட அற்புத சரித்திரத்தைக் குறித்துப்பார்ப்போம்.

1. பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும், அற்புத சங்கதிகளும் சாதாரண சங்கதிகளுமாகிய இரண்டும் சரித்திர அத்தாட்சியாகிய ஆதாரத்தின்பேரில் நிலைத்திருக்கின்றன அவைகள் யாவும், தாரும் நூலும்போல ஏகமாய்க் கலந்து சாதாரண நடையில் உள்ளபடி எழுதப்பட்டிருக்கின்றன.

2. புதிய ஏற்பாட்டில் விசேஷித்த அற்புத மடங்கியிருக்கிற பாகங்கள் (கிறிஸ்து வானவருடைய உயிர்த்தெழுதல்) ஆதி முதற்கொண்டு இந்நாள் பரியந்தம் தொடர்ச்சியாக உண்மையாய் நடந்த காரியமாக எடுத்துக் காட்டப்பட்டு வந்திருக்கின்றன.

3. கிறிஸ்து மார்க்கமானது, உண்மைபெற்று ஸ்தாபிக்கபபட்டிருக்கிறது. அற்புதங்கள் நடவாமற்போனால், அது ஸ்தாபிக்கப்படவும், அதின் நியமநிஷ்டைகள் வழங்கி வரவும் ஏது விருக்கமாட்டாது.

4 சரித்திர அத்தாட்சிக்கு எதிரிடையாக, இன்னபடி சம்பவித்திருக்கலாம் என்று நிராதாரமாய் பாவிககிறது ஒன்றுக்கும் உதவமாட்டாது. வேதசரித்திரம் பொய்யென்று ருசுப்படும் பரியந்தம், அதை மெய்யென்றே ஒப்புக்கொள்ள வேண்டும்.

(1) நமக்கிருக்கிற சரித்திர அத்தாட்சிக்கு எதிரிடையான சரித்திர அத்தாட்சி உண்டென்றும்.

(2) வேதத்தில் சொல்லப்பட் டிருக்கிற சங்கதிகள் நம்பப்படத் தக்கவைகளல்ல வென்றும்.

(3) சாதாரணமாய் அறியப்பட்டிருக்கிற சரித்திரங்களுக்கு வேத சரித்திரம் ஒவ்வாமையா யிருக்கிறதென்றும் ரூபகாரப் படுத்தினலொழிய, மற்றப்படி வேத சரித்திர அத்தாட்சி உண்மையென அங்கீகரிக்கப் படவேண்டும்.

II. முக்கியமாய் பவுலின் நிருபங்களைப் பற்றிப் பார்ப்போம்.

1 அவைகள் சத்தியமான சங்கதிகளைக் காட்டிய உண்மையான நிருபங்கள்.

(1) அவைகள் சபைகளுக்கு எழுதப்பட்ட நிருபங்களாதலால், அவைகள் உண்மையை விளக்கும் சேர்க்கை அத்தாட்சிகளாம்.

(2) முக்கியமாய் கொரிந்தியருக் கெழுதப்பட்ட நிருபங்கள் அப்படிப் பட்டவை. அவைகளின் கர்த்தா நிச்சயத்தைப்பற்றி ரோமாபுரி கிளெமெந்து எடுத்துக்காட்டி யிருககிற மேற்கோள் வாகியத்தினல் ஸ்தாபிக்கப்பட் டிருக்கிறது.

2. அவைகள் சேர்க்கையான விசேஷித்த அத்தாட்சிகளா யிருக்கின்றன.

(1) பவுல்தான் கிறிஸ்துவைத் தரிசித்ததாக நேராய்ச் சொல்லி யிருக்கிறுன்.

(2) தானும் கொரிந்து சபையாரும் அற்புதங்களைச் செய்யும் வல்லமையைப் பெற்றுக் கொண்டதாக எழுதி யிருக்கிறுன்.

கவனிப்பு. இந்த வரங்களைப்பற்றி நோக்கமில்லாமல் எழுதியிருக் கிறது.

III. கிறிஸ்துமார்க்கமானது, துவக்கத்திலே அற்புத செய்கைகளி னிமித்தம் அங்கீகாரம் பெற்றது.

1. இந்த அற்புத செயலானது, கிறிஸ்து மார்க்கத்துக்கேயுரிய விசேஷித்த செயலாயிருக்கிறது.

(1) மகமது மார்க்க ஸ்தாபகமும் பாப்பு மார்க்க ஏற்பாடுகளும் இதற்கு இணையல்ல. அம் மார்க்கத்தார் முந்தி மார்க்கத்தை அநுசரித்து, பின்பு அற்புதங்கள் நடந்ததாகப் பாராட்டினார்கள் கிறிஸ்து மார்க்கமோ அப்படி ஸ்தாபிக்கப் படாமல், முந்தி அற்புதங்கள் நடக்க, சனங்கள் அந்த அற்புதத்தைக் கண்டு விசுவாசித்து, அம்மார்க்கத்தைப் பற்றிக்கொண்டார்கள்

2 ஆதிக் கிறிஸ்தவர்கள் தங்கள் விசுவாசத்தின் உண்மைக்கு அத்தாட்சியாக மனதாரத் துன்பங்களை அநுபவித்தார்கள்.

3 ஆதிக் கிறிஸ்தவர்களுக்கிருந்த இந்த விசுவாசமானது.

(1) அற்புத சங்கதிக்கு உண்மையான அத்தாட்சியாயும்.

(2) சாதாரண சரித்திர அத்தாட்சிக்குப் பிரத்தியேகமும் சேர்க்கையுமான அத்தாட்சியாயு மிருக்கிறது.

IV. சுருக்கமும் சாத்தியமும்.

கிறிஸ்து மாாக்கம் ஆதியில் அற்புததினால் ஸ்தாபிக்கப்பட்டதற்கு நேரும் சார்புமான உத்தமசரித்திர அத்தாட்சியுண்டு.

1 ஆகவே அவிசுவாசிகள் அதைப் புறக்கணிப்பதற் குரிய நியாயங்களைக் காட்டவேண்டியது, அவர்கள்மேல் விழுந்தகடமையா யிருக்கிறது.

2 முக்கியமாய் இப்படிப்பட்ட விசேஷிததகாரியத்தில், அவர்கள் எடுத்துக்காட்டும் நியாயங்கள் ஏற்றவைகளோ, பலமுள்ளவைகளோ என்பதைப்பற்றி ஆலோசிப்பது நமக்கு அடுத்ததா யிருக்கிறது.

V. அற்புத அத்தாட்சி முழுமைக்கும் விரோதமாய்ச் சொல்லப்படும் நியாயங்களும் ஆட்சேபனைகளும்.

1 ஆட்சேபனைகளைத் தொடர்ச்சியாய்க் கவனிப்போம்.

ஆட்சேபனை. 1.

அநேகர் எவ்வகையான மதியீனமும் வீணுமான கொள்கையை ஸ்தாபிக்கும் பொருட்டு, மதவைராக்கியம் பாராட்டி, எந்தத் துன்பங்களையும் அநுபவிப்பதுண்டே.

உத்தரவு.

(1) அபிப்பிராய விஷயம்வேறே, சங்கதிவிஷயம்வேறே. விசுவாசத்தைப் பற்றியசாட்சியம், அபிப்பிராயமானது, சத்தியம் என்பதை ரூபகாரப்படுத்த உதவாது; சங்கதி, சத்தியம் என்பதை ரூபகாரப்படுத்த உதவும்.

(2) கிறிஸ்தவர்கள் இந்தச்சங்கதி விஷமாயுள்ள தங்கள் விசுவாசத்திற்கு மிகச்சிறந்த அத்தாட்சியைக் காட்டினார்கள். அதாவது அற்புதங்களைத் தங்கள் ஐம்பொறிகளால் கவனித்தறிந்த சங்கதிகள் என்று நம்பினார்கள்.

ஆட்சேபனை. (2)

மருள்கொண்டு வைராக்கியத்தினால், மார்க்கவிஷயத்தைப் பற்றிச் சொலலப்படும் சாட்சியமானது அங்கீகரிக்கப் படத்தக்க பலமான சாட்சியமல்ல அவ்வித சாட்சியம் கெடுதலாயிருக்கும்.

உத்தரவு.

(1) மருளாகிய மதவைராக்கியம் மனதை விகாரப்படுத்துவதுண்டு என்றாலும் நம்பப்படத்தக்க யாதொருவிஷயத்தைப்பற்றி உண்மையும் திறமையுள்ள சாட்சிகள் சொல்வதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

(2) மருள்கொண்ட இந்த வைராக்கியமானது;

க. சொல்லப்படும் சாட்சியம் எதிரிடை சாட்சியத்தியத்தினால் மேற்கொள்ளப் பட்டாலும்.

உ. சாட்சியமாய்ச் சொல்லப்படும் சங்கதி நம்பத்தகாததா யிருந்தாலும் ஒப்புக்கொள்ளப் படமாட்டாது.

(3) ஆனால் அது நாம் இப்போது கவனிக்கும் காரியத்துக்கு அடுத்ததல்ல, ஏனெனில்;

க. அப்படிப்பட்ட எதிரிடையான அத்தாட்சிசொலப்படவு மில்லை.

உ. காரியம் நம்பப்படத் தகாதது வென்று மெய்ப்பிக்கப்படவு மில்லை.

௩. அற்புதம் நடந்தது நம்பப்படத்தக்கது என்று மூன்றும் அதிகாரத்தில் ரூபிக்கப்பட்டிருக்கிறது.

(4) மதவைராக்கியத்தால் உண்டாகும் செல்வாக்கைப்போல, உலக விஷயங்களிலும், தப்பெண்ணம், கட்சி, வழக்கம்முதலியவை கிரியை செய்வதை அறிவோம். அப்படி யிருந்தபோதிலும், மனிதரிடும் சாட்சியம் உறுதியாக எண்ணப்படுகிறது.

ஆட்சேபனை. (3)

கிறிஸ்துமார்க்கத்தை ஸதாபித்தவர்களிடத்தில் மருளாகிய மதவைராக்கியத்தோடு உபாயதந்திரமும் கலந்திருக்குமாதலால், அவர்கள் சொல்லும் சாட்சியம் நம்பத்தக்கதல்ல.

உத்தரவு.

(1) அப்படிப்பட்ட இலட்சணம் மனிதருக்குள்ளிருப்பதுண்டு. ஆனால் கிறிஸ்துமார்க்கம் அதைக்கண்டிருக்கிறது.

(2) இப்படிப்பட்ட குறிப்புகளை வைதீகவிஷயத்துக்குச் சொல்லக்கூடியது போலவே, லௌகீக விஷயத்துக்கும் சொல்லலாமே. இதால் எல்லாச் சாட்சியமும் நம்பத்தக்கதல்ல வென்று சொல்வதாயிருக்குமே.

(3) ஆட்சேபனையை ஒப்புக்கொண்ட போதிலும், அதினால் காரியம் கெட்டுப்போகாது.

ஆட்சேபனை. (4)

பொய் அற்புதங்களால் மனிதர் (சிலர்) மோசம்போனதுண்டே.

உத்தரவு.

(1) மனிதர் மற்றவிஷயங்களிலும் மோசம் போவதுண்டு.

(2) ஆனால் இதினாலே எல்லாச் சாட்சியமும் பொய்யென ரூபகாரப்பட மாட்டாது.

ஆட்சேபனை (5) கள்ள அற்புதங்களுக்கும் சரித்திர அத்தாட்சியுண்டு.

உத்தரவு.

(1) நியாயப் போக்குக்காக அப்படிவைத்துக் கொள்வோம். அதினால் கிறிஸ்தவ சாட்சியம் நம்பத் தக்கதல்ல வென்று சொல்லக்கூடாதே.

(2) கள்ளநாணய மிருக்கிறதி னிமித்தம், நல்லநாணயத்தைத் தள்ளிவிடலாமா? சாட்சி இருவரில் ஒருவனுடையது பொய்ச்சாட்சி யென்று தீர்மானிக்கப்பட்டதினிமித்தம், மற்றவன் சாட்சியமும் பொய்யென்று சொல்லலாமா?

2. இந்த ஆட்சேபனையின் பேரில் சித்தாந்தம்.

(1) இந்த ஆட்சேபனை, எல்லாமனித சாட்சியத்தையும் பெலவீனப்படுத்துமே யொழிய, அது நம்பப்படத் தகாததென்று ரூபிக்கமாட்டாது. எப்படியும் கிறிஸ்துமார்க்கத்துக்கு நேரான அத்தாட்சியைக் கவிழ்த்து அல்லது கெடுத்துப்போட மாட்டாது.

(2) ஆதிச்சாட்சிகள்.

க. சங்கதிகளை நிதானித்தறியதகுந்த அறிவுள்ளவர்களல்ல வென்றும்.

உ. அவர்கள் பொய்யர் அதாவது நீதிவழுவுள்ளவர்களென்றும் ரூபகாரப்படும் பரியந்தம், அவர்கள் சாட்சியம் உறுதிப்பட்டதாயிருக்கும்.

(3) ஆட்சேபனைகளைப் பார்க்கையில் சாட்சியம் முழுவதுமாய் உண்மைப் பிசகுள்ளதென்று ஆட்சேப

ணக்காரர் நிச்சயமாய்க் கண்டறிந்ததாக ருசு துலங்கவில்லை.

(4) கிறிஸ்து மார்க்கமானது சத்தியத்தையே சொல்ல வேண்டுமென்று பலமாய்க் கற்பித்திருக்கிற நியாயத்தைப் பார்க்கையில், ஆதிசாட்சிகள் தகுந்த அறிவுள்ளவர்களாயும் நீதி நெறியுள்ளவர்களாயுமிருந்தார்கள் என்று காணலாம்.

(5) ஆகவே அவர்கள் சாட்சியம் எல்லாம்மெய். கிறிஸ்து மார்க்கத்தின் உண்மைக்கு அது போதுமானது.

பிரிவு II. தீர்க்கதரிசனத்தினு லுண்டாகிய அத்தாட்சியைப்பற்றி உலக இயலில் விளங்கும் ஒப்புமை நியாயங்களைக்கொண்டு சில காரியங்களைக் கவனிப்போம்.

I. தீர்க்கதரிசனத்தில் ஓர்பங்கு திட்டமாய் நிறைவேறுவதால் உண்டாகும் அத்தாட்சியானது, மற்றப் பங்குகள் கருகலாயிருக்கிற நியாயத்தினுல் பெலவீனப்படாது.

1 ஒரு பிரபந்தத்தின் ஓர்பாகம் எளிதாய் விளங்கும் பாஷையிலும், மற்றப்பாகம் அறிகுறி அட்சரத்திலும் எழுதப்பட்டால், குறிப்புவாசனை அறியாதவர்கள், எழுத்து வாசனையையும் தள்ளலாமா? விளங்காத பங்கைக் கொண்டு, விளங்கும் பங்கு எழுதினவனுக்கு முதலாய்த் தெரியாது என்று சொல்லலாமா?

2. யாதொரு விசேஷித்த தீர்க்கதரிசனம் முற்றிலும் நிறைவேறினதென்று அறிந்து கொள்ளக் கூடாதிருந்தும், அந்தத் தீர்க்கதரிசனம் எவ்வளவாகிலும் நிறைவேறியிருக்கிறதைக் கண்டறிந்து, அந்தத் தீர்க்கதரிசனத்தினுல் குறிக்கப்பட்ட சங்கதிகள் மனுஷர் புத்திக்கெட்டாத சங்கதிகள் என்று அறிந்து உணர்ந்து கொள்ளலாம்.

II. பின் சம்பவிக்கும் விஷயங்களைப்பற்றித் தொடர்ச்சியான அநேக தீர்க்கதரிசனங்கள் அறிவிக்கப்பட்டால், அது புத்திக்கெட்டாத வகையாக நோக்கத்தோடே சொல்லப்பட்ட தென்றறியலாம்.

1. தொடர்ச்சியான தீர்க்கதரிசனங்களைத் தனித் தனியாக வல்ல, பொதுப்பட கவனித்துச் சமரசப் படுத்தி, அதின் பொருளை அறியாததினால், அந்தக் காரியம் கெட்டுப் போகமாட்டாது. அது அபிப்பிராயத்துக் குரியது.

2 கட்டுக்கதைகள் சிலேடை மொழிகளின் பொருளை நாம் அறிந்து கொள்ளும்விதம் இதை ரூபிக்கிறது.

(1) கட்டுக்கதையின் பொதுவான சம்பந்தத்தினால், அதை எழுதினவனின் கருத்து இன்னதைக் கற்பிக்கிற தென்றறியலாம்.

(2) அப்படியே சிலேடை மொழிகளின் பொதுக்கருத்து ஒத்து வருவதில் அவைகளின் பொருளை அறிய லாம்.

3. அப்படியே மேசியாவின் வருகையையும், உலகத்தின் தற் கால நிலைமையையும் பற்றி சொல்லப்பட்ட பூர்வ தீர்க் கதரிசனங்கள் பொதுப்பட நிறைவேறி வருவதைப் பார்க்கில், அந்தத் தீர்க்கதரிசனங்கள் நோக்கத்தோ டே முன் உரைக்கப்பட்டனவென்று ரூபகாரப்படும்.

(1) மேசியாவைப் பற்றிய தீர்க்கதரிசனங்களைக், கிறிஸ்த வர்களைப்போல பூர்வ யூதரும் வியாக்கியானம் செய்தார்கள்.

(2) கடைசிக் காலத்தைப்பற்றிய தீர்க்கதரிசனங்களுக்கு ஆதிக் கிறிஸ்தவர்கள் செய்த வியாக்கியானம் பிற்கால சரித்திரங்களுக்குப் பொதுவாக ஒத்தி ருக்கின்றன.

III. தீர்க்கதரிசனங்களைக்கொண்டு சொல்லும் நியாயமானது.

1 தீர்க்கதரிசனங்கள் நமக்கு விளங்கி யிருக்கிறபடி தீர்க்க தரிசிகளுக்கு விளங்கவில்லை என்றதினாலாவது;

2 அந்தத் தீர்க்கதரிசனங்களுக்குக் கிறிஸ்தவர்கள் ஒப்புக கொள்ளுகிற தாற்பரியத்தைவிட வேறே அர்த்த முண்டென்பதினாலாவது கெடுதல் அடையாது.

1. திருஷ். 1. சிறந்த ஒரு கிரந்தகர்த்தா எழுதிவைத்துப் போன ஜீவிய சரித்திரத்திலிருந்து, சாதாரண வரம்

பெற்ற ஒரு மனுஷன் ஒரு நூலை எழுதுகிறான். அவன் அந்தநூலை எழுதினவனுடைய கருத்தையும் கிரகித்துக்கொள்வான் என்று சொல்லத் துணியக்கூடாது.

2. மற்றப்படி தீர்க்கதரிசிகளே, தீர்க்கதரிசனங்களுக்கு ஆக்கியோன்கள் என்று காணப்படும்.

3. தீர்க்கதரிசிகள் தேவ ஆவியானவரால் ஏவப்படவில்லை; ஆனால் அவர்கள் அவரால் ஏவப்படலாம் என்று வைத்துக் கொண்டாலும், பின்னனை காரியங்கள் விளங்கும். அவையாவன;

(1) தீர்க்கதரிசிகளுக்குத் தெரிந்திருந்ததைவிட, ஆழ்ந்த கருத்து தீர்க்கதரிசனங்களில் அடங்கி யிருக்கலாம்.

(2) அந்த ஆழ்ந்த கருத்து நிறைவேறலாம்.

4. இப்படிப்பட்ட ஆழ்ந்த கருத்து இருந்ததென்பது, வெகு காலத்துக்குப்பின் நடந்த சங்கதிகளினால் ரூபகாரப்படுகிறது.

5. ஆகவே கேள்வி என்ன? தீர்க்கதரிசிகள் தாங்கள் உரைத்தவைகளை அறிந்திருந்தார்களா? என்பதல்ல, அவைகள் நிறைவேறினதா? என்பதே கேள்வி, தீர்க்கதரிசனங்கள், ஏககால சரித்திரங்களைக் குறிக்கும், (திருஷ்தானியேலின் தீர்க்கதரிசனம் அந்தியோரு எபிப்பானு என்பவனைக்குறிக்கும்) என்ற எண்ணத்தினால் ஆதிக் கிறிஸ்தவர்கள் அந்தத் தீர்க்கதரிசனங்கள் பிந்தியும் நிறைவேறும் என்று எதிர்நோக்காதிருந்தார்கள். ஆனால் தற்காலத்தில் அவைகள் நிறைவேறி வருவதைப் பார்க்கில், அந்த வியாக்கியானம் ஒவ்வாதது என்றறியலாம்.

**சித்தாந்தம்.** தீர்க்கதரிசனத்தினால உண்டாகும் சாட்சியம், உண்மையானது, ஆனால் அதின் அருமையை,

1. உத்தம கருத்தோடும்.

2 உண்மையானகீழ்ப்படிதலோடும் ஆராய்ந்தறியவேண்டும.

# இரண்டாம் பங்கு.

கிறிஸ்து மார்க்கத்துக்குரிய நேரான அத்தாட்சிகளையும் சார்பான அத்தாட்சிகளையும் அவைகளால் அம்மார்க்கத்துக் கடுத்ததான ஏகவுதாரணை திரட்டையும் பார்ப்போம்.

முகவுரை. இந்த அத்தாட்சி அவசியமானது. அதைச் சுருக்கமாக மாத்திரம் காட்டக்கூடியது.

1. ஒன்றையொன்று உறுதிப்படுத்துகிற பொருத்தமான நியாயங்களைக் கொண்டு மனுஷருக்கடுத்த சாதாரண காரியங்கள் நடந்தேறி வருகின்றன.

2. இவ்வித அத்தாட்சி சவிஸ்தாரமான நியாயங்களையும் சார்பு நியாயங்களையும் தழுவுகிற படியினால், இவைகளையெல்லாம் ஒருமைப்படுத்திக் கவனிக்கும் போது, உறுதியான உதாரணத் திரட்டாய் விளங்கும்.

3. கிறிஸ்து மார்க்கமானது இயல் வேதத்தை மீளவும் அதிகாரத்தோடே போதிக்கிறதே; அது சுபாவத்திற்கு மேற்பட்ட வகையாய் வெளிப்படுத்தப் பட்டிருக்கிறதா அல்லவா? என்பதைப் பார்க்கவேண்டும்.

I. வெளிப்படுத்தலாக எண்ணப்படுகிற இந்த மார்க்கத்தின் இலட்சணம்.

1 அதின் தன்மை.

(1) அது முழுவதும் சரித்திர சம்பந்தமாயுள்ளது அதிலடங்கிய உபதேசங்களும் தீர்க்கதரிசனங்களும் கட்டளைகளும் உள்ளபடியான சங்கதிகளாம்.

(2) அது அப்படிப்பட்டதாக முக்கியமானது. அதின் நோக்கமும் கருத்தும் ஏகத் தன்மையுள்ளது. உலக சரித்திரத்தைக்கொண்டு அது கடவுளின் உலகமாக காட்டுகிறது.

2. அதின் பொருளடக்கம்.

(1) பொதுப்பட;

க. கடவுள் தம்மை உலக சிருஷ்டிகராகவும் அதற்கு ஆதீனராகவும்;

(க) கடவுள் ஆராதனைக் குரியவர் என்றும்.

(உ) மற்றவைகள் ஆராதனைக்குரியவைக ளல்ல வென்றும் விளக்க வெளிப்படுத்தி யிருக்கிறார்.

உ. மனிதன் பாவத்தில் விழுந்தது முதல் சகலமும் புதுப் பிக்கப்படும் காலம் வரைக்குமுள்ள சரித்திரத்தைச் சுருக்கமாய்க் காட்டு கிறது. அதிலே;

(க) வேதமார்க்கத்தையும் அதின் அநுசாரிகளை யும் குறித்துப் பொதுப்படச் சொல்லியிருக்கிறது.

(உ) வேதமார்க்க விஷயமாய்ச் சம்பந்தப்பட்ட இராச்சியத்துக் கடுத்தவைகளையும் காட்டி யிருக்கிறது.

௩. மேற்சொல்லப்பட்ட வைகளின்பேரில் நாம் கவனிக்கத்தக்க வைகள்.

(க) நீண்டகாலமாய் நடந்த அநேகசங்கதிகள் அதில் அடங்கியிருப்பதால், அது யுக்திக்கும் சாதாரண சரித்திரத்துககும் விரோதமா யிருககிறதென்று ஆட்சேபிக்கலாமே.

(உ) அது பொய்யென்று இன்னமும் ரூபிக்கப்படாததால், அது சத்தியமென அநுமானிக்கலாம். அது பொய்யானால், இதற்குமுன்னே அப்படி ரூபிக்கப்பட் டிருககும்.

(௩) ஏகேச்சுர வாதிகள் வெளிப்படுத்தலானது பொய்யென்று ருசுப்பட்டதாகச் சொல்லுகிறதில்லை.

(2) விசேஷமாக, யூதர்களுடைய சரித்திரம்.

க. கடவுள் அவர்களோடுசெய்த உடன் படிக்கையும், அவர்களுக்காக அவர்செய்த அற்புதங்களும்;

உ. அவர்கள்பேரில் நிபந்தனையாக கூறப்பட்ட ஆசீர் வாதங்களும் சாபங்களும் ;

ங. மேசியாவின் வருகையைப்பற்றிய தீர்க்கதரிசனங் களும் மீட்பின் முயற்சியும், (மேசியாவருவார் என்று எண்ணின சரித்திரசங்கதி, இந்தத் தீர்க்கதரிசனங்களுக்கு வியாக்கியானம்போ லிருக்கின்றன.

ச. மேசியா உலகத்துக்கு வந்ததும், அவர் கிறிஸ்துமார்க் கத்தை ஸ்தாபித்து, அது விர்த்தியடைந்தது மான சங்கதிகள், அதில் காட்டியிருக்கின்றன.

II. வெளிப்படுத்தல் சம்பந்தமாயுள்ள உண்மையான சரித்திர சங்கதிகள்,

1. இந்த வெளிப்படுத்தலினால், கிறிஸ்துமார்க்கம் இப்போது பொதுப்பட பிரபல்லியமாகி வருகிறது.

(1) வெளிப்படுத்தலை நம்பாதவர்களால், இயல்வேதம் பிர பலமாகிறது.

(2) வெளிப்படுத்தலை நம்புகிறவர்களால், இயல்வேதமும் அருள்வேதமும் பிரபல மாகிறது.

சாத்தியம். வெளிப்படுத்தல் மனுஷசாதிக்கு முக்கியமுள் ளதென்பதினாலே நாம் அறிந்துகொள்ள வேண்டிய தாவது.

க. இந்த வெளிப்படுத்தல் ஸ்தாபிக்கப்பட் டிருப்பது, உலகசரித்திரத்தில் மிகவும் முக்கியமுள்ளது.

உ. அது தெய்வீகமுள்ளதென்று சொல்லப்படுவதால், அதை பாரதூரமாயும் உத்தமமாயும் விசாரித் தறியவேண்டும்.

ங. அதைப் பரீட்சித்துப் பார்க்குமுன், அதை நிந்திப் பது சுபாவபக்திக்கு விரோதமாம்.

கவனிப்பு. இயல்வேதத்தைக்குறித்து யுத்தியினால்விளையும் அத்தாட்சியானது வெளிப்படுத்தலாலுண்டாகும் விர் த்திக்கு விகற்பமல்ல.

யுக்தியினாலுண்டாகிய இயல்வேதத்துக் கடுத்த அத்தாட்சி யானது, அந்தஇயல்வேதம் அருள்வேதத்தினால் விர்த் தியடைவதைக் கெடுக்கமாட்டாது.

2. வேதத்தின்முந்தின ஆகமங்கள் மிகப் பூர்வமுள்ளதென்று ஒப்புக்கொள்ளப்பட் டிருக்கிறது.

(1) அதின் காலக்கணிதம்.

க. உலகசரித்திரத்தினால் உறுதி யடைந்திருக்கிறது.

உ. பற்பல சாஸ்திரங்கள் நூதனமாய் கண்டுபிடிக்கப்ப ட்டிருப்பதினாலும் உறுதி யடைந்திருக்கிறது.

(2) அற்புதங்களை நீங்கலாக வைத்துக்கொள்வோம். அப் படி யிருந்தபோதிலும், வேதசரித்திரமே கிறிஸ் துமார்க்கம் முக்கியமானதென்று காட்டுகிறது.

க. எல்லாச் சரித்திரங்களுக்கும் இருக்கிறபடியே, அ திலும் முன்பின்காரியங்கள் தொடர்ச்சியாய் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

உ. அதில் காட்டப்பட்டிருக்கிற சங்கதிகள், அந்தக் காலத்துக்குரியவைகளையும், அந்தச் சங்கதி களுக்கு முன்னுள்ள காரியங்களிலிருந்து தொ டர்ச்சியாய் நடக்கக்கூடியவைகளாயு மிருக் கின்றன.

ங. அதில் காட்டப்பட்டிருக்கிற தன்மை இலட்சணங் கள் இயற்கையானவைகளாயு மிருக்கின்றன.

ச. அதில் காட்டப்பட்டிருக்கிற வருஷங்களும் ஆட் களின்பேரும் உள்ளபடியானவைகள் என்று சொல்லத்தக்கது.

ரு. அதில் காட்டப்பட்டிருக்கிற சங்கதிகள் நாடோடிய ஜீவியத்தில் சம்பவிக்கும் சங்கதிகளுக்கு ஒப்பா யிருக்கின்றன.

சா. ஆகவே இப்படிப்பட்ட குறிப்புகளை நானுவிதமாய்க் காட்டுகிற நீண்டகாலசரித்திரம் உண்மையுள்ள தா யிருக்கவேண்டும்.

எ. இந்தக் குறிப்புகளெல்லாம புதிய ஏற்பாட்டுக்கும் செல்லத்தக்கது. இதுகாரியம் லௌகிக ஆக்கியோன்களால் எழுதப்பட்ட நூல்களினால் உறுதிப்படுகிறது.

அ. அற்புத சங்கதிகளும் சாதாரண சங்கதிகளும் கலந்து எழுதப்பட்டிருப்பதால், சாதாரண சங்கதிகளைப்பற்றிய உண்மையானது, அற்புதசங்கதிகளுக்கும் செல்லத்தக்கது.

3. யூதசாதியார் இருப்பதும் அவர்களுடைய சரித்திரமும் யாவருக்கும் தெளிவான சங்கதி.

(1) மோசேயினால் கொடுக்கப்பட்ட ஏற்பாடு தங்களுக்கு உண்டென்றும், இயல்வேதம், பிரமாணத்தால் ஸ்தாபிக்கப்பட்டதென்றும் அவைகளை அநுசரித்து வருகிறார்கள்.

(2) அவர்கள் ஆஸ்திகத்தை ஒப்புக்கொண்டு அதைப் பாதுகாத்து வருவதினால் ஒருஜாதியாராயிருந்து வருகிறார்கள்.

க. அவர்கள் சிறையிருப்பிலிருந்த போது, அவர்கள் மார்க்கமே, அவர்களைப் பிரத்தியேகமான சனங்களாக இருக்கும்படி செய்தது

உ. அவர்கள் சுயாதீனத்தைக் கையாடி, தேவனைவிட்டு முழுமையுமாய் மருளவிழுந்ததில், அவர்கள் ஆளுகைக்கு முடிவு வந்திருக்கலாம்.

(3) இயல்வேதம் ஸ்தாபிக்கப்பட்டும் பாதுகாக்கப்பட்டும் வந்தவகையானது, ஒருவாறு அற்புத சங்கதிகளின் உண்மையை விளக்குகிறது. ஏனெனில், அந்த அற்புதசங்கதிகள் முன்சொல்லிய ஏற்பாட்டுக்குத் திர்ப்திகரமான பூரணவரலாறுகளாயிருக்கின்றன.

4. மேசியாவின் இராச்சியம் உற்பத்தியாகி பிரபல்லியமானது.

(1) குறிக்கப்பட்ட காலத்தில் மேசியாவாக முன்னுரைக் கப்பட்டவர் வந்துதித்தார்.

(2) முன்னுரைக்கப் பட்டபடி அவர் யூதரால் புறக்கணி க்கப்பட்டார்.

(3) என்றாலும் அற்புத அத்தாட்சியினாலே, அவர் புறஜா தியாரால் ஏற்றுக் கொள்ளப்பட்டார்.

(4) எவ்வகை விரோதமிருந்த போதிலும், அம்மார்க்கம் பிரபல்லியப்பட்டு, வையகத்தின் மார்க்கமாகி வருகிறது.

(5) யூத அரசாட்சி அழிந்து, அவர்கள் நியாய சட்டங்கள் நின்றுபோன போதிலும், அவர்கள் முன்னுரை க்கப் பட்டபடியே (உபா. 28. 37.) பிரத்தியே கமாய்த் திரள் சனக்கூட்டமாய் நிலைத்திருக்கிறா ர்கள்.

ஆட்சேபனை. யூதர்கள் பிரத்தியேகமான சனமாயிருப்பது, அவர்கள் மார்க்கபோதனையால் கலியாண விஷயமாக மற்றவர்களோடு கலக்கக்கூடாதென்ற கட்டளையினா லும், போஷனவிதிவிலக்குகளினாலும் இருப்பதேயல் லாது, அதிலே அற்புதசெயல் இல்லையே.

உத்தரவு. 1. இது ஒவ்வாமையான ஆபாசமாயிருக்கிறது. ஆட்சேபனைக்காரர் சொல்லியது யூதர்கள் தற்காலத் தில் பிரத்தியேகமான சனமாயிருப்பதைக் காட்டுகி றது. ஆனால் காரியம் அதல்ல, 2. தீர்க்கதரிசனங்க ளுக்கும், அவர்கள் பிரத்தியேகமாயிருப்பதற்குரிய இசைவுக்குறிப்பே காரியம். அவர்கள் பிரத்தியேகமா ன சனமாயிருப்பது இயற்கையாயிருக்கலாம், ஆனால் இசைவுக்குறிப்பானது அற்புத செயலாயிருக்கிறது.

(6) இந்தச் சங்கதிகளினாலும் இசைவுக்குறிப்புகளினாலும், மற்றத் தீர்க்கதரிசனங்களும் இனிமேல் நிறை வேறத்தக்கது என்று எண்ணத்தக்கதாயிருக்கி றது. திருஷ். இந்தச்சனம் திரும்பவும் தங்கள்

சுயதேசத்தில் கூட்டிச் சேர்க்கப் படுவார்கள். மேசியாவின் இராச்சியம் உலகமெங்கும் ஏக இராச்சியமாய் ஸ்தாபிக்கப்படும்.

III. தொகுத்துரையும் சித்தாந்தமும்.

1. தொகுத்துரை.

(1) வேதாகமத்தின்பொருள் ஒத்திடப்பட்டும் பரீட்சிக்கப்பட்டு மிருக்கிறது.

(2) ஒப்புக்கொள்ளப்படுகிற சங்கதிகளைப் பத்துப்பங்காகச் சுருக்கிச் சொல்லலாம்.

க. இயல்வேதம் ஸ்தாபிக்கப்பட்டிருப்பது முக்கியமாய் வேதாகமத்தினுலேயாம்.

உ. வேதாகமம், மிகப்பூர்வ முள்ளதென்று ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது.

ங. அதின் காலக்கணிதமும் சாதாரண சாத்தியமும் முழுவதுமாய் நம்பப்படத் தக்கவைகள்.

ச. யூதர்கள் விசேஷித்த கருத்தின்படி தேவனுடைய சனங்களா யிருக்கிறார்கள்.

ரு. சனங்கள் எதிர்நோக்கிக் கொண்டிருந்த காலத்தில் தம்மை மேசியாஎன்று சொன்னவர் வந்தார்.

சு. அவர் யூதரால் புறக்கணிக்கப்பட்டாலும், அற்புத சாட்சியினுலே புறஜாதியாரால் ஏற்றுக்கொள்ளப்பட்டார்.

எ. இந்த மார்க்கமானது பலத்த இடையூறுகளையும் அறுத்து, சர்வசனத்துக்கும் ஏற்றமார்க்கமாகி யிருக்கிறது.

அ. யூதருடைய ஆளுகை அழிக்கப்பட்டு, அந்தச்சனம் உலகமெங்கும் சிதறடிக்கப்பட் டிருக்கிறார்கள்.

கூ. அவர்கள் இன்னும் பிரத்தியேகமான சனமாய்ப் பெருகியிருப்பது, சில தீர்க்கதரிசனங்கள் பிர

த்தியட்சமாய் நிறைவேறியிருப்பதைக் காட்டு கிறதுமன்றி, மற்றத் தீர்க்கதரிசனங்கள் நிறை வேறும் என்பதையும் காட்டுகின்றது.

௧0. இவ்வுலகத் தற்காலநிலைமையும் கிறிஸ்துசபையின் நிலைமையும் தீர்க்கதரிசனங்களுக்கு ஒத்திருக் கிறது.

(3) தீர்க்கதரிசனத்தையும் அதின் நிறைவேறுதலையும் ஒன் று சேர்த்துப்பார்க்கையில், அது கடவுளாலுண் டானதென்பதற்குப்போந்த அத்தாட்சியைப் பிறப்பிக்கும்.

2. சாத்தியம்.

அற்புதசங்கதிகள் உண்டென்பதற்குப் போந்த அத்தாட்சி யிருக்கிறது. அந்த அத்தாட்சியானது அவிசுவாசி களும் கவலையற்றவர்களும் பாரதூரமாக யோசிக்கிற வர்களும் நடந்துகொள்ளவேண்டிய விஷயத்துக்குப் போதுமானது.

(1) அற்புதங்களைப்பற்றிய சரித்திர அத்தாட்சியானது, மறுக்கப்படக் கூடாததாயிருக்கிறது. ஆனால் ஏகேச்சுரவாதிகள் அது போதுமானதல்லவெ ன்று சொல்வார்கள்.

(2) தீர்க்க தரிசனமும் அது நிறைவேறின சங்கதியும் ஒத்திருப்பது உண்மையான விஷயம். ஆனால் ஏகேச்சுரவாதிகள், அது தற்செயலான சம்ப வம் என்று சொல்லலாம்.

(3) ஏகேச்சுரவாதிகள் துணைக்காரணங்களால் உண்டாகு ம் அத்தாட்சியின் பலத்தைச் சூட்சபுத்தியின பாவனை என்பார்கள். ஆனால் பாரதூரமாய் யோ சிக்கிறவர்கள், அநுமான அத்தாட்சிகளிருந்தா லும் அப்படி எண்ணார்கள்.

(4) பிரத்தியேகமான அநுமான அத்தாட்சிகள் அதிகப் படுமாகில் பாரசிந்தனை யுள்ளவர்கள் ஒவ்வொரு

தீர்க்கதரிசன நிறைவேறுதலையும் கவனித்தறிய வேண்டும்.

(5) நமது நடக்கைக்கு உதவியாகவல்ல, அபிப்பிராய முண்டாக எதிரிடையான காரியங்களையும் குறிப்பிடுகிறது நல்லது. அதினால் நாம் சங்கதியின் முக்கியத்தை விவேகத்தினால் அறிந்து, நாம் நடக்க வேண்டிய வழியைத் தெளிவாக்கலாம்.

(6) தெளிவாய் அறியப்பட்ட இந்தச் சங்கதிகளுக்கு நியாயம் சொல்லப்படாத விஷயத்தில், கிறிஸ்துமார்க்கம் சத்தியம் என்பது நிச்சயமாகும்.

(7) இந்த அத்தாட்சியின் தன்மையைப்பார்க்கில் ஒரோர் அற்ப சொற்பபாகத்துக்கு ஆட்சேபனை சொல்லப்பட்டாலும், எல்லா அத்தாட்சிகளையும் திரட்டிப்பார்க்கையில், கிறிஸ்துமார்க்கமானது சத்தியமார்க்கம் என்று உண்மைபெறும்.

---

## 8. அதிகாரம்.

உலகஇயலில் விளங்கிய ஒப்புமை நியாயத்தைக் கொண்டு வேத உண்மையைத் திருஷ்டாந்தப் படுத்துகிறது தகுதியல்ல வென்னும் ஆட்சேபனைகள்.

சிலர் தாங்கள் இன்னதைப்பற்றி ஆட்சேபிக்கிறோம் என்பதை அறியப் பிரயாசப்படாமல் ஆட்சேபிப்பதுண்டு.

1. கருத்தாளிகள் முதல் பார்வையிலே இப்புஸ்தகம் விசேஷித்த ஆட்சேபனைகளுக்குரிய தென்று எண்ணுவார்கள்.

2. கருத்தற்றவர்கள் அதாவது யோசனையில்லாமல் தீர்மானிக்கிறவர்களும், நிதானித்தறியாமல் குற்றஞ் சாட்டுகிறவர்களும் ஆட்சேபிக்கிறது முண்டு. ஆகவே அவர்கள் சொல்லக்கூடிய ஆட்சேபனைகளைத் தொடர்ச்சியாய்ப் பார்ப்போம்.

ஆட்சேபனை (1) அருள்வேதத்திலுள்ள சம்சயங்களை இயல்வேதத்திலுள்ள சம்சயங்களோடு ஒத்திட்டு, ஒப்பு

மை நியாயத்தினுல் அந்தச் சம்சயங்களுககுச் சமாதானம் சொல்வது தகாது; அது அற்பமான நியாயம், இயலிலும் அருளிலுமுள்ள சம்சயங்கள் முழுவதையும் நிவிர்த்திப்பதே தகுதி.

உத்தரவு.

(1) பொதுப்பட உவமான சம்பந்தத்தைக் கொண்டு மறுமொழி.

க. நாம் அறிந்தமட்டும் ஆட்சேபனைக்காரர் சொல்வது நியாயத்துக்குப் பொருந்தாது. தேவதன்மையையும் அவருடைய செயலையும் முழுவதுமாய்க்கிரகித்து அறிவது கூடாதகாரியம்.

உ. இந்தப் போங்கான நியாயமானது, இனமான காரியங்களுக்கும் எப்போதும் செல்லத்தக்கது, அதாவது அறியப்பட்ட காரியங்களைக் கொண்டு, அவைகளுக்கு இனமான காரியங்களுக்கு நியாயஞ் சொல்லலாம்.

ங. இந்தப் போங்கானது அற்பமாக எண்ணப்படலாம்; பூரண அறிவோடே ஒப்பிட்டுப்பார்க்கையில், அப்படித்தோன்றும். மனுஷருக்கடுத்த ஒவ்வொரு விஷயமும் அப்படியே யிருக்கிறது. திருஷ. வைத்தியமுறைமை, அதைப்பூரண அறிவினத்தோடே ஒப்பிட்டுப்பார்க்கில், அது அற்பமென்று சொல்லக்கூடாதே.

(2) விசேஷமாக ஏகேச்சுரவாதிகளுக்குச் சொல்லப்படும் நியாயம்.

க. ஏகேச்சுரவாதிகள் வெளிப்படுத்தலுக்கு விரோதமாய்ச் சொல்லும் ஆட்சேபனைகள், இயல்வேதத்துக்கும் தர்ம ஆளுகைக்கும் செல்லத்தக்கன என்று காட்டலாம்.

உ. இவ்வித ஆட்சேபனைகள் இருந்தபோதிலும், இயல்வேதமும் தர்ம ஆளுகையும் சத்தியமென

ஏகேச்சுரவாதிகள் ஒப்புக்கொள்ளுகிறார்கள். அவர்கள் அருள்வேதத்துக்கு விரோதமாய் எடுத்துக்காட்டும் ஆட்சேபனைகளுக் கொப்பாய் அவைகளு மிருக்கின்றன என்று காட்டலாம்.

ந. இயல்வேதத்துக்கு விரோதமாய்ச் சொல்லப்படும் ஆட்சேபனைகளுக்கு உலக அநுபோகத்தால் விளங்கும் காரியங்களைக் கொண்டும், இயலின் சம்பவங்களைக் கொண்டும் சமாதானம் சொல்லப்படும். அப்படிப்போல அருள் வேதத்துக்கு விரோதமாய்ச் சொல்லப்படும் ஆட்சேபனைகளும், இயல்வேதத்துக்கு விரோதமாய்ச் சொல்லப்படும் ஆட்சேபனைகளுக்கு ஒப்பாயிருக்கிறது என்று உத்தரவாக எடுத்துக் காட்டலாம்.

ச. இந்தப் புஸ்தகத்தின் முதல் பங்கில் இயல்வேதத்துக்கு விரோதமாய்ச் சொல்லப்படும் ஆட்சேபனைகளுக்கு உத்தரவு சொல்லி யிருக்கிறது. இரண்டாம் பங்கில் அதே ஆதாரத்தின் பேரிலும் அநுமானத்தின் பேரிலும் அருள்வேதத்துக்கு விரோதமாய்ச் சொல்லப்படும் ஆட்சேபனைகளுக்கு உத்தரவு சொல்லி யிருக்கிறது.

ஆட்சேபனை. (2) மனுவுக்குரிய இம்மைக்கடுத்த லௌகிக விஷயங்களில் தோன்றுகிற சங்கடங்கள் மறுமைக்குரிய பரத்துக்கடுத்த வைதிகவிஷயங்களிலும் தோன்றும் என்று சொல்லி, தர்மத்தை நிலைநிறுத்துவது தகுதியல்ல.

உத்தரவு.

(1) வைதிகவிஷயம் நடக்கையைப் பற்றினது. இம்மைக்கடுத்த காரியங்கள் பயன்படும்படி விவேகத்துடன் ஜாக்கிரதையா யிருப்பதுபோல, மறுமைக்

குரிய காரியங்களும் பயன்படும்படி விவேகத்து டன் அதிக ஜாக்கிரதையா யிருக்கவேண்டும்.

(2) வாய்க்குமோ வாய்க்காதோ என்று சம்சயப் படத்தக்க உலக காரியங்களில் மனுஷர் முயற்சி செய்வார்களானால், நிச்சயமாய் வாய்க்கத்தக்க பரம காரியங்களில் விடாமுயற்சி செய்யவேண்டியது அதிக நியாயமாயிருக்கிறது.

ஆட்சேபனை (3) தேவசெயலையும் கடத்தலையும்பற்றி அருள் வேதத்திலுள்ள சம்சயங்கள் இயல் வேதத்திலும் உண்டென்று நியாயஞ் சொல்வது தேவநீதியையும் தயவையும் விளங்கும்படி செய்யக் கூடிய தகுதியான நியாயமல்ல.

உத்தரவு.

(1) தெய்வகுணமும் செயலும் நியாயமாயும் நீதியாயு மிருக்கிறதென்று தெளிவிக்கிறது, இந்தப் பிரபந்தத்தின் நோக்கமல்ல. மனுஷர் செய்யவேண்டிய கடமைகளைச் சொல்வதே இதின் நோக்கம்.

(2) தெய்வசெயலை முழுவதுமாய் அறிந்திருந்தால், அது பூரண தர்மத்துக்குத் திருஷ்டாந்தமாயிருக்கும் என்று அறியலாம்.

(3) மனுஷர் செய்யும் நல்வினை தீவினைக்குத் தக்கதாய், இம்மையிலே கடவுள் பலனளித்துத் தண்டிக்கிறார். அப்படியே அவர் மறுமையிலும் செய்வார் என்று விளங்குகிறது.

(4) வேதவிஷயங்கள் பாவனைகளாயிராமல், நடந்த சரித்திர சங்கதிகளாயிருக்கின்றன.

(5) தர்மத்தின் தன்மையானது, தகுதியோ அல்லவோ என்று விசாரியாமல், (அதைக்குறித்து ஆட்சேபனைச் செய்யக் கூடாதாயினும்) அது நம்பிக்கைக் குரியதோ அல்லவோ என்பதைக் குறித்து ஆட்சேபனை செய்யலாம்.

(6) **வேதவிதிகளை நடக்கையினால் விளங்கப் பண்ணவேண்டும்.**

(7) ஒப்புமை நியாயமானது தேவஞானத்தையும் நீதியையும் தயவையும் குறித்துச் சொல்லப்படும் ஆட்சேபனைகளுக்கு நேரான நியாயமாயிராமற் போனாலும், கடவுளின் ஞானம் நீதிமுதலியவைகள் நம்பப்படத்தக்கவைகளல்லவென்று நோக்கத்தோடே சொல்லப்படும் ஆட்சேபனைகளுக்கு நேரான நியாயமா யிருக்கும்.

ஆட்சேபனை (4) இயலிலும் அருளிலும் உண்டாயிருக்கிற சம்சயங்களுக்கு ஒப்புமை நியாயம் எவ்வளவு சொன்னாலும், அதுமனதை ரம்மியப் படுத்தத்தக்கப் போதுமான நியாயமல்ல,

உத்தரவு.

(1) அது ஒருவாறு சரியென்றாலும், நமது ஜீவனார்த்த விஷயங்களுக்குரிய எந்தக் கட்டுப்பாடும் ஏற்பாடும் பூரணநிச்சயத்தைக் கொடுக்கத்தக்க பிரமாணத்தின் பேரில் நாட்டப்படாமல், பொது அநுமானப் பிரமாணத்தின் பேரில் நாட்டப்பட்டிருக்கிறது. அப்படியே வேதவிஷயத்தைப் பற்றிய ஏற்பாடு மிருக்கிறது.

(2) வேதமானது மனிதகுணத்தையும் உத்தமத்தையும் பரீட்சிக்கும்பொருட்டு அருளப்பட்டிருக்கிறது. பூரண நிச்சயமிருந்தால பரீட்சைக்கு இடமிராது.

(3) வேதம் நமது பரீட்சைக்கும் தேறுதலுக்கும் தக்கவைகளை மாத்திரம் வெளிப்படுத்துகிறது. அவைகளைக் கைக்கொண்டு நடக்கவேண்டிய அத்தாட்சியும் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. உலககாரியங்களில் சித்தியுண்டாக எப்படி புத்தியைக் கையாடி நடந்துகொள்ளுகிறோமோ, அப்படியே தர்மவிஷயங்களிலும் நடந்து கொள்வது உத்தமம்

ஆட்சேபனை (5) சம்சயமுள்ள ஒப்புமை நியாயத்தினால் மனுஷர் இம்மைக்கடுத்த பலனையும் இன்பத்தையும் நாடாமல், மறுமைக்குரிய பலனையும் நாடித் தேடுவதற்கு ஒப்புமை நியாயமானது போதுமானதல்ல.

உத்தரவு.

(1) இந்த ஆட்சேபனை மார்க்கவிஷயத்துக்குப் பொருந்தாது.

க. வேதமார்க்கமானது பரீட்சைக்கும் சன்மார்க்க நடக்கைக்கும உரிய நோக்கமாய்க் கொடுக்கப்பட்டிருக்கிறது.

உ. வேதமார்க்கத்துக் கடுத்த அத்தாட்சியானது மனிதர் கைக்கொண்டு நடக்கும்படிக்கேற்ற விதிகளுக்குப் போந்ததாயிருக்கிறது.

ரு. மனிதர் பக்திமார்க்கமாய் நடக்க அது ஏவிவிடமாட்டாதென்று ஆட்சேபிப்பது காரியத்துக்கு அடுத்ததல்ல.

ச. வேதமார்க்கமானது, அதின் உண்மையைப்பற்றி போதுமான அத்தாட்சியை மனிதருக்குத் தெளிவாய்க் காட்டியிருப்பதில அதின்நோக்கம் நிறைவேறி வருகிறது.

(2) இந்தப் பிரபந்தத்தின் சரியான நோக்கத்தைப் பார்க்கையில் ஆட்சேபனை பொருந்தாது.

க. மனிதர் எப்படிப்பட்டவர்களா யிருக்கிறார்கள், அவர்கள் என்னபடியான கிரியைகளை நடப்பிப்பார்கள் என்று காட்டவல்ல.

உ. மனிதர் எப்படிப்பட்டவர்களா யிருக்கவேண்டும், அவர்கள் என்னவிதமாய் கிரியைகளை நடப்பிக்கவேண்டும் என்று காட்ட நோக்கமாய் எழுதப்பட் டிருக்கிறது.

(3) எப்படியும் இப்பிரபந்தத்துக்கு ஒருவாறு பலமுண்டு, அது மனிதனை ஏவக்கூடியது. ஆகவே இப்பிர

பந்தம் எழுதப்பட்ட நோககம் ஒப்புக்கொள்ளப் படத்தக்கது.

1. இந்தப் பிரபந்தத்தின் தன்மையைப்பற்றிய சிலகுறிப்பு களைச் சொல்வோம்.

(1) தர்மநிலைத் தகுதி சுயாதீனசித்தம் என்ற சத்திய ங்கள், அருள்வேதங்களுக் குரிய நியாயங்களா யிருந்தபோதிலும், பட்லர் அவைகளின்பேரில் நியாயங்களை எடுத்துரைக்காமல், பிறர் சொல் லும் நியாயங்களைக் கொண்டே அவர்கள் எடுத் துககாட்டும் ஆட்சேபனைகள் சரியல்லவென்று ரூபித்திருக்கிறார்.

(2) விதிவசமுண்டென்று வைத்துக்கொண்டாலும், அது வேதத்திலும் விளங்கிய தர்மநிலைநியாயங்களை நிராகரிக்கமாட்டாது.

(3) வேதமார்க்கம் சரித்திர சம்பந்தமாயுள்ள தென்று நியாயங்களை எடுத்துக்காட்டி,

க. கிறிஸ்துமார்க்கமும் அதின் அத்தாட்சியும் நடந்த சரித்திரமா யிருக்கிறது.

உ. இயல வேதமும் அப்படியே சரித்திர சம்பந்தமுள் ளது, ஏனெனில் உலகத்தை ஆண்டு நடத்து கிற தர்ம அதிபதி ஒருவர் இருக்கிறார் என்று விளக்கப் பட்டிருக்கிறது.

(4) கருத்துப்பொருள் சத்தியத்துக்கும், சங்கதிக்குமுள்ள வித்தியாசம்

க. கருத்துப்பொருள் சத்தியமானது, அதை ஒப்புக் கொள்ளுகிறவர்களின் மனதுக்கு புறநீங்கலாக வைத்துத் தன்னந்தனியப் பார்த்தால், அது தன்னிலே சத்தியமுள்ளதா யிருக்கும். சங்க தியோ அதை ஒப்புக் கொள்ளுகிறவர்களின் மனதுக்குச் சம்பந்தப்படப் பார்த்தால் சத் தியமென விளங்கும்.

திருஷ். முக்கோண கோணங்கள் இரண்டு நேர் கோணங்களுக்குச்சரி என்பது கருத்துப்பொருள சத்தியம். அவைகள் அப்படி இருப்பதாக நமக்குத் தெரிவது சத்திய அல்லது உள்ள சங்கதி. சீனி நமது நாவுக்கு தித்திப்பாயிருக்கிறது உள்ளசங்கதி, சீனி தன்னிலே தித்திப்பா யிருக்கிறது கருத்துப்பொருள் சத்தியம்.

உ. இந்த உவமானத்தைக்கொண்டு பார்க்கில், கடவுள் ஓர் வகையைவிட்டு இன்னோர் வகையாய் நடத்துவது தகுதி என்று முன்னர் நிதானித்துத் தீர்மானிப்பது கருத்துப்பொருள் சத்தியம். கடவுள் ஓர் வகையைவிட இன்னோர் வகையாய் அதாவது பூரண தர்மத்தோடு நடத்துவது உள்ளசங்கதி.

ந. கடவுள் தர்ம அந்தக்கரணங்களை நமக்குத் தந்திருக்கிறார் என்பதை அநுபோகத்தால் அறிவோம். நமது செய்கைக்குத் தக்கதாய் சிட்சை இரட்சை செய்யப்படும் என்று அது நமக்குத் தெரியக்காட்டுகிறது. இது உள்ளபடியான சங்கதி, ஆகவே, கடவுள் தீவினைக்குத் தண்டனையையும் நல்வினைக்கு நன்மையையும் அருளுவதும் உள்ள சங்கதியாம்.

க. தேவ செயலின் தர்மத்தகுதியானது போந்த முடிவான நியாயமா யிருந்தபோதிலும், பட்லர் அந்த நியாயத்தை எடுத்து உபயோகிக்கவில்லை.

உ. நமது தர்ம அந்தக்கரணத்தால விளையும் நியாயத்தைக் கொண்டு அவர் நியாயங்களை எடுத்துரைத்திருக்கிறார். அது நமது

போதனைக்கும் நடக்கைக்கும் எதிர்ககப் படாத போந்த நியாயமாயிருக்கிறது.

2. இந்தப் பிரபந்தத்தில் சொல்லிய நியாயங்களின் பலத்தைப்பற்றிய சில குறிப்புகள்.

(1) இயல் வேதத்தைப்பற்றி;

க. மனுஷ சுயாதீனமும் தர்ம நிலையின் தகுதியுமாகிய இவ்விரண்டு நியாயங்களும் உண்டென்று ஒப்புக் கொள்ளுகிறவர்களுக்கு ஒப்புமை நியாயமானது, வேத உண்மையை ஸ்தாபிக்கும் சேர்க்கையும் உறுதியுமான நியாயமாய்க் காணப்படும்.

உ. மேற்படி இரண்டு நியாயங்களையும் ஒத்துக்கொள்ளாதவர்களுக்கு ஒப்புமை நியாயமானது, கிறிஸ்துமார்க்க உண்மைக்குச் சுயமான புதிய நியாயமாய்த் தோன்றும்.

(2) அருள் வேதத்தைப்பற்றி;

க. ஒப்புமை நியாயமானது கிறிஸ்து மார்க்கம் ஒரு முறைமை என்றும், அதற்கு விரோதமாய்ச் சொல்லப்படும் ஆட்சேபனைகள் நிலை நிற்காதென்றும், அது மார்க்க அத்தாட்சிகளை உறுதிப்படுத்துகிறதென்றும் விசுவாசிகளுக்கு விளங்கப் பண்ணும்.

உ. ஒப்புமை நியாயமானது கிறிஸ்து மார்க்கம் நம்பப் படத் தக்கதென்றும், அதை மெய்யல்லவென்று ரூபகாரப்படுத்தத் துணிவது வீணும் விபரீதமுமென்றும் அவிசுவாசிகளுக்குத் திருஷ்டாந்தப் படுத்தும்.

(3) ஒப்புமை நியாயத்தைப்பற்றி.

க. அது உள்ளபடி தகுமான நியாயம்.

(க) சிலர் அது உதவாத நியாயமென்று சொல்லலாம்.

(உ) சிலர் அது விபரீதமென்று பரியாசம் பண்ணலாம்.

உ. மார்க்கமானது சரித்திர சம்பந்த முள்ளது.

(க) ஒப்புமை நியாயமானது சரித்திர சம்பவங்களை உறுதிப்படுத்துகிறதா யிருக்கிறது.

(உ) இயல் வேதத்தையும் அருள் வேதத்தையும் பற்றிய தர்மமானது, அநேக விஷயங்களைக் கொண்டிருக்கிற படியால், அவ்விஷயங்கள் ஒப்புமை நியாயத்தினுல் உண்மை யென்று விளங்கி தர்மநிலையின் பட்சத்தில் சாட்சிசொல்லி, இயலுக்கும் அருளுக்கு முரிய தர்மத்தை நாட்டும்.

(௩) ஏகேச்சுர வாதிகள் இந்த ஒப்புமை நியாயத்தைக் கையாடி அருளை அநுசரிக்கும்படி அவர்களை ஏவிவிடும்.

---

# முகவுரை.

மார்க்கமே உலகத்தில் சிறந்தது. அநேகர் கிறிஸ்து மார்க்கத்தை விசாரித் தறியாமல் மோசம் போகிறார்கள்.

உலகத்திலுள்ள வஸ்துக்கள், ஞானமுள்ள கர்த்தர் உண்டென்றும் அவர் நீதியாய் ஆண்டு நடத்துகிறார் என்றும் காட்டுகின்றன.

புத்திசித்தமுள்ள மனுஷர் அவரை வழிப்பட்டு அவருடைய விதிவிலக்குகளை அநுசரித்து, பிறர்விஷயத்தில் நீதியையும் இரக்கத்தையும் கையாடி நடப்பது அவர்கள் கடமை. இப்படி நடப்பது இயற்கைத்தர்மமாம்.

இயற்கை அறிவுக்கு மேலான அறிவாகிய வைதிக அறிவை விலக்குவதே அருள்வேதம். அது அற்புதம் தீர்க்கதரிசனம் முதலான அத்தாட்சிகளால் உண்மையென்று விளங்குவதால், அதை அநுசரித்து நடப்பது மனுஷருக்குரிய வைதீகதர்மமாம்.

கிறிஸ்து மார்க்கத்தின் உண்மைக்குப் போதுமான அத்தாட்சியிருக்க, விரோதிகள் அதை யெண்ணாமல் நடப்பது, தர்மநிலையையும், உலகஇயலையும் வேதஅருளையும் அறியாதவர்கள் என்று தங்களைக் காண்பிக்கிறார்கள்.

கிறிஸ்து மார்க்கம் மனுஷரின் சிற்றறிவுக்கு எட்டாத காரியங்களை வெளிப்படுத்தி, அவர்கள் சிற்றின்பங்களுக்கு இடங்கொடாதிருக்கிறபடியால், அவர்கள் அதை வேண்டா வெறுப்பாய் விரோதிக்கிறார்கள்.

இப்படி விரோதித்து ஆட்சேபிக்கிறவர்களுக்காக இந்நூல் இயற்றப்பட்டிருக்கிறது.

இதின் முதல் பங்கில் இயல் வேதத்துக்கு விரோதமாய்ச் சொல்லப்படும் ஆட்சேபனைகளுக்குச் சமாதானம் சொல்லப்பட்டிருக்கிறது. முதல்பங்கிலே,

உலகஇயலில் விளங்குகிற காரியங்களுக்கும் நமது அநுபவத்தில் விளங்குகிற காரியங்களுக்கும் உண்டாயிருக்கிற சம்பந்தத்தி

ஞலே நாம் நீதியுள்ள காரணகர்த்தாவின் ஆளுகைக் குட்பட்டிருக்கிறோம் என்றும்;

இம்மையில் அவர்நடத்துகிற நடக்கையின் ஒப்புமையினலே மறுமை உண்டென்றும்;

மறுமையில் நல்வினைக்குப்பலனும், தீவினைக்குத் தண்டனையும் அளிக்கப் படுமென்றும்;

இம்மையில் தொடங்கினது மறுமையில் பூரணப்படும் என்றும்; சிருஷ்டிகளாகிய மனுஷர்கள் சிருஷ்டிகர்த்தாவை வழிப்பட்டு நடக்கவேண்டும் என்றும் கண்டிருக்கிறது. "மனுஷருடைய ஆவி கர்த்தர் தந்ததீபமாயிருக்கிறது. அது உள்ளத்திலுள்ளவைகளை யெல்லாம் ஆராய்ந்து பார்க்கும்" என்றும் வேதம்சொல்லுகிறது. அந்த ஆவியாகிய தெளிந்த புத்தியே இயல்வேதத்துக்கு ஆதாரம்.

இரண்டாம் பங்கில் அருள்வேதத்தையும் அதிலடங்கியதர்ம விஷயங்களையும் பற்றிச்சொல்லிய ஆட்சேபனைகளுக்குச் சமாதானம் சொல்லியிருக்கிறது. எப்படியெனில்;

முதலாம் அதிகாரத்தில், கிறிஸ்து மார்க்கத்தைக் கடவுள் அநுக்கிரகித்திருப்பது மனுஷரின் இகபரசுகத்துக்குரிய முக்கியமான நன்மையா யிருக்கிற தென்று காண்பித்திருக்கிறது.

இரண்டாம் அதிகாரத்தில், அருள்வேதத்தில் அற்புதசெயல் கண்டிருக்கிறதால், அது இயலுக்கு விரோதம் என்று சொல்லுகிறவர்களின் ஆட்சேபனைகளுக்குச் சமாதானம் சொல்லியிருக்கிறது.

மூன்றாம் அதிகாரத்தில், அருள் வேதத்தில் இன்னின்ன காரியங்கள் வெளிப்பட்டிருக்கும் என்றுமுன்னர் கருதி நிதானிக்க நாம் திராணியற்றவர்கள், அதில் மனுஷர் புத்திக்கெட்டாத அநேக காரியங்கள் வெளிப்பட்டிருப்பதால் அவைகள் ஆட்சேபனைகளுக்கு இடங்கொடுக்கும் என்று ஒப்புமை நியாயத்திஞல் திருஷ்டாந்தப் படுத்தியிருக்கிறது.

நான்காம் அதிகாரத்தில், வேதஉபதேசங்களாகிய தேவஞானம், நீதி, தயைமுதலியவற்றிற்குரிய ஆட்சேபனைகளைக் கவனித்து, உலகஇயலில் அநேக விஷயங்கள் நமக்கு விளங்காமலிருக்கிறதென்றும், ஒரு பங்கைமாத்திரம் கொண்டு, முழுமையையும் நிதானிப்பது இயலாதது போல, தெய்வ எத்தனம் முழுமையையும் கண்டறிந்தவர்கள் போலயூகிப்பது மதியல்லவென்றும், கடவுள் பல எத்தனங்களைக் கொண்டு உலகஇயலை நடத்துகிறது போல வேதஅருளையும் நடத்துகிறார் என்றும ரூபித்திருக்கிறது.

ஐந்தாம் அதிகாரத்தில், இரட்சண்யத்தை நடத்துகிற ஒரு மத்தியஸ்தர் உண்டென்று அருள்வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிற சத்தியம், உலகஇயலில் நடக்கிற பற்பல காரியங்களினாலே விளங்குகிறதென்று காண்பித்திருக்கிறது. வியாதிகளை நீக்க பல அவிழ்தங்களிருப்பது போல, பாவநிவிர்த்திக்கும் எத்தனம் கடவுளால் நியமிக்கப்பட்டிருக்கும் என்றும் "தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனையடையும்படி அவரைத்தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார். தேவகுமாரன் தாம்பூரணரான பின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற யாவருக்கும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணரானார்" என்று வேதத்தில் காட்டியிருக்கிறதே அந்தஎத்தனம் என்றும் விளக்கியிக்கிறது.

ஆறும் அதிகாரத்தில், வேதம் யாவருக்கும் ஒரே வேளையில் அருளப்படவில்லை என்றும், அதுகடவுளால் அருளப்பட்டதென்பதற்குப்போதுமான அத்தாட்சி இல்லையென்றும் சொல்லப்படும் ஆட்சேபனைகளை எடுத்துக்காட்டி அவைகளுக்குச் சமாதானம் கூறப்பட்டிருக்கிறது. கடவுள் வரங்களைப்பலருக்குப் பலவிதமாய் அருளுகிறார் என்றும், லௌகீக விஷயங்களில் சம்சயமும் சந்தேகமும் நம்மைச் சூழ்ந்திருக்கிறது போலவே வைதீக விஷயங்களிலும் உத்தமம் விளங்கி, நாம் பரீட்சிக்கப்படும்

பொருட்டு அநேக சங்கடங்கள் நேரிடுகிற தென்றும், நமக்கிருக்கிற வேத அத்தாட்சி போதுமானது; அதைக் கைக்கொண்டு நடக்கவேண்டியது நமது கடமையென் றும் காட்டியிருக்கிறது.

ஏழாம் அதிகாரத்தில், அருள்வேதத்திற்குச் சரித்திரசம்ப வம் தீர்க்கதரிசனம் அற்புதம் மறு ஜனன குணப்படுதல் முதலான சிறந்த நேரான அத்தாட்சிகள் உண்டென் றும், இவ்வளவு பலமான திருஷ்டாந்தங்களுள்ள வேதம் மெய்யென்று விளங்கவேண்டிய தென்றும், நியாயங்கா ட்டியிருக்கிறது.

எட்டாம் அதிகாரத்தில், உலக இயலை நாட்டி, அதைக்கொ ண்டு வேத அருளைத் திருஷ்டாந்தப் படுத்துகிற ஒப்பு மை நியாயமானது, போதுமான தகுந்த நியாயமல்ல வென்று ஆட்சேபிக்கிற வர்களுக்குச் சமாதானம் சொ ல்லி யிருக்கிறது.

கிறிஸ்து மார்க்கத்துக்கு இப்படிப்பட்ட பலத்த அத்தாட்சி கள் இருப்பதால், அது மெய்யான மார்க்கம் என ரூபகாரப்படு கிறது. அந்த மார்க்கத்தை நிந்தித்து அவமதிக்கிறவர்கள் போக் குச் சொல்ல இடமில்லை கடவுள் அவர்களுக்கு அருளும், ஒளி யும் அநுக்கிரகித்து, அவர்கள் இருளையும் மருளையும் நீக்கி, சத்தி யத்தைக்கண்டறிந்து, அதின் வழிகளில் நடந்து இகபரசுகம் அடை யும்படி கிருபைசெய்வாராக.